www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
டிச.14–20,1997
11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 235

## காத்திருக்கும் போழிவு



## சூதாட்ட அரசியல் சூத்திரம்

இராஜதந்திரி



–எழுதுவது பாலகுமாரன்

## புதிய தொடர் ஆரம்பம்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கொலையை விட கொடிது

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

சர்வதேச மன்னிப்புச் சபை
விடுத்த அறிக்கை
அரசுக்கு தித்திக்கவில்லை.
நடுநிலை தவறியுள்ளதாக
குற்றம் சாட்டியுள்ளது
அரசாங்கம்!

"யாழ் குடாநாட்டில்
படையினரால் கைதாகி
காணாமல் போனவர்களில்
600ற்கு மேற்பட்டோர்
கொல்லப்பட்டு விட்டனர்!"
மன்னிப்புச் சபை
உறுதிப்படுத்தியுள்ள
உண்மை அதுதான்!

அது பொய் என்றால்
படையினரால் கைதாகி
காணாமல்போன பட்டியலில்
உள்ளவர்களில் சிலரையாவது
அரசாங்கம்
உயிரோடு காண்பிக்கட்டும்!

உலகத்தின்
கண்களுக்கு முன்னர்
கொண்டுவந்து நிறுத்தட்டும்!

உயிரோடு இருந்திருந்தால்
அவ்வாறுதான்
அரசு செய்திருக்கும்!

எனவே- மன்னிப்புச் சபை
விடுத்த அறிக்கை
முற்றிலும் உண்மை
என்பது தெளிவு!

உண்மைகள் ஏன்
கசக்க வேண்டும்?

இன்றைய
ஆட்சியாளர்கள்தான்
நேற்றைய
எதிர்க்கட்சியினர்!

முன்னைய
ஆட்சிமீதும் அன்று
மன்னிப்புச் சபையினர்
குற்றம் சாட்டினர்!
அதனை- அன்று
பொதுஜன முன்னணியினர்
தித்திப்போடு வரவேற்றனர்!

ஆட்சியில் இருந்தால்
ஒரு பேச்சு
எதிர்க்கட்சியில் இருந்தால்
இன்னொரு பேச்சு!

இங்கே
கோலங்கள் மாறும்போது
கொள்கைகள் மாறுவதும்
வழக்கமாகி வருகிறது!

உண்மையில்
மன்னிப்புச்சபை அறிக்கை
தமிழ மக்களுக்கும்
பூரண திருப்தியானதல்ல!

தமிழ் மக்களுக்கு எதிரான
மனித உரிமை மீறல்கள்
பலவற்றை
மன்னிப்புச் சபை அறிக்கை
வெளிப்படுத்தவில்லை!

மனித உயிர்க் கொலை
மட்டும்தான்
மனித உரிமை மீறலல்ல!

உளவியல் இம்சைகள்,
தனிமனித சுதந்திரங்கள்
கட்டுப்படுத்தப்படல்
போன்றவையும்
மனித உரிமை மீறல்களே!

கொழும்பில்
திரையரங்கில் சினிமா
பார்க்கக்கூட இடையூறு!

படம் பார்த்துக் கொண்டிருக்கையில்
சோதனை நடத்தவேண்டிய
அவசியம் ஏன் வந்தது?

இவையெல்லாம்
திட்டமிட்ட ரீதியில்
உளவியல் வதைக்கு
தமிழர்கள் உள்ளாவதையே
உணர்த்தி வருகின்றன!

ஆடுகள், மாடுகள்போல
கைதானவர்களை
வாகனங்களில் ஏற்றி
கொண்டு செல்கிறார்கள்!

இரவு உடையோடு
வீடுகளில் உள்ள
பெண்களைப் பிடித்து
பொலிஸ் நிலையத்துக்கு
கொண்டு செல்கிறார்கள்!

வவுனியாவில்
அகதி முகாம்களில்
வருடக் கணக்காக தமிழர்களை
அடைத்துப் போட்டிருக்கிறார்கள்!

இவையெல்லாம்
அப்பட்டமான
மனித உரிமை மீறல்கள்தான்!

உயிர்க் கொலையைவிட
உளவியல் வதை
மிகவும் கொடூரமானது!

மனித உரிமை என்பது
இங்குள்ள தமிழர்களுக்கு
ஏட்டுச் சுரைக்காய்தான்!

இவையெல்லாம்
மன்னிப்புச் சபையின்
கவனத்தில் ஏன் செல்லவில்லை!

மன்னிப்புச் சபை அறிக்கை
அரசுக்கு
ஆழமான அடியல்ல!
இதற்கே ஏன்
பொறுக்காமல் துள்ளவேண்டும்?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்.
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சமாதானம் பண்ணுங்கள்!



திரளான ஜனங்கள் திரண்டிருப்பதைக் கண்டார். இயேசு மலைமேலேறி பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தின் அடிப்படை என்ன?

மக்களில் பாக்கியவான்கள் யார்? என்பதே, பாக்கியவான்களே பாரில் தேவை என்பதை பரமன் வழிச்சென்ற பாக்கியவான் இயேசு நன்கறிவார். பாக்கியவான்களின் போற்றுதற்குரிய குணங்களை பவ்வியமாகக் கூறுகிறார் இயேசு: "சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஆவியில் எளிமையுள்ளவர்கள், துயரப்படுகிறவர்கள், நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள், இரக்கமுள்ளவர்கள், இதயத்தில் சாந்தமுள்ளவர்கள் எல்லாரும் பாக்கியவான்கள்" என்று சொன்னவர் இன்னும் பலர்பற்றி சொல்கிறார். ஆனால்-

இன்று நமது நாட்டுக்கும் ஏன் உலகுக்கே தேவையானவர் ஒருவரைப்பற்றியும் கூறுகிறார். ஆம்!

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்." ஆம். சமாதானம் பண்ணுகிறவர்கள்தான் 'தேவனின் புத்திரர்' என்கிறார். நம்மில் எத்தனை பேர் அந்த நல்ல நிலையைப் பெறமுடியும். சிந்திக்க வேண்டிய ஒன்று. போட்டி பொறாமை, பொல்லாங்கு, புறங்கூறல் போன்றவற்றை தவிர்த்து நல்லவைமூலம் நற்சமாதானத்தை வளர்ப்போம்.

இன்னும் பாக்கியவான்கள் என்பவரின் குணங்கள் பற்றி ஏராளம் கூறியுள்ளார். மத்தேயு ஐந்தாம் அதிகாரம் வாசித்திடல் வேண்டும்.

ஏ.பி.வி.கோமஸ்.

## புறம் பேசாதீர்கள்!

மனிதர்கள் கூட்டமாகக் கூடி விட்டால் அங்கு யாரையாவது குறை கூறி பேசி விடுகின்றனர், ஆண், பெண் இருபாலாரும் அடுத்தவரைப்பற்றி குறிப்பிட்டு புறம் பேசுவது வாடிக்கையான செயலாக மாறிவிட்டது. இப்படி அடுத்தவரை குறை கூறிப் பேசுவதை இஸ்லாம் கடுமையாகக் கண்டிக்கிறது.

"புறம் பேசுதல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று நபியவர்கள் கேட்டார்கள். அதற்கு நாங்கள்: "அல்லாஹ்வும் அவனது தூதரும் நன்கு அறிந்தவர்கள்" என்று பதிலளித்தோம் அப்போது நபி (ஸல்) அவர்கள் (புறம் பேசுதலைப் பற்றி) கூறினார்கள்.

"உனது சகோதரன் எதை வெறுப்பானோ அதை அவன் விசயத்தில் கூறுவதாகும்" "அப்போது நான் கூறுவது எனது சகோதரனிடம் இருந்தால்?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்). நீ சொல்வது உனது சகோதரனிடத்தில் இருந்தால் நீ புறம் பேசியவனாய் கருதப்படுவாய். "நீ சொல்வது அவனிடத்தில் இல்லை எனில் நீ அவதூறு கூறியவனாய் கருதப்படுவாய்" என்று கூறினார்கள்.(அறிவிப்பவர்:- அபூஹுரைரா(ரலி)

"புறம் பேசுவது தனது இறந்த சகோதரனின் மாமிசத்தை புசிப்பதனைப் போன்றது" என்று திருக்குர் ஆன் கடுமையாக எச்சரிக்கின்றது. புறம் பேசுதலை நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும்போது, "புறம் பேசுபவனின் வார்த்தையை கடலில் போட்டால் இதனுடைய கடுமையின் காரணத்தால் கடல் நீரின் தன்மையே மாறிவிடும்" என்று கூறினார்கள்.

எனவே புறம் பேசுதல் கொடிய பாவமாகும். புறம் பேசுதலை நாமும் தவிர்க்க வேண்டும். அடுத்தவர்கள் பேசினால் அதை நாம் தடுக்கவும் வேண்டும் அல்லது அந்த இடத்தை விட்டு சென்றுவிட வேண்டும்.

எம்.எம்.முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல.232

### பரிசுக்குரிய கவிதை

**விளைச்சல்**

**எங்கள் மண்ணில்**
**விதைத்த தெல்லாம்**
**குண்டு விதைகள்!**
**முளைத்த தெல்லாம்**
**யுத்தப் பயிர்கள்!**

வீரசிங்கம் ஸ்ரீதரன்-மல்லிகைத்தீவு.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**'நிலை'யாமை**

நிலம் கொத்தி
நீர் பாய்ச்சி
நாற்று நட்டு
கதிர் அறுத்து
வரும் வரை
வயலிருக்கும்
நீயிருப்பாயா?

சுபா வரன்-கண்டி.

**அன்றும் இன்றும்!**

கழனிகளில் கதிரறுத்து
களிப்புடனே பொங்கவிட்டு
நலமுடனே இன்பமுற்ற
காலமது!
உழைப்பதற்கு வழியுமின்றி
உறங்க ஓர் இடமுமின்றி
குடும்பமுடன் துயரமுறும்
காலமிது!

மல்லிகா பத்மநாதன்-பசறையூர்.

**மரண நிலம்**

விதைத்த நெல்லின்
அறுவடை நுகர்வீரா?
புதைத்த வெடிகள்
உயிரை நுகருமே!

ஹைலன்ஸ்
மதன்ராஜ்-நுவரெலியா.

**யாழ்ப்பாணம்**

அன்று
நந்தவனம்!
இன்று
நொந்தவனம்
நாளை?

நபீஸா நஸ்புள்ளா-
நிலாவெளி, இக்பால் நகர்.

**படுகொலை நாட்டிலே...**

பனை மரத்தின் வேலிக்குள்ளே
பழய தோட்டக் காணியை
பண்படுத்தும் பாவிகாள்:
பள்ளம் என்று கிண்டாதீர்
பதுங்கி இருக்கும் குண்டுகள்
'படார்' என வெடித்திடும்
படுகொலை நாடிது!

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

**உழைப்பு**

உழைக்காது இருந்தால்
இகழ்ந்து பேசுது உலகு!
அதனால்:
அகழ்ந்து பார்க்கிறோம்...
அகப்படுவதெலாம்
எலும்புக்கூடாச்சே!...

செல்வி ப்ரியநேசி-
களுத்துறை (தெற்கு)

**போர்!**

மாடு கட்டிப் போரடித்து
மாளாத எம் வயல்கள்
காடு கட்டிப் போனதற்கு
காரணமும் போர்தானோ

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

**அழைப்பு**

போர்ப்பயிர் நட்டு,
செங்குருதி பாய்ச்சி,
சிவந்துபோன தேசத்தில்,
மண்ணோடு மனங்களையும்,
பண்படுத்த வாருங்கள்!
அமைதிக்கானவிதை தூவி,
அழகான யுகம் காண!

ஆரையம்பதி-இதயம்.



**அன்றும்! இன்றும்!!**

கார் மேகம் மழை பொழிய வயல்
நெல் விளைந்தது-அன்று!
போர் மேகம் குண்டு பொழிய நிலம்
பாழ் விழுந்தது-இன்று!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

**பாட்டாளியின் கரங்கள்**

வெஞ்சமரும் பஞ்சமும்
அண்டி வந்த போதினிலும்,
துஞ்சிடாத மனமு முண்டு;
சோர்ந்திடாத கரமு முண்டு!

பஷீரா முஹைடீன்- பாலையூற்று, திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.235



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 20.12.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.235,
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



'நான்' என்ற மமதையுடன் மல்லுக்கு நிற்கும் அமெரிக்காவின் முகமூடியையும்; விலைபோகும் ஐ.நா.சபையையும் வெளிச்சம் போட்டுக் காண்பித்த, காதிலை பூ கந்தசாமியாருக்கு நன்றிகள். ஒரு சிறிய ஒற்றுமை: தூரே நோக்கும்போது (புகைப் படங்களில்) சதாம் உசேனும், பிரபாகரனும் ஒருவர் போலவே தோற்றமளிக்கின்றனர்.

அப்துல் முனாஃப்,
கொட்டராமுல்லை.

அன்பின் முரசே!

'இலக்கிய நயம்' தரும் ரசிகனுக்கு எம் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடு, அடுத்து அற்புதன் எழுதும் 'அரசியல் தொட'ரும் அற்புதமாய் இருந்தது. இன்னும் உன் வளர்ச்சி ஓங்கட்டும். ரசிகனின் முகவரியைத் தருவாயா?

நாச்சியாதீவு, பர்வீன் ஏ.ஆர்.ரியாஸ் அஹமட்,
ஏ.ஆர்.பர்சாத் அஹமட்.

### சண்டித்தனம் கூடாது

அன்பு முரசே!

காதிலை பூ கந்தசாமியின் 'சாத்தானும் சதாம் உசேனும்', சர்வதேச சண்டியனான அமெரிக்காவின் திமிரைப் படம் பிடித்துக்காட்டியமை படுஜோர். அகன் கபிலனின் 'வரவுகளும் செலவுகளும்' கோ.பாரதியின் 'தயக்கம்' ஐ.ரதியின், 'ஈசியாய் ஒரு கொலை' ஆகிய சின்னஞ்சிறிய கதைகள் அருமையிலும் அருமை.

இரா.வினோத்குமார், அட்டன்.

அன்பின் முரசே!

பூலானின் தொடரில் 'பூலானின் அதிரடித் தாக்குதல்' மெய்சிலிர்க்க வைக்கின்றது. டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவு' மனதை உருக வைக்கின்றது.

செல்வி ம்ஸீனா மன்சூர், மூதூர்.

இனிய முரசே!

எந்தவொரு பெண்ணுக்குமே வரக்கூடாத நிலமைதான் பூலானுக்கு ஏற்பட்டது. எந்த நிலமை வந்தும், முன் வைத்த காலை பின் வைக்காத பூலானின் மன உறுதியினை நான் மனப்பூர்வமாக பாராட்டுகினறேன். மல்லாவைக் கொன்ற, காம வெறி பிடித்த மிருகங்களை பூலான்தேவி வேட்டையாடுவது நியாயம்தான்!

ரி.சுசீலா, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

அன்பு முரசே!

நீ தாங்கி வரும் அம்சம் அத்தனையும் தூள். முரசுக்கு நிகர் முரசுதான். உன்னைப் பார்த்து இலாயக்கற்றவர் பொறாமைப்படுவர். கோபப்படுவர். பட்டும். உன்வழி தனிவழி, உன் பணி தமிழுக்கு பணி. திக்கெட்டும் பரவட்டும், உன் தெவிட்டாத தேன் அம்சங்கள்.

முரசன்பன் எம்.அருள், கொழும்பு-03.

### ஏமாற்றுகிறார்கள்

தீர்வுத் திட்டம் எவ்வாறாக இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அதன் பின்னரும், 'காலம் வரும். கருத்துரைப்போம்' என்று தமிழ்க் கட்சிகள் கூறுவது ஏமாற்றுத்தான். இராஜதந்திரியின் அலசல் மொத்தமும் உண்மை.

வி.மரியதாஸ், வவுனியா.

### முறிவு வைத்தியம்

அன்புள்ள முரசே! அரசு, தமிழ்க்கட்சிகள் என பல தரப்பட்ட திசைகளிலும் உனது விமர்சனக்கணைகள் பாய்கின்றன. இதுவரை எந்தவொரு கட்சிக்கோ, அதன் பிழையான போக்குகளுக்கோ நீ பிற்பாட்டுப் போட்டதும் இல்லை. அதனால் தூற்றுவோர்.தூற்றுமாறு தூண்டப்படுவோர் எண்ணிக்கை கூடுதலாகவே இருக்கும். காய்க்கும் மரம் கல்லெறிபடத்தான் செய்யும். ஆயினும் வாசகர் நாம் முட்டாள்களல்ல. யார் எதற்காக, ஏன் பொருமுகின்றனர் என்பதை அறிவோம். தொடரட்டும் பணி. சமீபகாலமாக பாராளுமன்ற மாயைகளுக்கு முறிவு வைத்தியம் செய்யும் விமர்சனங்களைக் கண்ணுற்றேன். அவை தொடரவேண்டும். வாழ்த்துக்கள்.

சி.தங்கவடிவேல், (முன்னாள் சுங்க அதிகாரி) கொழும்பு-09.

### போலிப் போராட்டம்

முரசே! மக்கள் போராட்டங்கள் தொடர்பாக நீ எடுத்துரைத்தாய்! போராட்டம் என்ற பெயரில் பிரபலம் தேடுவதற்கு சிலர் புறப்பட்டுவிட்டனர்போல் உள்ளது. அதனால் உண்மையான போராட்டங்களுக்கும், போலியான போராட்டங்களுக்கும் இடையேயான வித்தியாசத்தையும் இராஜதந்திரியார் இம்முறை விளக்க வேண்டும்.

இ.சேதுராமன், கண்டி.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**

### பாசமா வேசமா?

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் சார்பாக இப்போது பலர் கதைக்கிறார்கள். ஏனைய பகுதிகளில் காணாமல் போனோர் தொடர்பாகவும் ஏன் இந்த அரசியல்வாதிகள், பிரமுகர்கள் பேசுவதில்லை? காணாமல் போனோர் சார்பாக அவர்களது உறவினர்கள் போராட ஆரம்பித்திருக்காவிட்டால், அது தொடர்பாகவும் பேசியிருக்க மாட்டார்கள். மக்கள் மேல் பாசத்தோடு பேசுபவர்கள் என்றால், எங்கு தமிழ் மக்கள் துன்பப்பட்டாலும் அது பற்றி தார்மீகக் கோபப்பட வேண்டும். மக்கள் மேல் பாசம் போல வேசம் போடுபவர்களுக்கு அக்கறை இருக்காதுதானே.

ஏ.சிவபாதம், மட்டக்களப்பு.

### தாமத வழக்குகள்

அன்புள்ள ஆசிரியருக்கு;

கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி, படுகொலையான வழக்கு 'முரசு' சுட்டிக்காட்டியது போன்றே இழுத்தடிக்கப்படுகிறது. கிருஷாந்தி வழக்கு மூலம் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வருவது வரவேற்கப்படக்கூடியதே. ஆனால், இலங்கையில் பாலியல் வல்லுறவுக் குற்றங்களுக்கு தகுந்த நீதி விசாரணை நடப்பதாக உலகை நம்பவைக்கவும் அரசினர் முனைவதும் உண்மையே.இல்லையெனில் ஏனைய பாலியல் வல்லுறவு வழக்குகள் தாமதமாவது ஏன்?

கோ.சிற்றம்பலம், கொழும்பு-11.

### பச்சைக் கொமாண்டோக்கள்

பச்சைக் கொமாண்டோக்கள் திரும்பிய இரகசியத்தை, இராஜதந்திரி நன்றாகவே அலசி ஆராய்ந்து வெளியிட்டிருந்தார்.அமெரிக்காவின் கருத்துக்கு செவி சாய்த்து தாளம் போடும் அரசு விழித்துக் கொள்வது எப்போது? இதனால் மூக்குடையப் போவது யாரென்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மக்களின் தேவைதான், அரசின் சேவையாக இருக்க வேண்டும். ஆனால் நம் நாட்டில் நடப்பதோ....?

பாத்திமா அஸ்மியா, புத்தளம்.

### அரச கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணியை மக்கள் மறந்து வெகு காலமாகிவிட்டது. இப்பொழுது அக் கூட்டணி உறுப்பினர்கள், அரச கூட்டணியின் முன்னணி பேச்சாளர்களாகவும், தமிழர்களின் நலன்களை நசுக்கும் செயல்திட்ட ஆலோசகர்களாகவும் மாறிவிட்டார்கள் என்பதை முரசு மூலம் தமிழ் மக்கள் அறிந்துகொண்டனர். தமிழையே மறந்துவிட்ட அவர்களெல்லாம் 'தமிழர் விடுதலை' என்ற நாமத்தை தங்களுடன் வைத்துக் கொள்வதற்கு தகுதியில்லாதவர்களாகி விட்டார்கள்.

எஸ்.இளையவன், கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# 'அரசியல் தற்கொலைச் சான்றிதழ்'

## தீர்வுப் பொதி பற்றி புலிகள்

இலங்கை அரசின் தீர்வுப் பொதியை மாவீரர் தின உரையில் பிரபாகரன் நிராகரித்திருந்தார் என்பது தெரிந்ததே.

அதனையடுத்து வெளியாகியுள்ள 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் அரசின் தீர்வுப்பொதியை ஏற்றுக் கொள்வது, தமிழ் இனத்தின் தற்கொலை சான்றிதழை ஏற்பதற்கு சமமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாதத்திற்கான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"ஆயுதப்போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தாலும்,தமிழரின் இனப் பிரச்சனையை பேசித் தீர்க்க புலிகள் தயாராகவே இருந்து வருகின்றனர்.

ஆனால், தமிழினத்தின் தேசிய அடையாளங்களைச் சிதைத்து விட முயலும் தீர்வு யோசனைகளுடனும், ஆயுத எழுச்சியை மழுங்கடித்து, தமிழினத்தை அடிமை கொள்ள முயலும் சதித்தனமான திட்டங்களுடனுமே சிறீலங்கா அரசாங்கங்கள் பேச்சு மேசைக்கு வருகின்றன.

இவ்விதம் தீர்வு பொதிகள் என்ற பெயரிலான தமிழ் இனத்தின் அரசியல் தற்கொலைச் சான்றிதழ்களில் புலிகள் கண்ணைமூடிக் கொண்டு கையெழுத்திட வேண்டும் என்று வெளிநாட்டு அரசாங்கங்கள் எதிர்பார்ப்பது நீதியான செயல் அல்ல" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசு புலிகள் இயக்கத்திற்கு விதித்த தடைபற்றியும் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

"அமெரிக்காவுக்கு தேசிய நலன்கள் இருப்பது போலவே, எமது மக்களுக்கும் தேசிய இன அபிலாசைகள் உண்டு.

கிளின்ரன் நிர்வாகம் ஆலோசனை கூறவிரும்புவது போல, பேச்சுவார்த்தை மூலம் எமது அரசியல் உரிமையைப் பெறுவதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இரத்தம் சிந்தாமல் எமது மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற முடியுமாயின், அதற்காக அதிக மகிழ்ச்சியடைவது புலிகள் இயக்கமாகத்தான் இருக்கும்.

ஆனால் அது சாத்தியமா? என்ற கேள்வியை ஈழத் தமிழரின் அரசியல் வரலாறு எழுப்புகிறது.

போரைத் தவிர்த்துவிட்டு சமாதானவழி முறைமூலம் இனப்பிரச்சனையை பேசித் தீர்க்கவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் உண்மையில் விரும்பியிருந்தால், சிறீலங்கா அரசைத்தான் அது நிர்ப்பந்திக்க வேண்டும்" என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர். ■

# தலைநகருக்குள் குண்டு வெடிப்புக்கள்

## விடுதலைப் புலிகள் பத்திரிகை விபரிப்பு

தலைநகரக்குண்டு வெடிப்புக்கள் பற்றி 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

"போரை நடத்துபவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் போர் அனர்த்தங்களை தங்கள் கண்களால் காணும்போதுதான், போரை நடத்துபவர்களை தட்டிக்கேட்கும் சூழல் உருவாகும்.

வியட்நாம் போரின்போது வியட்நாம் மக்களின் அவலத்தையும், அமெரிக்க வீரர்களின் துயரத்தையும் அமெரிக்க புகைப்படப் பிடிப்பாளர்கள் அமெரிக்க மக்களுக்கு தெரிவித்தனர். அதன்பின்னர்தான் அமெரிக்க நிர்வாகத்தை அமெரிக்க மக்கள் தட்டிக்கேட்டனர்.

இலங்கை அரசு போர் வெற்றி பற்றிய செய்திகளையே சிங்கள மக்களுக்கு வழங்கி வருகின்றது. ஆயினும் அது ஒரு மகிழ்ச்சியான கற்பனை என்ற செய்தியை தலைநகரக் குண்டுகள் சிங்கள மக்களுக்கு புலப்படுத்தலாம். அல்லது புலப்படுத்த மேலும் சில காலம் எடுக்கலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை கொழும்புக் குண்டுகளால் சிறீலங்காவின் அரச பொருளாதாரம் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

சிறீலங்கா அரசைப் பொறுத்தவரை அதனது தலைநகரின் பாதுகாப்பிலேயே, வடக்கு கிழக்கு போரின் தலைவிதி தங்கியுள்ளது என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் போர் முயற்சிக்கு முதுகெலும்பாக விளங்கும் நிதிவளத்தை திரட்டும் அரசவர்த்தகம் கொழும்பை மையமாகக் கொண்டே செயற்படுகிறது.

எனவே கொழும்பில் வெடிக்கும் குண்டுகள் அரசின் இராணுவக் கொள்கைக்கு எதிராக எய்யப்படும் குண்டுகளே என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்." இவ்வாறு கொழும்பு குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் பத்திரிகை தனது கண்ணோட்டத்தில் மேலும் தெரிவித்துள்ளது. ■

# குண்டுவெடிப்பால் சந்தேகம்

மட்டக்களப்பு பொதுச் சந்தையில் 9.12.97 அன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் மக்களிடம் எழுந்துள்ளன.

உடனடியாக கிடைத்த தகவலின்படி குண்டுவெடிப்பால் ஐந்துபேர் பலியாகினர். 61 பேர் காயமடைந்தனர். சந்தைக்கு சென்ற நான்கு பொலிசாரும் படுகாயமடைந்தனர்.

குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களில் பலர் சந்தை வியாபாரிகளாவர். பொதுமக்கள் அதிகமாக கூடும் நேரமாகப் பார்த்தே குண்டு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அதிகமாக பலியாக வேண்டும் என்ற நோக்கம் தான் பிரதானமாகத் தெரிகிறது என்று மக்கள் பேசிக்கொண்டனர். முன்னரும் இச் சந்தைப் பகுதியில் குண்டு வெடிப்புக்கள் நடை பெற்றுள்ளன. குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு செயல் இழக்கவும் செய்யப் பட்டன.

இச் சம்பவம் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டாலும் கூட, சரியான காரணத்தை இதுவரை உறுதிசெய்ய இயலாமல் உள்ளது. ■

# தமிழ்க் கட்சிகளின் விருப்பம் நிராகரிப்பு!

## தேர்தலை நடத்த அரசு உறுதி

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று உள்ளூராட்சி தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது. அத் தேர்தல்தான் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறதல்லவா. அது தவறான தகவல்.

ஏனெனில், முன்னர் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது மன்னார் மற்றும் வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் நடத்தப் படுவதாகவே அறிவிக்கப்பட்டது.

ஆனால் இம்முறை, யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி பச்சிலைப் பள்ளியிலும் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, யாழ் குடாநாட்டில் சுமுக நிலை ஏற்பட்டுவிட்டது என்று உலக அரங்கில் எடுத்துக் காட்டுவதற்கான தேர்தலே இதுவாகும்.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தேர்தலை சற்றுப் பின்போடுமாறு கேட்டிருந்தன. வேட்பாளர் பட்டியல் தயாரிக்க போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலேயே தமிழ்க் கட்சிகள் அவ்வாறு கோரின. எனினும் அரச தரப்பு அக்கட்சிகளின் கருத்தை கேட்க முன்வரவில்லை.

எவ்வாறெனினும் யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பது என்று அரசு தீர்மானித்துவிட்டது. எனவே தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகள் ஏற்கப்படப்போவதில்லை என்றே தெரிகிறது. ■

# கூட்டணியின் திசை திருப்பல்

## சுட்டிக்காட்ட தவறப்பட்ட காரணங்கள்

யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை அரசாங்கம் அறிவித்திருந்தது. இக் கால கட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்த முடிவு செய்தமை தொடர்பாக அரசாங்கம்மீதுதான் தமிழ்க் கட்சிகள் கண்டனம் தெரிவித்திருக்க வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், உள்ளூராட்சித் தேர்தலில் தாம் போட்டியிட முன்வராமைக்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதுதான் காரணம் என்பதை பிரதானமாக கூறியுள்ளனர்.

அரசாங்கத்தை நேரடியாக கண்டிக்க திராணியில்லை என்பதையும், அரசின் நோக்கங்கள் அம்பலமாகிவிடக்கூடாது என்பதில் கூட்டணியினர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பதையுமே கூட்டணியின் அறிக்கை பிரதிபலிக்கிறது.

யாழ் மாவட்டத்தில் தொடரும் ஊரடங்கு, பரவலான சோதனைச் சாவடிகள், தினமும் நடைபெறும் தேடுதல் நடவடிக்கைகள், சுற்றி வளைப்புக்கள், போக்குவரத்து, மற்றும் அன்றாட வாழ்க்கையில், ஏனைய பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்தை தனியான பகுதியாக பிரித்து வைத்துள்ள பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் போன்றவற்றின் மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுகிறது.

ஏனைய தமிழ்க் கட்சிகளும் இவற்றைச் சுட்டிக்காட்டவில்லை. கூட்டணியினரோ, அவற்றைச் சுட்டிக்காட்டாததோடு, ஏனைய தமிழ்க் கட்சிகள்மீது பழிபோட்டு அரசாங்கத்தை பாதுகாத்துள்ளனர்.

1989ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆயுதம் தாங்கியபடி இந்தியப்படையுடன் நின்ற இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். ஆகியவற்றுடன் இணைந்து பொதுப்பட்டியலில் போட்டியிட்டவர்கள் கூட்டணியினர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# குரல் கொடுப்போருக்கு தகுதி உண்டா?

## சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி

(கொழும்பு நிருபர்)

யாழ் குடாநாட்டில் கைதாகி பலியானவர்கள் பற்றி மட்டும் பேசுகிறோம். கொழும்பில் குண்டு வெடிப்பில் பலியாகும் சிங்கள மக்கள் மட்டும் மனித உயிர்கள் இல்லையா? கொழும்பில் உள்ள தமிழ்ச் சங்கங்களும், கொழும்பில் உள்ள தமிழர்களும் எப்போதாவது இதனைக் கண்டித்திருக்கிறார்களா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க செயலதிபர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

ரூபவாஹினித் தொலைக்காட்சியில் 7.12.97 அன்று இடம்பெற்ற 'கேள்விகளால் ஒரு வேள்வி' நிகழ்ச்சியிலேயே அவ்வாறு கேள்வி எழுப்பி இருந்தார்.

யாழ் குடாநாட்டில் படையினரால் கைதாகிய அறுநூறுக்கு மேற்பட்டோர் பலியாகி விட்டதாக மனித உரிமை சபை வெளியிட்டுள்ள அறிக்கை பற்றி உங்கள் கருத்து என்ன? என்ற கேள்விக்கே மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

காணாமல் போனோருக்காக இன்று குரல் கொடுக்கும் இயக்கங்கள் தமக்கு அந்தத் தகுதி இருக்கிறதா என்பதை முதலில் நினைத்துப் பார்க்க வேண்டும். குறிப்பிட்ட இயக்கங்கள் நிலைகொண்டுள்ள பகுதிகளில் மனித உரிமைகள் தம்மால் மதிக்கப்படுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் கூறினார். ■

# கணேசபுரத்தில் தாக்குதல்

'ஜயசிக்குறுய்' படைத்தரப்பினர் மீது மன்னகுளம் பகுதியில் 04ம் திகதி புலிகள் நடத்திய தாக்குதலின்போது பலியான 37 விடுதலைப்புலி உறுப்பினர்களில் ஆறு பேரின் உடல்கள் முள்ளியவளை மாவீரர் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர். அவர்களது விபரம் வருமாறு:

இன்பம் (சுரேஸ்), லெஃப்டினன்ட் வல்லவன், வரதன், லெஃப்டினன்ட் பொன்னம்பலம், லெஃப்டினன்ட் திலகன், மதிநிலவன்.

அதேவேளை, வவுனியாவின் முன்னரங்க காவல் நிலைகளில் ஒன்றான கணேசபுரம் படைநிலைமீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் ஊடுருவல்களை தடுக்க காவல் நிலைகளின் முன்னால் முட்கம்பி வேலிகளை அமைத்து வருகின்றனர் படையினர். ■

# இருப்பிடமின்றி தவிக்கும் மக்கள்

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையை அடுத்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் புகலிடமின்றி கடும் மழையிலும் வெள்ளத்திலும் அல்லல் படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கூடாரங்கள் அமைத்து மரங்களின் கீழ் குடியிருந்த போதும் தரை வழியாக ஓடும் மழைநீரிலிருந்து தப்புவது எப்படி என்பதே கேள்வி.

சுகாதாரச் சீர்கேடுகளால் தொற்று நோய்களும் வெகுவாகப் பரவிவருவதால் பெரும் எண்ணிக்கையானோர் மன்னார் பெரு நிலரப்பரப்பிற்குள் வரத் தலைப்படுகின்றனர். அவ்வாறு செல்வோர் மீது புலிகள் கட்டுப்பாடு விதிப்பதாகத் தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க, மன்னாரில் நிரம்பி வழியும் மக்கள் கூட்டத்தினரைப் பராமரிப்பதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றதாம். அங்கு குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவது வழமையான ஒன்றாகும்.

இருப்பிடங்களில் இருந்து அகன்ற மக்கள் எங்கு சென்றாலும் தீராத கஸ்டங்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது. ■

# அமெரிக்காவில் மாவீரர்நாள்

புலிகள் இயக்கத்தை அமெரிக்க அரசு தடைசெய்தமையால் அங்கு புலிகள் தொடர்பான நிகழ்வுகள் நடைபெற இயலாது என்று கூறப்பட்டது.

ஆயினும், புலிகளின் மாவீரர்தின விழா நிகழ்ச்சிகள் அமெரிக்காவில் நடந்துள்ளன. அமெரிக்க நியூயோர்க் மாநகரில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் நடந்தன.

புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்று அமெரிக்க அரசு செய்த முடிவை உடனே நீக்க வேண்டும் என்றும் அந்த நிகழ்ச்சியில் அறிக்கை வாசிக்கப்பட்டது.

# "பிடித்தமான தலைவர் பிரபாகரன்"

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) தலைவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி. 'ஐலண்ட்' பத்திரிகைக்கு பேட்டி அளித்திருந்தார். அப் போட்டியில் தனக்கு பிடித்தமான தலைவர்களில் பிரபாகரனும் ஒருவர் என்று கூறியுள்ளார்.

கூட்டணியின் முன்னாள் எம்.பியான அமரர் தர்மலிங்கத்தின் மகன்தான் சித்தார்த்தன். அவரிடம் உங்களுக்கு பிடித்தமான தலைவர்கள் யார்? என்று ஐலண்ட் நிருபர் கேட்ட கேள்விக்கு; தர்மலிங்கம், அமிர்தலிங்கம், பிரபாகரன் ஆகியோரது பெயர்களைக் கூறியுள்ளார் சித்தார்த்தன். ■

# கிளிநொச்சியில் வெள்ள அபாயம்!

தொடர்ச்சியாக வன்னியில் பெய்து வரும் அடைமழை காரணமாக கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக் குளம் நிரம்பி வழியும் அபாயத்தில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 38 அடி உயரத்திற்கு நீர் ஏறி தற்போது வான் பாய்கின்றது.

மேலும், தடுப்பு நடவடிக்கைக்காக இக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படுகின்றன. இதனால், இரணைமடுக் குள அணைக்கட்டின் மேலான போக்குவரத்துப் பாதை பொதுமக்கள் பாவனைக்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளது. ■

# இருளில் சிகிச்சை

5.12.97 அன்று இரவு நாடெங்கும் மின்சாரத்தடை ஏற்பட்டது. இதனால் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் காயமடைந்த படையினர் நிலையும் சிரமத்துக்கு உள்ளானது.

வன்னியில் இருந்து அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு கொண்டுவரப்பட்ட படையினருக்கு இருளில்தான் சிகிச்சை நடந்ததாம். ■

# முத்தரப்பு மோதல் முயற்சி!

(மட்டு நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனையில் கணத்துக்குக் கணம் சண்டையில் ஈடுபட்டுள்ள தரப்பாருக்கிடையில் மோதல் இடம்பெறுவதும் மக்கள் திசை தடுமாறி ஓடுவதும் சகஜமாகிவிட்டது.

சென்ற 05.12.97, ஊருக்குள் கள்ளத்தனமாக கஞ்சா கொண்டு வருவோரை கண்டு பிடிப்பதற்காக மூன்று ஊர்காவல் படையினர் வலம் வந்தனர். இவ்விதம் ஊர்காவல் படையினர் ஊருக்குள் திரிவதை முன் கூட்டியே அறிந்திராத படையினர் இவர்களைக் கண்டதும் புலிகள் என நினைத்துச் சுட ஆரம்பித்தனர். புலிகள்தான் தங்கள்மீது சுடுகிறார்கள் என எண்ணி ஓட்டம் பிடித்தனர் ஊர்காவல் படையினர். இச்சம்பவம் எதையும் அறிந்திராத பொலிஸார் சத்தம் கேட்டு உஷாரடைந்தனர். எதிரும் புதிருமாக ஓடுவதையும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்பதையும் அவதானித்த பொலிஸார் புலிகள் இயக்கத்தினர்தான் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர் என ஊகித்து அவர்களும் சுட ஆரம்பித்தனர். இத்தனைக்கும் மத்தியில் மக்களின் பாடு பெரும் திண்டாட்டமாகி விட்டது.

அதிர்ஷ்ட வசமாக இச்சம்பவத்தின் விளைவாக எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. கடைசியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்த போதுதான் நடந்த சம்பவம் இன்னதென்று பொலிஸாருக்கும், படையினருக்கும், ஊர்காவல் படையினருக்கும் பொதுமக்களுக்கும் தெரிய வந்தது. ■

# மின்மாற்றிகள் மேலும் தகர்ப்பு!

கிழக்கில் தமது ஆளுகையின் கீழ் உள்ள பகுதிகளுக்கு முழுமையாக மின் விநியோகம் கிடைக்க வழி செய்யப்படவேண்டும் என்று புலிகள் இயக்கத்தினர் கோருகின்றனர். அதே வேளை படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளில் இருக்கும் மின்மாற்றிகளையும், மின்கோபுரங்களையும், மின்சாரத் தூண்களையும் தொடர்ந்து சேதப்படுத்தி வருகின்றனர்.

சென்ற வாரம் கல்முனை-நற்பிட்டி முனையிலிருந்த ஒரு மின்மாற்றியும் திருக்கோவில்-தம்பிலுவிலில் ஒருமின்மாற்றியும் குண்டு வீசித் தகர்த்தெறியப்பட்டது. இதனால் அப்பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

இதேவேளை வாழைச்சேனை-கறுவாக்கேணிக்கும் கும்புறுமூலைக்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்த பதினொரு அதி உயர் மின் சக்தி கொண்ட கொங்றீற் தூண்கள் சாய்ந்து வீழ்ந்துள்ளன. வீழ்ந்தவுடன் பெரும் தீப்பொறிகள் ஏற்பட்டதாகக் கிராமத்தவர்கள் தெரிவிக்கிறார்கள். கடும் மழையினால் அப்பகுதியில் நீர் தேங்கி நின்றதனாலேயே மின்சாரக் கம்பங்கள் சாய்ந்துள்ளன.பழைய மின்சாரக் கம்பங்கள் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் தற்சமயம் வீழ்ந்த புதிய மின் கம்பங்கள் சமீபத்தில் நடப்பட்டிருந்தது. தெரிந்ததே. ■

# மீள் நியமனங்கள் பரிசீலனை!

(திருமலை நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண சபையில் சேவையிலுள்ள மீள் நியமனதாரர் விடயம் தீவிர பரிசீலனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. மாகாண ஆளுநரின் கவனம் இவர்கள் பக்கம் திரும்பியதையடுத்தே இந்நிலை தோன்றியுள்ளது.

இது சம்பந்தமாக தலைமைச் செயலாளர் திரு.ஜி.கிருஷ்ணமூர்த்தியால் சகல திணைக்களங்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆளுநரின் 17.11.97ந் திகதியிடப்பட்ட கடிதத்தைத் தழுவியதாக அமைந்த இக் கடிதத்தில், ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை வேலைக்கு நியமிப்பதால் பதவியுயர்வு பெறக்கூடியவர்களின் வாய்ப்பு பின் தள்ளப்படுகின்றமை, தகுதியுள்ள புதியவர்களுக்கு வேலை வாய்ப்பின்மை மீள் நியமனகாரரிடையே உடல், உள ரீதியாகச் சிறந்த சேவையினைப் பெற முடியாமை என்பவை பற்றிக் குறிப்பிட்டு திணைக்களத் தலைவர்களது கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன.

இதுபற்றி முரசு, மாகாணசபை அமைச்சின் உயரதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டபோது "நாங்கள் தகுதியற்றோருக்கு மீள் நியமனம் வழங்குவதில்லை. சில பதவிகளுக்கு அனுபவமும் அறிவும் நிறைந்தவர்கள் தேவைப்படுகின்றனர். சுய முடிவெடுத்து, கடமையை முன்னெடுக்கக் கூடிய திறமையை இளைய்வர்கள் வளர்த்துக் கொள்வதன் மூலமே எமது சபையைப் பொறுத்தமட்டில் மீள் நியமனதாரர் ஒழிக்கப்படுவதை ஆரோக்கியமானதாகக் கருத முடியும்" என்று கூறினார்.

'முரசால் வெளிக் கொணரப்பட்ட மாகாணசபை மோசடிப் பேர்வழிகள் பலர் மீள்நியமனகாரர்கள் தாமே' என்று கேட்டதற்கு, 'அந்த உண்மையையும் மறுப்பதற்கில்லை' என்றும் தெரிவித்தார் அந்த அதிகாரி. ■

# கர்ப்பிணி, கைக்குழந்தை, சிசு-துப்பாக்கிக் குறி

ஒரேயொரு துப்பாக்கிச் சூடு கர்ப்பிணிப் பெண்ணையும், வயிற்றிலிருந்த சிசுவையும், கையிலிருந்த கைக்குழந்தையையும் பதம் பார்த்தது.

இத் துர்ப்பாக்கிய சம்பவம் வாழைச்சேனை கல்மடு அகதி முகாமில் வசிக்கும் க.தயாளநாயகி (22) என்பவருக்கே நிகழ்ந்தது.

அகதி முகாம் பக்கம் நடமாடும் புலிகள் இயக்கத்தினரைக் கண்டு பிடிப்பதற்காகப் புறப்பட்ட படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்து அங்குள்ள ஆண்களைக் கைது செய்தனர். தனது கணவனும் படையினரால் கைது செய்யப்படுவதை அவதானித்த மனைவி ஒலக்குரலெழுப்பி ஓடிச் சென்று படையினருடன் வாதாடிக் கொண்டிருந்த போதே இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்று கூறப்படுகிறது. வேண்டுமென்றே அவர் மீது சுடப்பட்டதாகப் பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளன. இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கர்ப்பிணியாக இருந்த தாய் இரண்டு வயதுள்ள தனது கைக்குழந்தையையும் தூக்கிக் கொண்டே ஓடியுள்ளார். இவருக்குப் பட்ட துப்பாக்கிச்சூடு வயிற்றிலிருந்த சிசுவைக் கொன்றதோடு தாயையும் காயப்படுத்தி, அவரது கையிலிருந்த சந்திரகலா எனும் குழந்தையின் காலையும் ஒடித்துள்ளது.

சத்திர சிகிச்சைக்குள்ளாகி இறந்த சிசு வெளியே எடுக்கப்பட்டது. இந்த கர்ப்பிணித் தாய் மட்டக்களப்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் 05.12.97 அன்று நடந்தது.

# மலையக தமிழாராய்ச்சி மாநாடு

(கண்டி நிருபர்)

மலையக தமிழாராய்ச்சி மகாநாடு டிசம்பர் மாதம் 13ம் 14ம் திகதிகளில் நுவரெலியாவில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

விழா ஏற்பாட்டாளரும், மத்திய மாகாண வர்த்தக வாணி, இந்து, கலாசார, தமிழ் கல்வி அமைச்சருமான திரு வீ.புத்திரசிகாமணியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு ரணில் விக்ரமசிங்காவும் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் திரு ஸ்ரான்லி திலகரத்ன, முதலமைச்சர் திரு டபிள்யூ.பி.பி.திஸாநாயக்க கிராமிய அபிவிருத்தி, தோட்டமைப்பு அமைச்சர் திரு எல்.தொண்டமான் ஆகியோர் கலந்து கொள்ள இருப்பதாக திரு சிகாமணி முரசுக்குத் தெரிவித்தார்.

இந்த விழாவில் மலையக சிரேஷ்ட எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் கௌரவிக்கப்பட இருக்கின்றனர். சமாதானம் நிலவ பிரார்த்தனையும் பாத யாத்திரையும் இதில் முக்கிய இடம்பெறும் ■



படிப்பகம்

# தமிழ் செய்தி அறிக்கை சிங்கள மயம்
## மொழி அமுலாக்கல் என்னாச்சு?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் செய்தி அறிக்கையும், ரூபவாஹினி, மற்றும் சுயாதீன தொலைக்காட்சி செய்திகளும் தமிழை சிங்கள மயப்படுத்தும் முயற்சிகளாக அமைந்துள்ளன.

செய்தி அறிக்கைகள் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டு, பின்னர் தமிழிலும் மொழி பெயர்க்கப்படுகின்றன. அதனால்தான் சிங்களச் சொற்கள் தமிழில் அப்படியே சொல்லப்படுகின்றன. இக் குறைபாடு கவனத்தில் கொள்ளப்படும் என்று பல முறை பதில் சொல்லப்பட்டது.

தமிழ் பேசும் பா.உக்களும் இவ்வாறான தவறுகளை சுட்டிக்காட்டினர் என பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம்.

பாவம் அந்த பா.உக்கள். செய்தி அறிக்கையில் தமிழை இடம்பெறச் செய்யக்கூட அவர்களது பாராளுமன்ற பதவிகள் உதவவில்லை. இந்த இலட்சணத்தில், தாம் பாராளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக இருப்பதால்தான் தமிழர்களே உயிரோடு இருக்கிறார்கள் என்பதுபோல கூறிவருகிறார்கள்.

சமீபத்தில் 'முகப்பு அலுவலகம்' என்று ஒரு திறப்பு விழா நடந்தது அல்லவா. முதலில் அதற்கு சிங்களத்தில் சஹன் பியச என்று பெயர் சூட்டி, அதனை தமிழிலும் எழுதி வைத்தனர். பின்னர் ஈ.பி.டி.பி. பா.உ. டக்ளஸ் தேவானந்தா அதனை சுட்டிக்காட்டியதால் 'முகப்பு அலுவலகம்' என்று பெயரிட்டனர்.

ஆனால், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி அறிக்கையில் (2.12.97 மாலை) சஹன் பியச என்றழைக்கப்படும் முகப்பு அலுவலகத் திறப்பு விழா என்று குறிப்பிடப்பட்டது.

யார் தவறு இது? சிங்களத்தில் இருந்து மொழி பெயர்த்த தமிழ் பேசும் உத்தியோகத்தரின் அடிமைப்புத்தியா? அல்லது மேலிட உத்தரவா?

அதுமட்டுமல்ல, தொலைக்காட்சி என்றால் சிங்களத்தில் ரூபவாஹினி என்று அர்த்தம். சமீபத்தில் தமிழ் செய்தி அறிக்கைகளில் தொலைக்காட்சி என்று குறிப்பிட வேண்டி இருந்தால், ரூபவாஹினி என்றே குறிப்பிட்டு வருகின்றனர்.

ஏன் இந்த சிங்கள மயமாக்கம்? இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்?

தமிழ்மொழியை அமுலாக்க ஜனாதிபதி உத்தரவிட்டதாக கூறப்பட்ட காலவரையறை எப்போதோ முடிந்துவிட்டது. ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக தமிழ் மொழி அமுலாக்கல் மாறிவிட்டது. அதைவிடக் கொடுமை, கடந்த காலங்களை விட வேகமாக சிங்கள மயமாக்கும் போக்கு தமிழை விழுங்கத் தொடங்கியுள்ளது.

இதன் மர்மம் என்ன? ஒருவேளை அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்திக் கொடுக்கும் சதி நோக்கத்துடன் செய்தி அறிக்கைகள் தயாரிக்கப்படுகிறதோ? அப்படியாயின் சுட்டிக்காட்டிய பின்னர்கூட தவறுகள் தொடர்வது ஏன்?

எஸ். மலரன்பன், கொழும்பு-05.

## நள்ளிரவு உரையாற்றியது ஏன்?

மாவீரர் தினத்தை முன்னிட்டு முன்னர் 26ம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு பிரபாகரன் உரையாற்றுவது வழக்கமாகும்.

பிரபாகரனின் பிறந்தநாள் 26ம் திகதி என்பதால், அன்று நள்ளிரவு ஆற்றப்படும் உரை பிறந்தநாள் உரையாகவும் கருதப்பட்டது.

அதனை அடுத்தே கடந்த ஆண்டு மாவீரர் தினத்திலும் 27ம் திகதி பிரபாகரன் உரையாற்றினார். இந்த முறை பிரபாகரனின் உரை 27ம் திகதி மாலை 5.11க்கு ஆரம்பமானது. புலிகள் இயக்கத்தில் முதற்பலியான சங்கர் சிகிச்சைக்காக இந்தியா கொண்டு செல்லப்பட்டார். அங்கு நவம்பர் 27ம் திகதி மாலை 5.11மணிக்கே சங்கர் மரணமானார். அதனைக் கருத்தில் கொண்டே 5.11 க்கு பிரபாகரனின் உரை ஆரம்பமானது.

## மீண்டும் சர்ச்சை!

(காரைதீவு நிருபர்)

கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதி அகலமாக்கும் நடவடிக்கை திடீரென நெடுஞ்சாலை போக்குவரத்து அமைச்சரால் நிறுத்தப்பட்டுள்ளது.

பலகோடி ரூபா செலவில் ஆரம்பமான இவ்வீதி விஸ்தரிப்பு முதற்கட்டமாக காரைதீவு கல்முனை வீதியில் இடம்பெற்றது. வீதியை 56 அடி அகலமாக்க வேலைகள் நடைபெற்று வந்தது.

அதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை அல்லும் பகலும் வேலை செய்தது. ஆனால் இதனை 50 அடியாக்கினால் போதுமானது என்று கூறி, ஏழுபேர் அமைச்சர் பௌசியிடம் சென்று முறையிட்டனராம்.

விளைவு விஸ்தரிப்பு நின்றுவிட்டது. வீதி போக்குவரத்து நெருக்கடி அதிகரித்துக் கொண்டே போகிறது. எப்போது தொடங்கும்?

## முதற் கோணல் முற்றும் கோணல்
## தமிழ்க் கட்சிகளும் பங்காளிகள்

கொழும்பில் 'முகப்பு அலுவலகம்' என்ற பெயரில் ஆரவாரமான திறப்பு விழா நடைபெற்றது. 2.12.97 அன்று நடைபெற்ற அத் திறப்பு விழாவில் தமிழ்க் கட்சிகளும் கலந்து கொண்டன.

கலந்து கொண்டவர்களின் பெயர்கள் வானொலிச் செய்தியில் தவறாமல் வாசிக்கப்பட்டன. இவ்வாறு விளம்பரம் பெற வாய்ப்பு இருப்பதால்தான், எந்த விழாவுக்கு அழைத்தாலும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் விழுந்தடித்து ஓடுகிறார்கள்.

அது என்ன முகப்பு அலுவலகம்? தமிழில் நற்பெயர்களுக்கா பஞ்சம்? என்று ஆராய்ந்தபோது உண்மை தெரியவந்தது.

சிங்களத்தில் சஹன் பியச என்று பெயர் சூட்டிவிட்டு, அதற்கு தமிழில் அர்த்தம் தேடியிருக்கிறார்கள். (நல்ல வேளையாக இதற்கும் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை கோரவில்லை) அப்படித் தேடியபோது, யாரோ ஒரு தமிழ்ப் பண்டிதர் திருவாய் மலர்ந்த பெயர்தான் 'முகப்பு அலுவலகம்'.

தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதுதான் இதன் நோக்கம். அதற்காகவே திறக்கப்பட்டது என்று உலகம் அறிய ஆங்கிலத்திலும் செய்திகள் சொல்லியாகிவிட்டது. தமிழ்க் கட்சிகளும் கலந்துகொண்டு அந்தப் பிரசாரத்திற்கு ஒத்து ஊதியுள்ளன.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்ப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட அலுவலகத்திற்கு எதற்காக சிங்களத்தில் பெயர் வைக்க வேண்டும்?

தமிழில் அழகாக பெயர் வைத்துவிட்டு, அதனை சிங்களத்திலும் எழுதி இருக்கலாம் அல்லவா!

அரசியல் தீர்வை வழங்குவதற்கும் சிங்கள மக்களை திருப்தி செய்வதற்குந்தான் முழுக் கவனமும் செலுத்துகிறது அரசு. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனையைத் தீர்க்கும் அலுவலக விடயத்திலுமா சிங்கள மக்களை திருப்திப்படுத்த வேண்டும்?!

அலுவலகத்திற்கு தமிழ்ப் பெயர் வைக்கவே தயங்கும் அரசாங்கமா, துணிச்சலான அரசியல் தீர்வை தமிழ் பேசும் மக்களிடம் தரப்போகிறது?

### ஒத்துழைப்பு ஏன்?

அது இருக்கட்டும், கொழும்பில் தினசரி கைதுகளும், சோதனைகளும், சந்தேகப் பார்வைகளும் தமிழர்களை ஒருவழி பண்ணிக் கொண்டிருக்கின்றன.

'இங்கே இருப்பதானால் அடக்க ஒடுக்கமாக இருந்து விட்டுப் போங்கள், நீங்கள் இந்த நாட்டுமக்களல்ல' என்பது போலவே நடத்தத் தொடங்கிவிட்டார்கள்.

அப்படி இருக்கும்போது 'முகப்பு அலுவலகம்' திறந்து என்னாகப் போகிறது? தமிழ் மக்களுக்கு உதவுவதில் அரசு முன் நிற்கிறது என உலகுக்கு காண்பிக்கவும், தலைநகரில் தமிழர் படும்பாட்டை மூடி மறைக்கவுமே முகப்பு அலுவலகத் திறப்பு விழா பயன்பட்டுள்ளது.

கைதுகளையும், துயர்களையும்தான் இந்தத் தமிழ்க் கட்சிகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அத் துயரங்களை மூடி மறைக்க உதவும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்காமலாவது இருக்கலாம் அல்லவா?

பா. தெய்வநாயகம், கொழும்பு-10.


## மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் சந்திக்கலாம்
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.
வவுனியாவில் டிசம்பர் 14,15,16ம் திகதிகளில்
வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INN ல் சந்திக்கலாம்
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கொழும்பில் டிசம்பர் 21 முதல் 29 வரை
DR.P. ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING NO.10, Recalamation Road. (Entrance Bankshall St. Opposite Renjanas) Colombo.11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072.609388 கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.



UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411


## மீளக் குடியேற விருப்பம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த தமிழ்-முஸ்லிம் குடும்பங்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பான நடவடிக்கைகளை மாவட்ட செயலகம் துரிதமாக செயற்படுத்தி வருகின்றது.

இதன் முதற் கட்டமாக புத்தளம் மாவட்டத்தில் அகதிகளாக வாழும் மன்னார் மாவட்ட முஸ்லிம்களை மீண்டும் தம் சொந்த இடங்களுக்குச் செல்லும் வழி வகைகள் பற்றி விளக்கமளிப்பதற்கான கூட்டங்கள் கடந்த 29.11.97 அன்று புத்தளத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பிரதி காணி ஆணையாளர் ஏ.ஏ.எட்வர்ட் இக் கூட்டங்களுக்கு தலைமை வகித்து இடம் பெயர்ந்தவர்களுக்கு விளக்கமளித்தார். இதில் இராணுவ இணைப்பதிகாரிகளும், புனர்வாழ்வு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மன்னார் நகரம், நானாட்டான், முசலி ஆகிய பிரிவு முஸ்லிம் கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 25 பேர் அடங்கிய குழுவொன்று மன்னார் வந்து நிலைமைகளை ஆராய்ந்து செல்லவுள்ளது. அதன் பின்னரே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## அங்கே என்ன நடக்கிறது?

இலங்கை வானொலி வர்த்தக சேவையிலே நேயர் விரும்பும் பாடல்களை முழுமையாகக் கேட்க முடியா திருக்கிறதே. நேயர் விரும்பும் பாடலை அறிவிப்பாளர் அறிவித்தாலும் வேறு பாடலே ஒலிபரப்பப்படுகின்றது. இல்லையேல் தடங்கலேட்படுகின்றது. "அப்பாடலை முழுமையாக ஒலிபரப்ப முடியாமைக்கு வருந்துகிறோம் நேயர்களே" என்று அறிவிப்பாளர் வருந்துவது வாடிக்கையாகிவிட்டது.

சில மாதங்களுக்கு முன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிரேஷ்ட அறிவிப்பாளரொருவர் சிங்கள உதவியாளரின் விருப்பத்திற்காக ஒரு சிங்களப் பாடலை ஒலிபரப்ப நிர்ப்பந்திக்கப்பட்டாராம். அப்பாடலும் ஒலிபரப்பப்பட்டது.

இவற்றை நோக்கும்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் சிங்கள மயமாகின்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஏன்? தமிழ் அறிவிப்பாளருக்கு உதவியாகப்பணியாற்ற தொழில் நுட்பமறிந்த தமிழர்களே இல்லையா?

எம்.பி.ராஜன், கொழும்பு-13.


நவீன தொழில் நுட்பம்
ஆயுள் பூராவும் உழைக்கக்கூடிய உத்தரவாதம்
PHOENIX பைசிக்கள்
நூறு வீதம் அசல் சீன உதிரிப்பாகங்கள்


பைசால் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்
(FAIZAL HARDWARE STORES)
74, டாம் வீதி, கொழும்பு 12. தொலை: 433727
பெக்ஸ்: 446088, E-mail - faisto@sri.lanka.net
GRAYON
இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவு - பீனிக்ஸ் பைசிக்கள்



ரிஷி அஜ்மாமிச
லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)

இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.
விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=
ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


### 15வது ஆண்டு நினைவஞ்சலியும் திதியும்



**அமரர் திரு. இராசதுரை கந்தசாமி**
(44/4, லோட்டஸ் றோட், வண்ணார்பண்ணை)

தோற்றம்: 29.12.1939
மறைவு : 01.11.1982

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் நின்று வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! 15 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம் மனதை விட்டு நீங்காது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் நினைவு திதி 13.12.97 அன்று, 126, நியூனெம் சதுக்கம், கொட்டாஞ்சேனை இல்லத்தில் நடைபெறும்.

இவ்வண்ணம்
மனைவி பூரணம் கந்தசாமி,
மகள்மார், மகன்
ரமேஸ்வரன், மருமகன்.

தகவல்:- ஜ. சின்னத்தம்பி, பெறாமகன்.


காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218



சித்தர் மாந்திரீகம்
அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)
21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# காத்திருந்த வலை

## பேரழிவு முற்றுகை

மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகள் இந்த முறையும் பாரியதாக்குதலை நடத்தவில்லை. 'எதிரி விழிப்பாக இருக்கும் போது தாக்காதே' என்பது கெரில்லாப் போர் விதிகளில் ஒன்று.

எனினும் கடந்த ஆண்டு நடைபெற்ற மாவீரர் தினத்தைவிட, இந்த அண்டு மாவீரர் தினத்தில் வடக்கு-கிழக்கில் பரந்தளவில் சிறு சிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குறிப்பாக யாழ் குடாநாட்டில் சிறு தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. புலிகளின் நடமாட்டங்களும் அதிகமாயின.

பிரபாகரனின் மாவீரர் தின உரைகளும் விநியோகம் செய்யப்பட்டன. சில பகுதிகளில் சந்திகளில் பிரசுரங்களை வைத்து அதன்மேல் கற்களை பாரம் வைத்துவிட்டுப் போயிருந்தார்கள்.

எவ்வளவோ விழிப்பாக இருந்தும் கூட கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடத்தில் விளக்கு ஏற்றுவதை படையினரால் தடுக்க இயலாமல் போய் விட்டது.

**யாழ் குடாநாட்டில் பெரும் தாக்குதல்கள் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மாவீரர் தினத்தை அடுத்து அதற்கான தயாரிப்புக்களுக்கு ஏற்ற சூழலை புலிகள் ஏற்படுத்தி வருகின்றனர் என்று தகவல்கள் கூறுகின்றன.**

கடந்த ஆண்டு மாவீரர் தினத்தில் புலிகள் புதிய தந்திரம் ஒன்றை கையாண்டனர். மாவீரர் தின வாரம் முழுக்க புலிகளது தாக்குதலை எதிர்பார்த்து தமது முகாம்களில் படையினர் காத்திருந்தனர்.

புலிகள் எங்கும் தாக்கவில்லை மாவீரர் தினம் முடிய படையினரின் உஷார் நிலை தளர்ந்தது.

**அம்பாறையில் இருந்த புலுக்குணாவ அதிரடிப்படை முகாம் புலிகளின் தாக்குதலால் தகர்ந்தது. மாவீரர் தினம் முடிவடைந்து இரண்டு வாரத்துக்குள் அத் தாக்குதல் தொடுக்கப்பட்டது. படையினரை எதிர்பார்க்க வைத்துவிட்டு, அவர்கள் எதிர்பாராத நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலாக அது அமைந்தது.**

அத் தாக்குதலில் 50ற்கு மேற்பட்ட விசேஷ அதிரடிப்படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் 26 பேர் பலியாகினர். 85 எம்.எம். நடுத்தர ஆட்டிலெறி ஒன்று உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

எனவே, கடந்த ஆண்டின் அனுபவம் காரணமாக இந்த தடவை மாவீரர் தினம் முடிவடைந்த பின்னரும் படையினர் உஷாராக இருந்தாக வேண்டிய கட்டாயம்.

ஆனால் புலிகள் இம்முறை தமது தந்திரத்தை மாற்றிக் கொண்டனர். மாவீரர் தினத்தில் தாக்குவது, மாவீரர் தினம் முடிந்த பின்னர் தாக்குவது என்ற இரண்டு உத்திகளும் படையினருக்கு பரிச்சயமாகி விட்டன.

எனவே, படையினர் விழிப்பாக, இருப்பர். அதுவும் வன்னியில் மழைக் காலம் என்பதால் 'ஜயசிக்குறுய்' படைகள் தற்காப்பு நிலையில் கவனமுடன் உள்ளன. புலிகளின் பாய்ச்சலை எந்த நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

**அதனால் படையினரைத் தேடிச் சென்று தாக்குவதற்கு பதிலாக, படையினர் தம்மைத் தேடி வரும்போது பாரிய தாக்குதல் தொடுக்க புலிகள் தீர்மானித்தனர்.**

படையினர் வன்னியில் பலமுனைகளில் இருந்து முன்னேறுவதுபோல போக்குக் காட்டினாலும்கூட, புலிகள் களநிலவரத்தை நன்கு மதிப்பிட்டே தங்கள் சண்டை முறைகளையும், உத்திகளையும் வகுத்து வருகின்றனர்.

படையினர் போக்குக் காட்டும் திசைகளில் எல்லாம் புலிகளின் அணிகள் இழுபட்டுத் திரியவில்லை.

'ஜயசிக்குறுய்' படையணிகள் தற்போது வவுனியா-யாழ் சாலையில் புளியங்குளம் வரைக்குமாகவும், புளியங்குளத்துக்கு கிழக்கே நயினாமடு, பெரியமடு, கரிப்பட்ட முறிப்பு ஆகிய பகுதிகளிலும் நிலை கொண்டுள்ளன.

இப் படையணிகளில் வவுனியா யாழ் சாலையில் உள்ள படைகள் புளியங்குள நகரை பிடிக்க முடியாதளவுக்கு புலிகளின் பாதுகாப்பு அரண்கள் பலமாக உள்ளன.

கிழக்கே நயினாமடு, பெரியமடு போன்ற பகுதிகளில் இருந்து கனகராயன குளம் நோக்கி படைகள் செல்வதோ, அவ்வாறு சென்று புளியங்குளத்தை சுற்றி வளைப்பதோ இயலாத காரியம்.

ஏனெனில், நயினாமடுவில் இருந்து கனகராயன் குளத்துக்கு செல்ல வேண்டுமானால் கனகராயன் ஆற்றை கடந்தாக வேண்டும். ஆனால் கனகராயன் ஆற்றில் வெள்ளம் புரண்டோடுகிறது.

**புளியங்குளத்தின் கிழக்குப் புற படை நிலைகளில் இருந்து வவுனியா-யாழ் சாலையை படைகள் நெருங்க முடியாதளவுக்கு கனகராயன் ஆறு இயற்கை அரணாக குறுக்கே நிற்கிறது.**

மாங்குளம் ஒட்டிசுட்டான் சாலையில் உள்ள கரிப்பட்ட முறிப்பில் இருந்து பழைய கண்டி வீதி ஊடாக உட் பாதையால் கிளிநொச்சி நோக்கி முன்னேறவும் முடியாது. அங்குள்ள பாலங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டுவிட்டன. வெள்ளம் எங்கும் தேங்கி நிற்கிறது.

எனவே- புளியங்குளத்தில் இருந்தோ, புளியங்குளத்தின் கிழக்கு பக்கம் உள்ள படை நிலைகளில் இருந்தோ மழைக்காலம் முடியும் வரை படைகள் பெரிய படையெடுப்புக்கு துணிவது கடினம்.

எனவே, புளியங்குள கிழக்கு படைநிலைகளில் இருந்து தற்காப்புக்கான தாக்குதல்கள், ரோந்துகள் என்பவைதான் இருக்கும்.

**ஆக, 'ஜயசிக்குறுய்' படைகள் மழைக்காலத்தில் முன்னேற வேண்டுமானால், ஒரு பாதை தான் வசதியானது. புளியங்குளத்துக்கு வட மேற்காக உள்ள புதூர் ஊடாக முன்னேறி கனகராயன்குளத்தை கைப்பற்றுவது தான் அந்தப் பாதை.**

ஏற்கனவே அவ்வாறான முயற்சிகள் செய்யப்பட்டும் உள்ளன. புளியங்குள நகரை பிடிக்க முடியாத நிலையில், புதூர் ஊடாக சுற்றிச் சென்று கனகராயன்குளத்தைப் பிடிக்க முயன்றனர்.

கனகராயன் குளத்தை பிடித்தால், வவுனியா- யாழ் சாலையில் உள்ள புலிகளின் அணிகள்மீது முன்னாலும், பின்னாலும் தாக்கலாம். புளியங்குள படைகள் முன்புறமாய் தாக்க, கனகராயன்குள படைகள் பின்புறம் இருந்து தாக்க, சாலையைவிட்டு புலிகளின் அணிகள் விலகி, அருகிலுள்ள காடுகளுக்குள் செல்ல வேண்டி இருக்கும் என்பதுதான் படையினரின் திட்டம்.

ஆயினும் புதூர் ஊடாக படையினர் முன்னேற புலிகள் அனுமதிக்கவில்லை. புதூரில் இருந்து கனகராயன் குளம் கிட்டத்தட்ட பத்து கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

புதூரில் இருந்து முன்னேறும் முயற்சி சாத்தியப்படாமையால்தான், பின்னர் புளியங்குளத்துக்கு கிழக்கே உள்ள நயினாமடுவில் இருந்து கனகராயன் குளம் நோக்கி செல்ல முற்பட்டனர். கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் பகுதிகளில் புலிகள் பாரிய தாக்குதல் தொடுத்து அந்த முயற்சியை முறியடித்தனர்.

இவையெல்லாம் ஜயசிக்குறுய் இரண்டாம் கட்ட முயற்சிகள். இப்போது மூன்றாம் கட்டத்தில் இருக்கிறது ஜயசிக்குறுய்.

**இக் கட்டத்தில் வவுனியா-யாழ் சாலையில் உள்ள படைகளும், புளியங்குளத்தின் கிழக்கே உள்ள படைகளும் தற்காப்பிற்கான தாக்குதல்களில் மட்டும்தான் ஈடுபடமுடியும். பெரியளவில் முன்னேற காலநிலையும், களநிலவரமும் ஒத்துழைக்காது.**

எனவே, புதூர் வழியாக மீண்டும் ஒரு படையெடுப்புக்கு படையினர் திட்டமிட்டனர்.

புளியங்குள கிழக்குப் பக்கம் தமது படை நிலைகளை சுற்றி புலிகளின் அணிகள் நகர்த்தப் பட்டுள்ளதால், புதூர் பாதையில் முன்பிருந்த பலம் புலிகளுக்கு இருக்காது என்று படையினர் நினைத்திருக்கலாம்.

**ஆனால், அதுதான் மாபெரும் தப்பாகி விட்டது. களநிலவரம், மற்றும் கால நிலையை கவனித்த புலிகளின் தலைமை, ஜயசிக்குறுய் படையினர் அடுத்ததாக புதூர் வழியாகத்தான் முன்னேற முயற்சிப்பர் என்பதை துல்லியமாக கணித்துக் கொண்டது.**

அப்பாதை வழியாக முன்னேறும் படைகளை எதிர்பார்த்து, எங்கே தாக்குவது, எப்படித் தாக்குவது, எங்கிருந்து தாக்குவது போன்ற திட்டங்களும் வகுக்கப்பட்டுவிட்டன.

புலிகள் முன்கூட்டியே வலை விரித்திருப்பது தெரியாமல், படையினர் தமது மூன்றாம் கட்டத்தில் முக்கிய நகர்வுக்கு திட்டமிட்டனர்.

அந்த நகர்வுக்கு விரைவாக திட்டமிட ஒரு காரணமும் இருந்தது. 5.12.97 அன்று பாராளுமன்றத்தில் இரண்டு முக்கிய விவாதங்கள் இருந்தன.

1. பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம். 2. அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணைமீதான விவாதம்.

**அவசரகால நீடிப்பு பிரேரணை கொண்டு வரப்படும் தினத்துக்கு முன்பாக, 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கைகள் முடுக்கிவிடப் படுவது வழக்கமாக இருக்கிறது.**

எதிர்க்கட்சியின் வாயை அடக்கவும், அவசரகால சட்ட விவாதத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கம்பீரமாக உரையாற்றவும் அப்படிச் செய்யப்பட்டு வருகிறது.

இம்முறை அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்துடன், பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதமும் இருந்தமையால், வன்னியில் இருந்து விறு விறுப்பான செய்தியை பிரதி பாதுகாப்பு அமைச்சர் எதிர்பார்த்திருக்க கூடும்.

எனவே அதற்கு தோதாக 4.12.97 அன்று அதிகாலையில் 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கைக்கு நாள் குறிக்கப்பட்டது.

**நயினாமடுவில் இருந்து கனகராயன் குளம் நோக்கி முன்னேறுவது ஒரு முனை. புதூரில் இருந்து கனகராயன் குளம் நோக்கி முன்னேறுவது இரண்டாவது முனை. இரண்டில் பிரதானமான முனை புதூரில் இருந்து மேற்கொள்ளப்படுவதுதான்.**


புலிகளின் அணிகளை திசைதிருப்பவே நயினாமடுவில் இருந்து கனகராயன் குளம் நோக்கி முன்னேறும் முனை திறக்கப்படும்.

புதூர் பகுதியில் இருந்து ஜயசிக்குறுய் படையணிகள் முன்னேறுவதற்கு முன்பாக புதுவிதமான திட்டம் ஒன்றை இம்முறை தீட்டினர்.

கனரக வாகனங்கள், கனரக ஆயுதங்களுடன் பெரும் படையணிகள் முன்னேறுவதற்கு முன்னர், விசேஷ கொமாண்டோக்கள் சென்று பாதையைச் சுத்தப்படுத்துவது, அதாவது சத்தம் காட்டாமல் நகரும் முயற்சி.

இன்னொரு தகவலும் படையினரின் திட்டத்துக்கு காரணமாக அமைந்தது. புதூரில் இருந்து வடமேற்காக இரண்டரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது மன்னகுளம். அங்கு புலிகளின் முகாம் இருக்கிறது என்ற தகவல் படையினருக்கு எட்டியிருந்தது.

காடுகள் சார்ந்த வழிகள் ஊடாக நகர்ந்து அதிகாலையில் அந்த முகாமை முற்றுகையிட்டு தகர்ப்பதற்கு திட்டம் தீட்டப்பட்டது. அந்த முகாமை தகர்ப்பது மூலம் இரண்டு சாதகங்கள் கிடைக்கும் என நினைத்திருக்கலாம்.




**1. புலிகளுக்கு பாரிய அழிவை ஏற்படுத்தி, உளவியல் அதிர்ச்சியை ஏற்படுத்துவது.**

**2. புலிகள் தமக்கு ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள முன்னர் மன்னகுளம் ஊடாக கனகராயன் குளம் நோக்கி பாரிய படை நகர்வை நடத்தி முடிப்பது.**

எனவே, மன்னகுளம் முகாமை தாக்க விசேஷ கொமாண்டோக்கள் தயாராகினர். காடுகளுக்குள்ளும், காடு சார்ந்த பகுதிகளிலும் சண்டையிட விசேஷ பயிற்சி பெற்றவர்கள் தான் இந்தக் கொமாண்டோக்கள்.

ஜயசிக்குறுய் மூன்றாம் கட்ட நடவடிக்கைகளுக்காக இவர்கள் வன்னிக்கு கொண்டுவரப்பட்டதாக தெரிகிறது.

கொமாண்டோ தாக்குதல் என்பதால் கனரக ஆயுதங்கள் கிடையாது. ஆர்.பி. ஜிக்கள், எல்.எம்.ஜிகள், ஏ.கே. துப்பாக்கிகள், பிஸ்டல்கள், கிளைமோர் குண்டுகள் போன்ற குறும்தூர தாக்குதல் ஆயுதங்களுடன் புதூரில் இருந்து விசேஷ கொமாண்டோக்கள் புறப்பட்டனர்.

ஆயிரத்துக்கு மேற்பட்டோரைக் கொண்டதாக விசேஷ கொமாண்டோக்களின் படையணி சென்றதாக தெரிகிறது.

**ஆனால், புதூர் வழியாக படையணிகள் முன்னேறும் என்று முன்கூட்டியே புலிகளின் அணிகள் காத்திருந்ததை விசேஷ கொமாண்டோக்கள் அறியவில்லை.**

விசேஷ கொமாண்டோக்கள் முன்னேறத் தொடங்கியதில் இருந்து அவர்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் புலிகளின் அணிகளால் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன.

மன்னகுளம் நோக்கி விசேஷ கொமாண்டோக்கள் சென்று கொண்டிருக்க, அந்த முகாமில் இருந்த புலிகளின் அணிகளும் முகாமை விட்டு வெளியேறி, தாக்குதலுக்கு வசதியாக காத்திருந்தன.

தங்களை சுற்றி வலை விரிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தெரியாமல், முகாமை கொமாண்டோக்கள் சுற்றிவளைத்தனர்.

**முகாமை நோக்கி முன்னேறுவதில் விசேஷ கொமாண்டோக்களின் கவனம் எல்லாம் இருக்கையில், அவர்களைச் சுற்றி வியூகம் வகுத்து, மிக வசதியான தருணத்தில் புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.**

எதிர்பாராத தாக்குதல். அணி அணியாக புலிகளின் படையணிகள் வந்து கொண்டிருந்தன. விசேஷ கொமாண்டோக்களும் திருப்பி தாக்கினார்கள். ஆனாலும் அவர்கள் மாட்டிக் கொண்டது மீள முடியாத வலைக்குள். கச்சிதமாக வீசப்பட்ட வலை என்பதால், முற்றுகையை உடனே உடைத்துக் கொண்டு செல்லவும் முடியாமல் போனது.

புலிகளின் வியூகத்திற்குள் விசேஷ கொமாண்டோக்கள் சிக்கிய செய்தி அறிந்ததும், புதூரில் இருந்து மற்றொரு அணி முன்னேற முனைந்தது.

அதேநேரம் நயினாமடுவில் இருந்து கனகராயன் குளம் நோக்கி மற்றொரு முனையில் முன்னேறுவது போலவும் படைகள் போக்குக் காட்டிக் கொண்டிருந்தன.

**படையினருக்கு இன்னொரு துரதிஷ்டம், அன்று முழுவதும் மழைக்கால கருமேகங்கள் களத்தை மூடி குடை பிடித்துக் கொண்டன. அதனால் விமானப் படை விமானங்களும் உதவிக்கு செல்ல இயலவில்லை.**

அதிகாலையில் தொடங்கிய சண்டை பிற்பகல் மூன்றுமணிவரை தொடர்ந்தது. கடும் சண்டையின் காரணமாக விசேஷ கொமாண்டோக்களில் ஒரு பிரிவினர் புலிகளின் முற்றுகையில் உடைப்பை ஏற்படுத்திக் கொண்டு புதூர் நோக்கி பின்வாங்கினர்.

அவர்களை பின்தொடர்ந்து புலிகளின் அணிகள் பலத்த தாக்குதல் தொடுத்தன.

புதூரில் இருந்து உதவிக்கு விரைந்த படைகளும் புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு உள்ளாகின.

சண்டை ஓய்ந்தபோது படையினர் தமது பழைய நிலைக்கு திரும்பியிருந்தனர்.

**மன்னகுளம் பகுதியில் 123 படையினரது உடல்கள் கிடந்தன. அவற்றில் இருபது உடல்கள் சிதைந்த நிலையில் இருந்தமையால் 110 உடல்கள் புலிகளால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.**

பாதுகாப்பு அமைச்சுமீதான விவாதத்தின்போது எதிர்பார்க்கப்பட்ட செய்திக்கு முற்றிலும் மாறாக கள நிலவரம் அமைந்தது. படைத்தரப்பு இழப்புக்கள் பற்றி வழக்கம் போலக்கூட இம்முறை தகவல் கூறப்படாமைக்கு காரணம் அதுதான்.

**புலிகள் தரப்பில் 37 பேர் பலியாகினர். அதில் 10 பேர் பெண் புலிகள். படையினர் தரப்பில் 250 பேர்வரை பலியாகியுள்ளதாக நம்பப்படுகிறது. 400 பேர் வரை காயமடைந்துள்ளனர். ஒரு படையணியே முற்றாக செயல் இழந்துள்ளது.**

மாவீரர் தினத்தை அடுத்து காத்திருந்த புலிகளுக்கு, புதூரில் இருந்து மெற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகி விட்டது. அதனால், தமது தரப்பில் மிகக் குறைந்த இழப்போடு, படைத் தரப்பிற்கு பாரிய இழப்பை புலிகள் ஏற்படுத்திய முதலாவது தாக்குதலாக இது அமைந்து விட்டது.

வன்னிக் களத்தின் ஒவ்வோர் அங்குலமும் புலிகளுக்கு தண்ணிபட்ட பாடு. எனவே அடிக்கடி தந்திரங்களை மாற்றிக் கொள்வதுடன், தமக்கேற்ற முறையில் சண்டையிடவும் முடியும். எனவே பேரழிவுகள் காத்திருக்கும் களமாக காட்சியளிக்கிறது வன்னிக் களம். ■

**நாரதர்**

**புலிகள் கைப்பற்றியதாக வெளியிட்டுள்ள பட்டியல்.**

**ஏ.கே.எல்.எம்.ஜிக்கள் / ஜி.கே.எல்.எம்.ஜிக்கள் } 167**
**துப்பாக்கிகள்-56**
**ஆர்.பி.ஜிக்கள்-05**
**9 எம்.எம்.பிஸ்டல்கள்-13**
**நடுத்தர மோட்டார்கள்**
**ஷெல்கள்.**
**கிளைமோர்கள்**
**ரவைகள்-41 ஆயிரம்**
**தொலைத்தொடர்பு சாதனங்கள்**

---

# அதிரடி அய்யாத்துரை



**சண்டை நடந்தது** மன்ன குளத்திலை. அரச வானொலி செய்தி அறிக்கையில் வெகு தெளிவாக 'மாங்குளத்தில் புலிகள் முகாம் நிர்மூலமாக்கப் பட்டது' என்று சொல்லிப்போட்டார்கள். மன்ன குளத்தில் இருந்து மாங்குளம் 12கிலோ மீட்டர் தூரத்தில் இருக் கிறது. அரச வானொலிக்கு மட்டும் மன்னகுளமும், மாங்குளமும் ஒரே இடம் எண்டமாதிரி தெரிஞ்சிருக்குது!

**அரச செய்தி அறிக்கையை** கடந்த ஐந்து மாதமாக கேட்டு வரும் ஒருத்தர் கேள்விகளால் வேள்வி செய்து போட்டார். "மூன்று மாதத்திற்கு முன்னரே புளியங்குள நகரைப் பிடிச்சாச்சு. இரண்டு மாதத்திற்கு முன்னர் கனகராயன் குளம் கையுக்குள் வந்தாச்சுது. ஒரு மாதத்திற்கு முன்னர் மாங்குளம் நகரம் விழ்ந்தது. அதையடுத்து கிளிநொச்சி நோக்கி சென்றவை. இத்தனையும் நடந்த பிறகும், அது ரேடியோவிலை, மாங்குளம் நோக்கி முன்னேற்றம், கனகராயன் குளம் நோக்கி முன்னேற்றம் எண்டு திருப்பித் திருப்பி சொல்லுகினம். ஒருவேளை பாட்டுக் கசட்டுக்கள் போடுற மாதிரி, பழைய செய்திக் கசட்டுக்களை திருப்பித் திருப்பி போடுகினமோ?" எண்டு மூச்சுவிடாமல் கேள்வி தொடுத்துப் போட்டார். நான் என்ன பதில் சொல்லுறது? செய்திகளில் சொன்ன ஸ்கோர்படிபார்த்தால், படையினர் வன்னியில் சண்டைபோட ஆளில்லாமல் மரம் செடி கொடிகளுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றல்லோ நினைக்கவேண்டி இருக்கும்!

**உள்ளூராட்சித் தேர்தலுக்கு** ஒரு கட்சிக்கு குறைந்தது 200 பேராவது வேணும். தமிழ்க் கட்சிகள் சில ஆள் பிடிப்பதில் தீவிரமாய் ஒடுப்பட்டுத் திரிகினமாம். விஷயம் அறிந்த பலர் தமிழ்க் கட்சி ஆட்களைக் கண்டால் துண்டைக் காணோம், துணியைக் காணோம் எண்டு ஒடுகினமாம். அப்படியே அமுக்கிக் கொண்டுபோய் வேட்பாளராக்கிப் போட்டால் என்ன செய்யிறது? அதுதான் அந்த ஒட்டம்!

**வெகுஜன சபை** முன்பாக தமிழ்க் கட்சி ஒன்று உண்ணாவிரதம் இருந்ததாக யாழ் பத்திரிகையில் செய்தி கொடுத்திருந்தவை. ஆனால் இருந்தது மொத்தம் இரண்டுமணிநேரம். எனக்கொரு கடும் சந்தேகம். இரண்டு மணித்தியாலம் சாப்பிடாமல் இருப்பது உண்ணாவிரதம் எண்டால், இவை என்ன மற்ற நேரங்களில் நிமிஷத்துக்கு நிமிஷம் சாப்பிட்டுக் கொண்டோ இருக்கிறவை?! காந்தி இவர்களை மன்னிப்பீர்களாக; இவர்கள் அறிந்தே குறும்பு பண்ணுகிறார்கள்.

**யாழ் நகர** மேஜராவதே கழக மாணிக்கத்தின் இலட்சியம் எண்டு நான் குறிப்பிட்டது சரியாய்ப் போச்சு பார்த்தியளோ? கூட்டாக சேர்ந்து தமிழ்க் கட்சிகள் போட்டியிடலாம் எண்டு ஒரு முயற்சி நடந்ததாம். "கூட்டுப் பற்றி பேசுவதானால், யாழ் மாநகரசபை எங்களுக்கு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்" எண்டு முன்நிபந்தனை போட்டதாம் கழகம்! ஜனநாயகக் கட்சியினரும் விட்டுக் கொடுக்கிறமாதிரி இல்லை! களத்தில் சந்திக்கலாம். தேர்தல் முடிவு வந்த பின்னர் யார் கவலைப்படவேண்டி இருக்குதோ, அப்போது சிந்திக்கலாம் எண்டு சொல்லிப்போட்டினம். சபாஷ், சரியானபோட்டி!

**ரெண்டு எழுத்தாரின்** பிடியில் இருந்த இரண்டு சிப்பாய்கள் தப்பி வந்ததாக அரச செய்திகளில் கூறப்பட்டதல்லோ. பின்னர் பேச்சுமூச்சு இல்லை. ஏதோ 'பம்ஸ்' விட்டிருக்கினம் எண்டு எனக்கு விளங்கிப்போட்டுது. தலைநகர ஆங்கில பத்திரிகை ஒன்று விஷயத்தை உடைச்சிருக்குது. படையைவிட்டு தப்பியோடிய இரண்டு பேர் வீரப் பட்டம் பெறுவதற்கு விட்ட கதையாம். கதை கேட்ட அதிகாரிக்கு சந்தேகம் வர, கொடுக்க வேண்டிய கைவிசேஷத்தை கொடுக்க, உண்மைகள் பட்டுப் பட்டென்று கொட்டியதாம்! ரெண்டு எழுத்தார் புண்ணியத்தில் யார் யாரெல்லாம் குளிர்காய்கினம் பார்த்தியளோ?!

**சக பத்திரிகையாளர்** ஒருவர் சிறைக் கைதிகள் போராட்டத்தில் தாக்கப்பட்டார். தகவலுக்கு பொறுப்பான அதிகாரமுள்ள மங்களத்தார் அச் செயலை கண்டித்திருக்கிறார். கண்டிச்சு என்ன புண்ணியம்? தண்டிக்க வேண்டாமோ?

**இவ்வாரம்** பொன்மொழிக்கு பதிலாக ஒரு குட்டிக் கவிதை. எழுதியவர் ச.அண்ணாமலை.

**காதல்**

"இது ஒரு கடல்
நீந்தி கடந்தவர்கள்
பேசப்படுகிறார்கள்
மூழ்கிக் கவிழ்ந்தவர்கள்
விசப்படுகிறார்கள் – ஆயினும்
ஆயிரம் கனவுகளோடு
ஆயிரம் இதயங்கள்
அதன் கரையில்...!" ■



படிப்பகம்

www.padippakam.com

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்டதை அடுத்து ஒரு கதை பரவியது.

பிரேமதாசாவும், புலிகளும் சேர்ந்து தான் அமிர்தலிங்கத்தை தீர்த்துக் கட்டினார்கள் என்றும், அமிர் கொல்லப்படப் போகிறார் என்பது பிரேமதாசாவுக்கு முன்னரே தெரிந்திருந்தது எனவும் கதை அடிபட்டது.

அக் கதையில் எவ்வித உண்மையும் இருக்கவில்லை. அமிர் கொலையான செய்தி பிரேமதாசாவுக்கும் முதலில் அதிர்ச்சியாகவே இருந்தது.

எனினும் அக் கொலைக்கு புலிகள் தெரிவித்த மறுப்பை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுமாறு அரச வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து உத்தரவுகள் பறந்தன.

கொலையில் புலிகளுக்கு சம்பந்தம் இருப்பது நிரூபிக்கப்பட்டால், தன்மீதும் பழி விழும் என பிரேமதாசா நினைத்தார்.

இனத்தின் விமோசனத்துக்கு எதிரானவர் என்று கூறுவதும், அவர் இறந்தபின்னர் இனத்தின் தலைவர் என்று கூறுவதும் கேடு கெட்ட சம்பிரதாயம்.

'இருக்கும்வரை செருப்பால் அடித்து விட்டு, இறந்த பின்னர் குடை பிடித்தானாம்' என்ற முதுமொழிதான் இப்படியான சந்தர்ப்பங்களில் நினைவுக்கு வரும்.

அமிர் கொலையை தங்களுக்கு சாதகமான அரசியலாக்கிக் கொள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். விரும்பியது.

அமிரின் உடல் வடக்கு-கிழக்கு மாகாணசபை செயலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும் என்று பெருமாள் அறிவித்தார்.

மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு அமிரின் உடலைக் கொண்டு சென்று அஞ்சலிக்காக வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய அஞ்சலிக் கூட்டங்களால் மக்களிடம் தோன்றும் அனுதாபம், புலிகளுக்கு எதிராகத் திரும்பும் என வரதராஜப்பெருமாள் எண்ணியிருந்தார்.




அமிர்மீது உமாவுக்கு அனுதாபம் ஏற்படவே வழியிருக்காதல்லவா.

உமாமகேஸ்வரன் தனது கைப்பட எழுதி அமிர் மறைவுக்காக வெளியிட்ட அறிக்கை இதுதான்:

"தமிழ் மக்களிடம் விடுதலை வேட்கையை ஏற்றிவைத்த தலைவர் அமிர்தலிங்கம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மிக நீண்டகாலமாக தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டவர்கள் அமரர்கள் அ.அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன். இருவரது இழப்பும் தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்."

சின்னதாக ஒரு நாடகம் ஆடினார். கல் ஒன்று தன்மீது பட்டு, தனக்கும் காயம் ஏற்பட்டதாக பத்திரிகையாளர்களிடம் கூறினார் வரதராஜப்பெருமாள்.

திருமலையில் அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் பூத உடல்கள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

பலாலி விமான நிலையத்தில் இருந்து ஊர்வலமாக பூத உடல் தாங்கிய இரதங்கள் கொண்டு செல்லப்பட்டன.

வீதிகளின் இருமருங்கிலும் வாழை மரங்களும் தோரணங்களும், கறுப்பு, வெள்ளைக் கொடிகளும் அசைந்தாடிக் கொண்டிருந்தன. சந்திகள் தோறும் ஒலிபெருக்கிகள் மூலம் சோக இசை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அமிர்தலிங்கத்தின் பூத உடல் மூளாயில் உள்ள அவரது இல்லத்திலும், யோகேஸ்வரனின் பூத உடல் அவரது நல்லூர் இல்லத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

யாழ் நகர் எங்கும் கடைகள், அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டு சோகமான சூழ்நிலையே எங்கும் காணப்பட்டது.

அமிர் கொலை தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் பரவுவதை தடுப்பதற்காகவே அரசு அவ்வாறு செய்திருந்தது.

அமிர் கொலைக்கு தாம் பொறுப்பில்லை என்று புலிகள் கூறியதை அநேகமானோர் நம்பவில்லை என்பதும் உண்மை.

இதற்கிடையே இன்னொரு சம்பவம். அமிர்தலிங்கத்தின் பூத உடல் கொழும்பு புல்லர்ஸ் வீதி வீட்டில் வைக்கப்பட்டு இருந்தபோதே, பாராளுமன்றத்தில் காலியான அமிரின் இடத்திற்கு யாரை நியமிப்பது என்ற பிரச்சனை கிளம்பிவிட்டது.

அமிரின் மறைவின் பின்னர் கூட்டணியில் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜா. மாவைக்கு தான் எம்.பி.யாக வேண்டும் என்று ஆசை.

அவரது ஆசையிலும் நியாயம் இருக்கவே செய்தது.

இயக்கங்களின் அச்சுறுத்தல் காரணமாக கூட்டணித் தலைவர்களாக இருந்தவர் தாம் உண்டு தங்கள் பாடு உண்டு என்று ஒதுங்கிப் போயினர்.

தமிழ்நாட்டில் சென்னையில் இருந்த கூட்டணி அலுவலகப் பக்கமே தலை வைத்து படுக்காதவர்கள் பட்டியலில், இன்று கூட்டணித் தலைவர்களாக உள்ள வீ.ஆனந்தசங்கரி, நீலன், இரா.சம்பந்தன் ஆகியோரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அமிர், யோகேஸ், மாவை சேனாதிராஜா போன்றோர்தான் கூட்டணியை அழியாமல் தக்கவைத்துக் கொண்டனர்.

அது மட்டுமல்லாமல், 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் இளைஞர் பேரவையில் இருந்து காசி ஆனந்தன் தேர்தலில் நிறுத்தப்பட்டார். மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன் ஆகியோருக்கும் சந்தர்ப்பம் கொடுத்திருக்க வேண்டும். கொடுக்கவில்லை.

எனவே, அமிரின் காலியான இடத்தை தான் கைப்பற்ற வேண்டும் என்று மாவை நினைத்ததில் தப்பில்லை.

எனினும் மாவை சேனாதிராஜா எம்.பிப் பதவியைப் பெறுவது கூட்டணிக்குள் சில பிரமுகர்களுக்கு பிடித்தமாக இருக்கவில்லை.

எனினும் கூட்டணியின் செயலதிபர் என்ற நிலையில், அடுத்த எம்.பி. யார் என்பதை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கும் அதிகாரம் மாவை சேனாதிராஜாவின் கையில்தான் இருந்தது.

எனவே, தன்னைத் தானே தேர்ந்தெடுத்து தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் கொடுத்தார் மாவை சேனாதிராஜா. நாடாளுமன்ற உறுப்பினரானார்.

# அமிர் கொலையும் கட்டிவிடப்பட்ட கதையும்

அது மட்டுமல்லாமல், புலிகளின் உதவி பிரேமதாசாவுக்கு அவசியப்பட்ட சந்தர்ப்பம் அது.

அதனால், புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சுகளுக்கு அமிர் கொலைச் செய்தி குந்தகமாக அமைந்துவிடக்கூடாதே என்றும் பிரேமதாசா கவலைப்பட்டார்.

மேற்கண்ட காரணங்களால் அமிர் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்பதை வெளியே தெரியாமல் மறைப்பதில் பிரேமதாசாவுக்கும் அக்கறை இருந்தது மட்டும்தான் உண்மை.

அமிர், யோகேஸ் கொலையில் நேரடியாக ஈடுபட்டவர்கள் எவரும் உயிருடன் பிடிக்கப்படாமல் போனதும் அரசாங்கத்திற்கு நிம்மதியான விடயம்.

விசு, அலோசியஸ் இருவருமே உடனடியாக இறந்து போயினர். அமிர் வீட்டின் 'கேட்' அருகே வைத்து சுடப்பட்ட சிவகுமாருக்கு மட்டும் உயிர் இருந்தது.

உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு சென்றிருந்தால் அவர் உயிர்தப்பி யிருக்க வாய்ப்பும் இருந்தது.

ஆனால், அவருக்கு அருகே உடனே செல்வதற்கு யாருக்கும் துணிச்சல் இருக்கவில்லை. சம்பவம் அறிந்து முதலில் ஸ்தலத்துக்கு வந்த பொலிஸ் குழுவினருக்கு, ஒரு புலி உயிருடன் இருக்கிறார் என்று யாரோ சொல்லிவிட்டனர்.

வந்தவழியே ஜீப் பின்னோக்கிச் சென்றது. புலி ஒன்று உயிருடன் இருக்கிறது என்று அந்தச் சுற்றுவட்டாரத்திலும் கிலி பரவிவிட்டது

அதன்பின்னர் வந்த பொலிசார்தான் பலியான உடல்களை நெருங்கினார்கள்.

எப்படியோ கொலையில் நேரடியாக ஈடுபட்டவர்கள் எவரும் பிடிபடாமல் போனது அரசுக்கும், புலிகளுக்கும் உடனடியாகப் பயன் அளித்தது.

## மௌனம்

அமிர் கொலையைக் கண்டித்து பரவலான கண்டனங்கள் எழத் தொடங்கின.

அமிர்தலிங்கம் கொலையான செய்தியைக் கேள்விப்பட்டதும், புல்லர்ஸ் வீதி இல்லத்துக்கு முதலில் விரைந்து சென்றவர் புளொட் இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரன்.

முதலில் கண்டன அறிக்கை வெளி

1989ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் சென்ற அமிர்தலிங்கத்தை அசோகா ஹொட்டலைவிட்டு வெளியே செல்லவே முடியாமல் தடுத்துவைத்து, திருப்பி அனுப்பியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.


## அநாகரிகச் செயல்

மட்டக்களப்புக்கு விமானம் மூலமாக அமிரின் பூத உடல் கொண்டு செல்லப்பட்டது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்

## கருணாநிதி அதிர்ச்சி

அப்போது தமிழக முதல்வராக இருந்த, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதிக்கும் புலிகளுக்கும் இடையே உறவுகள் பலப்பட்டிருந்த நேரம் அது.

எம்.ஜி.ஆர் பதவியில் இருந்தபோது



அமிர் உயிருடன் இருந்தபோது யாழ்ப்பாண மண்ணை மிதிக்க விடாதவர்கள், உயிர் இழந்தபின்னர் உடலைக் கொண்டு செல்ல முன்வந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், ஈ.பி.டி.பி, ரெலோ உட்பட பல அமைப்புக்கள் அமிர் கொலைக்கு புலிகளே காரணம் என்று அறிக்கை விட்டிருந்தன.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் கொலைக்கு யார் காரணம் என்பதைப் பற்றி மூச்சுக்காட்டவில்லை.

அதுபற்றிக் கேட்டபோது ஒரு மூத்த உறுப்பினரான பிரமுகர் கூறிய பதில்: "அமிர் போய்விட்டார். கவலைதான். அதற்காக அவர் பின்னால் எங்களையும் போகச் சொல்கிறீர்களா?

களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பில் அஞ்சலி முடிந்தபின்னர் அமிர், யோகேஸ் ஆகியோரின் உடல்கள் திருமலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

திருமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாணசபை செயலகத்தில் பூத உடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

திருமலை முற்றவெளி மைதானத்தில் இருந்து ஊர்வலமாக மாகாணசபை செயலகத்திற்கு உடல்கள் கொண்டு செல்லப்பட்டன.

மாகாணசபை செயலக வாயிலில் மாகாணசபை தொண்டர்படை, இந்தியப் படை ஆகியன அணிவகுப்பு மரியாதை வழங்கின.

பெரும் திரளான மக்கள் இறுதி அஞ்சலி தெரிவிக்கத் திரண்டிருந்தனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக திருமலைக்கு சென்றிருந்தார்.

பிரேமதாசா வரப்போகிறார் என்ற தகவல் அறிந்ததுமே, அவர்மீது தாக்குதல் நடத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க முக்கியஸ்தர்கள் சிலர் திட்டமிட்டனர்.

அதில் முன்னின்றவர் திருமலைப் பொறுப்பாளராக இருந்த ஜோச். மக்களோடு மக்களாக நின்று பிரேமதாசாவுக்கு எதிராக கோஷம் போடுவதற்கும், கற்களையும், செருப்புக்களையும் வீசுவதற்கும் தங்கள் ஆட்களை ஏற்பாடு செய்தார் ஜோச்.

திருமலை முற்றவெளி மைதானத்தில் பிரேமதாசா வந்திறங்கியதுமே அவருக்கு எதிராக கூச்சல்கள் எழுந்தன.

கற்களும், செருப்புக்களும் பிரேமதாசாவை நோக்கி வீசப்பட்டன.

இந்தியப் படையினர் பிரேமதாசாவைச் சூழ்ந்துகொண்டு பாதுகாப்பளித்தனர்.

எனினும் இத்தகைய சலசலப்புக்கள் பிரேமதாசாவுக்கு புதியவை அல்ல. அவரே இது போன்ற எத்தனையோ வேலைகளை செய்வித்துப் பழக்கப்பட்ட, பழம் தின்று கொட்டை போட்ட அரசியல்வாதி.

அஞ்சலி செலுத்தாமல் பிரேமதாசா திரும்பிச் சென்றுவிடுவார் என்றுதான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் நினைத்தனர்.

ஆனால், மாகாணசபை செயலகத்திற்கு சென்று இறுதி அஞ்சலி செலுத்திவிட்டுத்தான் பிரேமதாசா திரும்பிச் சென்றார்.

மக்கள் உணர்ச்சிவசப்பட்டுவிட்டது போன்றும், அவர்களைச் சமாதானப் படுத்துவது போன்றும் வரதராஜப் பெருமாள்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



ஐலண்ட்' வெளியிட்ட காட்டூன்

யிட்டவர் வரதராஜப்பெருமாள். அமிர்தலிங்கம் உயிருடன் இருந்தபோது சொற்களால் சுட்டவர் பெருமாள்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர், பின்கதவு வழியாக பாராளுமன்றத்துக்குச் சென்றவர் என்றெல்லாம் பிரசாரம் செய்தவர் பெருமாள்.

கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டுக் கொண்டே அமிர்தலிங்கத்தை தோற்கடிக்க அயராது உழைத்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

அதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும், பெருமாளும் "அமுதரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. தமிழர்களின் மூத்தபெரும் தலைவரை பறிகொடுத்துவிட்டோம்" என்று அறிக்கை விட்டிருந்தனர்.

ஒருவர் உயிருடன் உள்ளபோது

## உமாவின் அறிக்கை

புலிகள் இயக்கத்துக்குள் பிரச்சனை ஏற்பட்டு உமா குழுவினர் தனியாக இயங்கியதை இத் தொடரின் ஆரம்ப அத்தியாயங்களில் விபரித்திருந்தேன்.

உமா குழுவில் முக்கிய தலைவராக இருந்தவர் சுந்தரம். புதிய பாதை பத்திரிகையின் மூலகர்த்தா. சுந்தரத்தை யாழ்ப்பாணத்தில் சித்ரா அச்சகத்தில் வைத்து புலிகள் சுட்டுக் கொன்றனர். இச் சம்பவங்களும் முன்னர் கூறப்பட்டதுதான்.

சுந்தரத்தைக் கொலை செய்யுமாறு பிரபாகரனை தூண்டிவிட்டவர் அமிர்தலிங்கம் என்று தன் வாயாலேயே கூறியவர் உமா மகேஸ்வரன்.

அக் குற்றச்சாட்டு உண்மையானால் தன் சக தோழனை கொலை செய்வித்த

தமிழக அரசினர் விடுதியில் அமிர் தங்க ஏற்பாடு செய்திருந்தார்.

தி.மு.க. பதவிக்கு வந்த பின்னர். அந்த விடுதியை காலி செய்யுமாறு திடீர் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதனால் அமிர் மிகவும் மனம் வருந்தினார். "என்னுடைய பொருட்களைக்கூட ஒழுங்காக கட்டி எடுத்துச் செல்லவும் அவகாசம் தரமாட்டார்கள் போல் இருக்கிறது" என்று தன்னைச் சந்திக்கச் சென்றவர்களிடம் வேதனையுடன் கூறினார் அமிர்.

பின்னர் அமிர் கொலையானபோது, அக் கொலைக்கு காரணம் புலிகள் என்பது கருணாநிதிக்கு அறியமுடியாத விஷயமல்ல. ஆயினும் பட்டும் படாமல் ஒரு அறிக்கை வெளியிட்டார் கலைஞர் கருணாநிதி. அந்த அறிக்கை இதுதான்:

"தூய தமிழன் அமிர்தலிங்கமும் அவரது வலது கரமாக விளங்கிய யோகேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது, தமிழ் மக்களின் இதயங்களில் பாய்ந்த வேல்களாகும்.

யார், எந்தக் குழுவினர் இந்தச் செயலில் ஈடுபட்டிருந்தாலும் கண்டிக்கப்படவேண்டிய செயலாகும்.

இலங்கையில் இரத்தக் களரி அடங்குவதற்கு எல்லோரும் சேர்ந்து ஒரு வழி காணவேண்டும். இதில் இந்திய அரசு தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது என்பதே எனது திடமான கருத்தாகும்." என்று அறிக்கை விட்டிருந்தார்.

## பதவிச்சண்டை

அமிர் கொலையான சூட்டோடு சூடாக செய்தி அறிவதற்கு இந்தியாவில் உள்ள செய்தியாளர்கள் முயன்றனர்.

ஆனால், கொழும்புக்கான தொலைபேசி அழைப்பை அவர்கள் பெறமுடியவில்லை. இந்தியாவுக்கான தொலைபேசி இணைப்புக்களை தற்காலிகமாக துண்டித்து வைத்திருந்தது இலங்கை அரசாங்கம்.

## வன்னிப் போர்

இந்தியப் படையினர் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுக்களை யிட்டு ஆத்திரம் கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவில் வீடு வீடாக தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டன. புலிகள் இயக்கத்தின் தலைவர்களைத் தேடியே வேட்டை நடத்தப்பட்டது.

வன்னிக் காடுகளுக்குள் புலிகளை தேடி அழிக்கும் நடவடிக்கையின் முக்கிய தளமாக நித்திகைக்குளம் விளங்கியது. அங்குதான் இந்தியப் படையின் பாரிய முகாம் இருந்தது.

அங்கிருந்துதான் வன்னிக் காட்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வழிநடத்தப்பட்டன.

இந்த நித்திகைக்குள முகாமில் 1988 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. 'இந்தியா வீக்' என்ற பத்திரிகை அதனை 1989 ஜூனில் வெளியிட்டிருந்தது.

நடந்த சம்பவம் இதுதான்.

இந்தியப் படை தளபதி கல்கட் நித்திகைக்குள முகாமுக்கு ஹெலிகொப்டரில் சென்று இறங்கினார்.

கல்கட் இறங்கியதுதான் தாமதம் ஹெலி புலிகளின் ரொக்கட் தாக்குதலுக்கு உள்ளானது.

கல்கட் பாய்ந்து பதுங்குகுழிக்கு சென்றார். அவர் வந்த ஹெலி தகர்ந்தது.

கல்கட் தப்பியது மாபெரும் அதிஷ்டம்.

தாக்குதல் நடத்திய புலிகள் தப்பிச் சென்றுவிட்டனர். (தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# மன்னிப்புச் சபை அறிக்கையும் உள்ளூராட்சித் தேர்தலும்!

யாழ் குடாநாட்டில் படையினரால் கைதாகி காணாமல் போனோர் பட்டியலில் அறுநூறுக்கும் மேற்பட்டோர் இருந்தனர். அத்தனைபேரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்று, நெஞ்சை உலுக்கும் உண்மையை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

**சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை இலங்கை அரசுக்கு சர்வதேசரீதியாக பலத்த தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான அரசுமீது முதன் முதலாக சர்வதேச அரங்கில் தொடுக்கப்பட்ட பாரிய குற்றச்சாட்டாகவும் இது அமைந்துள்ளது.**

காணாமல் போனோர் பட்டியலில் உள்ள யாராவது ஒருத்தர் உயிரோடு இருந்தால்கூட, அவரை வெளியே கொண்டுவந்து அரசு நிறுத்தியிருக்கும். அதன் மூலமாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையால் தமக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தை குறைக்க அரசு முயன்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**ஆனால், துரதிஷ்டவசமாக அரசுக்கு அத்தகைய சாதகமான நிலையை படையினர் விட்டுவைக்கவில்லை. காணாமல் போனோர் பட்டியலில் உள்ளோர் எவருமே உயிருடன் விட்டுவைக்கப்படவில்லை.**

எனவே, சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை நியாமானதல்ல என்று குறை கூறுவதைத்தவிர, வேறு எதனையும் அரசால் செய்ய இயலாது.

ஆனாலும், தமது மறுப்பைவிடவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைக்கு உலகில் மதிப்பு அதிகம் என்பதையும் அரசு உணராமலில்லை.

வடக்கு-கிழக்கில் புனர்நிர்மானம், அபிவிருத்தி என்பவற்றுக்கும் பெருந்தொகையான நிதி உதவிகள் வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்டு வருகின்றன.

யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர், அங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவென்றும் நிதி உதவிகள் பெறப்பட்டுள்ளன.

**அவ்வாறு பெறப்படும் நிதி உதவிகளில் வடக்கு-கிழக்கில் சிறிதளவே பயன்படுத்தப்படுகின்றன. பெரும் பகுதி ஏனைய பகுதிகளுக்கே செலவிடப்படுகின்றன.**

யாழ் குடாநாட்டு அபிவிருத்திக்கு எனக்கூறி மேலும் பெருந்தொகையான நிதி உதவி பெறும் திட்டமும் ஆட்சியாளர்களிடம் இருக்கிறது.

இவ்வாறான நேரத்தில், வடக்கு-கிழக்கில் மனித உரிமை மீறல்கள் பாரியளவில் இடம்பெறுவதாகத் தெரிந்தால், வெளிநாடுகள் தங்கள் உதவிகளை தாராளமாக வழங்கப்போவதில்லை.

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக என்ற பெயரில் பெறப்படும் நிதி உதவிகள் மட்டுமல்லாமல், நாடு முழுவதுக்குமாக பெறப்படும் வெளிநாட்டு கடனுதவிகளும் பெரிதும் பாதிக்கப்படும்.

**ஏனெனில், தாம் உதவி வழங்கும் நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாக தெரிந்தால், கடன் உதவிகளைக் குறைப்பதும், நிறுத்துவதும் உதவி வழங்கும் நாடுகள் பலவற்றின் கொள்கையாக அமைந்திருக்கிறது.**

அதன் காரணமாகவே, கடன் உதவிகளை நம்பியிருக்கும் நாடுகள், தங்கள் நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதில் முழுக் கவனம் செலுத்தி வருகின்றன. இலங்கை அரசும் அவ்வாறுதான் நடந்துகொள்கிறது.

**அரசியல் தீர்வு பற்றிய வாய் ஓயாத பேச்சுக்கள் மூலமும், சமாதானம் பற்றிய சளைக்காத பேச்சுக்கள் ஊடாகவும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மறுப்புக்கள் உலகின் கண்களில் இருந்து ஆட்சியாளர்களால் மறைக்கப்பட்டு வருகின்றன.**

யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல கிளிநொச்சியில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை சார்ந்த இடங்களிலும் பலர் காணாமல் போயுள்ளனர்.

கிழக்கிலும் காணாமல் போனோர் உட்பட, சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்கள் பலர் புலிகள் என்று முத்திரை குத்தப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

கிழக்கில் கோணேஸ்வரி என்ற தாய், பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டது மட்டுமல்லாமல், பெண் உறுப்பில் கைக்குண்டு வெடிக்கவைத்து கோரமாக கொலைசெய்யப்பட்டார்.

படு பயங்கரமான அச் சம்பவத்தை பெண்கள் அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் அமைப்புக்கள்கூட வலிமையாக கண்டிக்கவோ முழு வீச்சில் உலகின் பார்வைக்கு கொண்டு செல்லவோ முன்வந்திருக்கவில்லை.

**சர்வதேச மன்னிப்புச்சபைகூட யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரத்தை மட்டும்தான் பிரதானப்படுத்தியுள்ளது. ஏனைய பகுதிகளில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்ந்துவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபைக்கு போதிய தகவல்கள் கிடைக்கவில்லையோ தெரியாது.**

எனினும் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல, சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை மூலம் வெளிப்பட்டுள்ள உண்மைகள் அமைந்துள்ளன. வடக்கு-கிழக்கில் நிலைகொண்டுள்ள அரச படைகள் அங்குள்ள மக்களுக்கு எதனை வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உலகம் ஓரளவு உணர்ந்து கொள்ள அந்த அறிக்கை உதவியிருக்கிறது.

**ஆனால், சர்வதேச மன்னிப்புச் சபையால் கெட்டுப்போயுள்ள தனது பெயரை சீர்செய்யவும், யாழ் குடாநாட்டில் இராணுவ ஆட்சி நடைபெறவில்லை என்று வெளியுலகுக்கு தெரியப்படுத்தவும், அரசு கையில் எடுத்துள்ள புதிய உபாயம்தான் உள்ளூராட்சித் தேர்தல்கள்.**

யாழ் குடாநாட்டில் படையினரால் கைதான அறுநூறுக்கு மேற்பட்டோரின் அவலச்சாவுகளை பழைய கதையாக்கிவிட்டு, இப்போது அங்கு நல்ல சூழல் தோன்றிவிட்டது என்று காண்பிக்க ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் தந்திரமே இதுவாகும்.

**அடுத்த ஆண்டில் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தும் யோசனைதான் ஆட்சியாளர்களுக்கு முன்னர் இருந்துள்ளது. சர்வதேச மன்னிப்பு சபை அறிக்கை தமக்கு பாதகமாக அமைந்ததை அடுத்தே. இத்தனை விரைவாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் முடிவுக்கு வந்தனர் ஆட்சியாளர்கள்..**

இத் தேர்தலில் பங்குபற்றும் சகல கட்சிகளுமே அரசின் நோக்கத்துக்கு துணைபோகும் கட்சிகளாகவே மாறியுள்ளன.

உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு வெளியானதும் தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் வெளியிட்ட கருத்துக்கள், எவ்வகையிலும் அரசியல் முதிர்ச்சியை கொண்டிருக்கவில்லை.

அரசை ஆதரித்துவரும் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆகிய கட்சிகளை எவ்வகையிலும் கலந்தாலோசிக்காமல் அரசு தனது முடிவை அறிவித்திருக்கிறது.

அதன்மூலம் மேற்கண்ட கட்சிகளை தனது தேவைக்கு ஏற்ப பயன்படுத்தத்தான் அரசு நினைக்கிறதே தவிர அவற்றுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணமோ, அணுகுமுறையோ அரசுக்கு கிடையாது என்பதும் மேலும் ஒரு தடவை நிரூபணமாகியுள்ளது.

மேற்குறிப்பிட்ட கட்சிகள் தாம் அரசுடன் நிற்பதன் மூலமாக பல நன்மைகளை பெற்றுத் தர முடிகிறது என்று மக்களிடம் கூறுவதும் கேலிக்கிடமாகி வருகிறது.

இக் கட்சிகள் அரசுடன் நிற்பதால் தமிழ் மக்கள் பெற்றுவரும் பலன்களைவிட, இக்கட்சிகளை பயன்படுத்தி அரசாங்கம் பெற்றுவரும் பயன்கள்தான் அதிகமாக உள்ளன. அப்பயன்கள் தமிழ்க்



கட்சிகளை பயன்படுத்தியே தமிழ் மக்களின் நலன்களை சேதமாக்குபவையாகவும் அமைந்து வருகின்றன.

**உள்ளூராட்சித் தேர்தல் முடிவை அரசு அறிவித்தமையும், அதனைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகள் கூறிவரும் பரிதாபகரமான கருத்துக்களும், இக் கட்சிகள் அரசின் கையில் உள்ள கருவிகளாக மாறிவிட்டதையே தெள்ளத் தெளிவாக்கியுள்ளன.**

கருவிகள் தங்களை ஏவும் திசையில் செல்வனவே தவிர, தாமாக திசையை தீர்மானிப்பதில்லை. கருவிகளை ஏவுகிறவர்கள் அவற்றுடன் கலந்தாலோசித்து திசைகளை முடிவு செய்வதும் இல்லை. தமிழ்க் கட்சிகளின் நிலையும் அவ்வாறே அமைந்திருக்கின்றது.

**"தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை அங்கே இல்லை. ஆனால் தேர்தல் நடந்தால் போட்டியிடுவோம்" என்பதுதான் அநேகமாக சகல தமிழ்க் கட்சிகளதும் நிலைப்பாடாக கூறப்பட்டதை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது.**

ஒரு கட்சியாக தம்மைக் கூறிக்கொள்பவர்கள் இவ்வாறு கூறுவது அரசியல்ரீதியில் தங்கள் கையாலாகாத்தனத்தை ஒப்புக்கொள்வதாகவே அமைந்திருக்கிறது.

**மக்களுக்கு விரோதமானவற்றை எதிர்த்து நிற்கவும், அரசின் தவறான முடிவுகளை தடுத்து நிறுத்த போராடுவதுமே கட்சிகளின் கடமையாகும். ஆனால், 'நாம் என்ன செய்வது எல்லாம் அவன் செயல்' என்றரீதியில் பொறுப்பற்றரீதியில் கருத்துக்கூறும் நிலையே இன்று காணப்படுகிறது.**

அரசு நினைத்தால் எப்படியும் தேர்தலை நடத்தி முடிக்கும் என்று இக்கட்சிகள் கூறுமேயானால் அது மக்களை ஏமாற்றுகின்ற கூற்றாகவே இருக்கும்.

சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று, ஒரே குரலில், தேர்தல் முடிவை நிராகரித்திருந்தால், அரசின் பாடு தர்ம சங்கடமாக அமைந்திருக்கும்.

புலிகளும் தேர்தலை நிராகரிக்கும் நிலையில், தமிழ்க் கட்சிகளும் போட்டியிட மறுப்புத் தெரிவித்தால், வேறு எவரும் சுயேட்சையாகவோ, அரச சார்பாகவோ போட்டியிட முன்வருவர் என்பது தற்போதைய சூழலில் நடக்கக்கூடிய காரியமல்ல.

ஆயுதமேந்திய தமிழ்க் கட்சிகளால் மட்டுமே புலிகளின் எச்சரிக்கையையும் மீறி தேர்தலில் போட்டியிட முடியும்.

**எனவே, தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நின்றிருந்தால் உள்ளூராட்சி தேர்தலை மறுபடி ஒத்திபோடுவதைத் தவிர அரசுக்கு வேறு வழி இருந்திருக்காது என்பது தெளிவு.**

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை போராடி பெற்றுத் தரக்கூடிய பலமோ, அரசியல் துணிச்சலோ இன்றுள்ள தமிழ்க் கட்சிகள் எதனிடமும் இல்லை. அமைப்பு ரீதியாக பலத்தையும் துணிச்சலையும் வளர்த்துக் கொள்ளும் போக்கினையும் எக்கட்சியும் கொண்டிருக்கவும் இல்லை.

**ஆனால், யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவிடாமல் செய்யக்கூடிய வாய்ப்பு தமிழ்க் கட்சிகளுக்கு இருந்தது. அதனையும் தவறவிட்டுள்ளன. தங்கள் சின்ன சின்ன ஆசைகளுக்காக, தங்களிடம் உள்ள பலத்தைக்கூட தாங்களே குறைத்துக்கூறுகின்ற பரிதாபகரமான நிலைக்கும் தமிழ்க் கட்சிகள் சென்றுள்ளன. 'நாம் போட்டியிட மறுத்தாலும் அரசு தேர்தலை நடத்தியிருக்கும்' என்று தமிழ்க் கட்சிகள் கூறிவருவதும் அத்தகையதேயாகும்.**

அதுமட்டுமல்ல, தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை என்று கூட்டணி உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகள் விடுத்திருந்த அறிக்கைகளும்கூட, அரசின் உள்நோக்கத்தை சற்றும் அம்பலப் படுத்தியிருக்கவில்லை.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பற்றிய அறிவிப்பையும், வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான திகதியையும் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களின் தரப்பில் இருந்து நோக்கத் தவறியுள்ளன. தங்கள் கட்சிகளின் வெற்றி வாய்ப்பு என்ற அடிப்படையிலேயே தேர்தல் நடைபெறும் காலகட்டத்தை அவை நோக்கியுள்ளன. மக்களின் நலன்களை தங்கள் கட்சி நலன்களுக்கு கீழ்ப்படுத்தும் போக்கும் இந்தக் கண்ணோட்டம் காரணமாகவே ஏற்படுகின்றது.

**வேட்பாளர்களை திரட்ட நாள் போதுமா? தங்கள் பட்டியலில் போட்டியிட ஆட்கள் இருக்கிறார்களா என்று நோட்டம் பார்க்கக் கூட்டணியினர் ஒரு குழுவை அனுப்பிவைத்தனர். அந்த வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ள சிரமங்கள் இருந்தமையால் தேர்தலை பின்போடும்படி கூட்டணியினர் கோரினர்.**

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வெளியான சூட்டோடு சூடாக, தாம் தேர்தலில் போட்டியிடத் தயார் எனவும், யாழ் மாநகரசபைக்கு தமது முதன்மை வேட்பாளர் யார் என்பதையும் புளொட் இயக்கத்தினர் அறிவித்திருந்தனர்.

தற்போதைய நிலையில் யாழ் நகரில் தமக்கு சாதகமான நிலை இருப்பதாக கருதியதால் ஈ.பி.டி.பி.யினர் மௌனம் சாதித்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ ஆகிய இயக்கங்களும் போட்டியிடுவதா விடுவதா என்பதை தெரிவிக்க முன்பாக, வேட்பாளர் பட்டியலுக்கு ஆட்கள் தேறுவார்களா என்று கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தன.

**பழம் வாய்க்கு எட்டும் வாய்ப்பு இருப்பதாக நினைப்போர் இனிக்கிறது என்றும், எட்டாது என்று தெரிந்தோர் 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று கூறும் நிலையிலுமே தமிழ் கட்சிகளின் நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.**

எனவே, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவோர் துரோகிகள், போட்டியிடாதோர் பொதுநலவாதிகள் என்று அர்த்தமாகிவிடாது.

**அரசு ஒரு முடிவை அறிவிக்கின்றபோது, அந்த முடிவின் நோக்கம் என்ன? பின்னணி என்ன? என்பதையே முதலில் ஆராயவேண்டும். அதனால் தாம் சார்ந்துள்ள மக்களுக்கு நன்மையா? தீமையா என்பதை நிதானமாக கண்டறியவேண்டும். அவற்றின் அடிப்படையிலேயே தங்கள் நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகள் முன்வைத்திருக்க வேண்டும்.**

சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து, வெளியுலகில் தமிழர் தரப்பு நோக்கி அனுதாபம் திரளக்கூடிய சாதகம் ஏற்பட்டிருந்தது.

**அந்த சாதகத்தைக் கெடுப்பதுடன், யாழ் குடாநாட்டில் உள்ள உண்மை நிலையை மூடி மறைத்து, இராணுவ ஆட்சிக்கு சிவில் நிர்வாக முத்திரை குத்தும் முயற்சிகளுக்கும் தமிழ்க் கட்சிகள் துணைபோகின்றன.**

தலைமையில் உள்ளவர்கள் வேறு வேறு என்பது தவிர, வேறெந்த கொள்கை வித்தியாசத்தையோ, அணுகுமுறை வித்தியாசத்தையோ தமிழ்க் கட்சிகளிடம் காண முடியாதுள்ளது. அவ்வாறு இருந்தும் பொதுப் பட்டியலில் போட்டியிடக்கூட இக் கட்சிகளால் முடியவில்லை. இந்நிலையில் இக் கட்சிகளிடம் பரந்தபட்ட நோக்கத்துடனான அணுகுமுறைகளையும், நிலைப்பாட்டையும் எதிர்பார்ப்பது இயலாத ஒன்றேயாகும்.

எனினும் தமது திரைமறைவுத் துரோகங்களை மக்கள் கண்டு கொள்ளமாட்டார்கள், புரிந்து கொள்ளமாட்டார்கள் என்று நம்புகின்ற தமிழ்க் கட்சிகளின் துணிச்சல் வியப்புக்குரியதேயாகும்.

---

# திசை திருப்பும் போராட்டங்கள்

"காணாமல் போனோர் எங்கே? கொல்லப்பட்டு விட்டார்களா? சர்வதேச. மன்னிப்புச் சபையே! அரசே! இது உண்மையா?"

கொழும்பில் புளொட் நடத்திய இரண்டு மணிநேர சத்தியாக்கிரகத்தில் ஒரு அட்டையில் எழுதப்பட்டிருந்த வாசகங்களே அவை.

காணாமல் போனோர் கொல்லப்பட்டு விட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபைதான் தெளிவாகக் கூறிவிட்டதே, பின்னர் என்ன சந்தேகம்?

'சர்வதேச மன்னிப்புச் சபையே! அது உண்மையா?' என்று கேட்டால், அந்த அறிக்கையில் சந்தேகம் இருப்பது போலத்தானே அர்த்தம். அதனால் யாருக்கு லாபம்? அரசுக்குத்தான்!

மன்னிப்புச் சபை அறிக்கை தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கே நம்பிக்கை இல்லாது போனால், அதனை உலகம் எப்படி நம்பும்?

புளொட் அரசுடனும், படையினருடனும் இணைந்து செயற்படும் இயக்கம். காணாமல் போனோர் யாருமே உயிருடன் இல்லை என்ற தகவல்கூட இதுவரை அந்த இயக்கத்துக்கு தெரியாமல் இருக்காது.

பின்னர் ஏன் காணாமல் போனோர் உயிருடன் இல்லை என்ற விடயத்தை நேரடியாகச் சொல்லத் தயங்க வேண்டும்?

காரணம் இல்லாமல் இல்லை.

அறுநூறுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பது உண்மைதான் என்பதை மக்களிடம் கூறினால், 'இனியும் ஏன் அரசை ஆதரிக்கிறீர்கள்?' என்ற கேள்வி எழும். என்ன பதில் கூறுவது?

காணாமல் போனோருக்காக குரல் கொடுப்பதில் ஏற்பட்டுள்ள போட்டா போட்டிக்கு காரணமே யாழ் குடாநாட்டில் உள்ள வாக்கு வங்கிகளின் மீதுள்ள காதல் தான்.

அறுநூறுபேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பதை தாமே கூறினால், பலியானோரின் உறவினர்களின் வாக்குகள் மட்டுமல்ல, மக்களின் வாக்குகளும் அரசுக்கு சார்பான கட்சிகளுக்கு எதிராகவே திரும்பும்.

எனவேதான் காணாமல் போனோரை அவர்களது உறவினர்களுடன் சேர்ந்து தேடுவதுபோல நடிப்பதும், அவர்கள் உயிரோடு இருப்பது போன்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருப்பதும், அடிக்கடி காணாமல் போனோர் பெயரில் போராட்டம் நடத்தி பிரபலம் தேடுவதும்... என்று பல்வேறு தந்திரங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

உண்மையில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலையையும், தங்கள் உறவினர்கள் பலியானதால் ஏற்படக்கூடிய மக்களின் தார்மீகக் கோபங்களையும் தடுத்து திசை திருப்பவே தமிழ்க் கட்சிகள் முற்படுகின்றன. அவ்வாறான முயற்சிகளுக்கு மக்களுக்கான



போராட்டம் என்று சாயம் பூசுவதுதான் முற்றிலும் முரண்பாடானது.

இனியும் 'காணாமல் போனோர்' என்ற பதத்தை பாவிப்பது, அவர்கள் பலியானதை மூடிமறைக்கும் கபடத்தனமாகும்.

உண்மையில் என்ன செய்ய வேண்டும்?

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை வெளியானதும், தமிழ்க் கட்சிகளும், மனித உரிமை அமைப்புக்களும் அரசுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கியிருக்க வேண்டும்.

1. யாழ் குடாநாட்டில் படையினரால் கைதாகி கொல்லப்பட்டோருக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கவேண்டும்.

2. பலியானவர்களை நம்பியிருந்த குடும்பங்களுக்கு . உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும்.

3. கைதுக்கும், கொலைக்கும் காரணமான படையினர் கண்டறியப்பட்டு தகுந்த தண்டனை வழங்கவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள்தான் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இவைதான் அரசுக்கு நெருக்கடியாக அமைவதுடன், தப்பித் தவறி யாராவது உயிருடன் இருந்தால்கூட விடுதலை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கும்.

ஆனால், மேற்கண்ட கோரிக்கைகள் அரசுடன் நேரடியாக முரண்படும் நிலையை உருவாக்கும் என்பதால், யாருமே அக் கோரிக்கைகளை முன்வைக்கப் போவதில்லை.

உண்ணாவிரதம் என்று அறிவித்துவிட்டு பின்னர் சத்தியாக்கிரகம் என்று புளொட்டின் போராட்டம் முடிவடைந்தது. பொலிசாரின் வேண்டுகோளை செவிமடுத்து சுருக்கமாக முடித்துக் கொண்டனர்.

சத்தியாக்கிரகத்தை பழரசம் கொடுத்து முடித்து வைத்தார்கள். இது ஒரு புதுமைதான்.

உண்ணாவிரதம் இருந்தால்தான் பழரசம் கொடுத்து முடித்துவைப்பது வழக்கம். சத்தியாக்கிரகத்தில் அவ்வாறு செய்வதில்லை.

ஆயுதப் போராட்ட விதிகளைத்தான் புரிந்துகொள்ளாமல் போனார்கள் என்றால், சாத்விகப் போராட்ட விதிகளையும் கேலி செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

எப்படியிருப்பினும், பத்திரிகைகளில் செய்திகள், புகைப்படங்கள் வந்தது இலாபம். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு மூலதனம்.

மனித கௌரவத்திற்கான அமைப்பு என்ற பெயரில் ஒரு குழுவினரும் கொழும்பில் போராட்டம் நடத்தினார்கள். 'மாபெரும் போராட்டம்' என்று போராட்டம் நடக்க முன்னரே பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தனர்.

"யாழ் குடாநாட்டை படையினர் மீட்க வந்தபோது அச்சம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர்" என்று அந்த அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

படையினர் மீட்க சென்ற மீட்பாளர்கள் என்றால், இவர்கள் யாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்?

போராட்டங்கள் நடத்த முன்னர் தாங்கள் எந்தப் பக்கம் நிற்கிறோம்? ஒடுக்கப்படுவோர் சார்பாகவா? ஒடுக்குகின்றவர்கள் சார்பாகவா? என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

இல்லையெனில் மக்களின் உணர்வுகளை திசை திருப்பவே இப் போராட்டங்கள் பயன்படும். அதுதான் நடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி



73

தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

1981 பெப்ரவரி 4
பெஹ்மாய் என்னும்
கிராமத்திற்கு ஸ்ரீ ராம் சகோதரர்கள்
வருவதாக செய்தி அறிந்து
பூலான் குழுவினர் செல்கின்றனர்.
அங்கு பஞ்சாயத்து நடந்து
கொண்டிருந்தது.
கிராமத்தினர் கூடியிருந்தனர்.
ஸ்ரீ ராம் சகோதரர்கள் கலந்துகொள்ளும்
திருமணவீடு அதுதான் என்று
தப்பாக நினைத்து
சுடத் தொடங்குகின்றனர்.
பூலான் குழுவினர்....

**இனி...**

சிதறி ஓடியவர்களில் பத்துக்கு மேற்பட்டோர் துப்பாக்கிக் குண்டு பட்டு சுருண்டு விழுந்தனர். மேலும் பலர் காயங்களுடன் இரத்தம் கொட்டக் கொட்ட ஓடிக் கொண்டிருந்தனர்.

சுருண்டு விழுந்தவர்களில் சில பெண்களும் இருந்தனர்.

"வேண்டாம், ஆண்களை மட்டும் சுட்டுத்தள்ளுங்கள்!" என்று உரத்துக் கத்தி உத்தரவிட்டாள் பூலான்.

கிராம நுழைவாயிலில் பூலானை எதிர்பார்த்து வலைவிரித்திருந்த குஜாலுக்கும் அவன் ஆட்களுக்கும் முதலில் ஒன்றுமே புரியவில்லை.

இன்னமும் ஸ்ரீராம் சகோதரர்கள் மணமகனை அழைத்துக் கொண்டு கிராமத்திற்குள் செல்லவில்லை. பூலான் குழுவினரும் உள்ளே போனதாகத் தெரியவில்லை. பின்னர் எப்படி வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன? என்று யோசித்தான் குஜால்.

எதற்கும் என்ன நடக்கிறது என்று பார்த்துவிடலாம் என்று தன் ஆட்களுடன் கிராமத்திற்குள் புகுந்தான் குஜால்.

கிராமத்திற்குள் சிறிது தூரம் சென்றதும் மரண ஓலங்கள் குஜாலுக்குக் கேட்டன. பலர் அவர்கள் முன்பாக ஓடிவந்து கொண்டிருந்தனர்.

கிராமத்தையே கூண்டோடு அழிக்கத்தான் பூலான் கோஷ்டி வந்திருக்கிறது என்று நினைத்து, கிராமத்தைவிட்டு வெளியேறும் நோக்கில் அவர்கள் ஓடிச் சென்றனர்.

குஜால் தன் ஆட்களுடன் குறுக்கே நின்று வழி மறித்தான். அவர்களையும் பூலானின் ஆட்கள் என்று நினைத்தனர் திரும்பி வந்த வழியே ஓட ஆரம்பித்தார்கள்.

குஜால் வானத்தை நோக்கிச் சுட்டு எச்சரித்தான்.

"நில்லுங்கள், நாங்கள் உங்களைக் கொல்ல வரவில்லை" என்று குரல் கொடுத்தான்.

சிலர் நின்றனர். ஏனையோருக்கு மரணப் பயம் காரணமாக குஜால் குரல் கொடுத்தது காதுகளில் விழவே இல்லை.

நின்றவர்களைப் பிடித்து "யார் அங்கே சுட்டுக்கொண்டிருக்கிறார்கள்?" என விசாரித்தான் குஜால்.

அவர்களுக்கு நா எழ மறுத்தது. பெயரைச் சொல்லவே அச்சமாக இருந்தது.

"பூ...பூ..பூலான்தே..வி வந்துவிட்டாள்..."

"எத்தனைபேர் இருக்கிறார்கள்?"

மரண பயத்தில் ஓடிவந்தவன் கண்ணுக்கு-பூலானுடன் நூற்றுக்கணக்கானோர் வந்துள்ளனர் என்றுதான் நினைப்பு இருந்தது. "நூறு நூற்றம்பதுபேர்" என்றான்.

குஜால் யோசித்தான். "பூலான் தேவி புத்திசாலி. பெரும் படையோடுதான் வந்திருக்கிறாள். இப்போது மோதுவது சரியல்ல என்று நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய் குசுமா?"

அப்படி அவன் கேட்டதுதான் தப்பானது. பூலானை புத்திசாலி என்று குஜால் புகழ்ந்தது குசுமாவுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

"நீ வீரன் என்று நினைத்தேன். ப்பூ.. இவ்வளவுதானா? இதற்கு, அந்த ஸ்ரீராம் எவ்வளவோ மேல்.." என்றாள்.

குஜாலுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. ஸ்ரீராமுடன் தன்னை ஒப்பிடுகிறாளே என்று அவமானமாக இருந்தது.

"பூலானின் தலை இன்று உன் காலடியில் இருக்கும், போதுமா, வாங்கடா" என்றான். அதுதான் அவன் செய்த முட்டாள்தனம்.

முன்னால் சென்ற குஜால், சட்டென்று நின்று, கிராம ஆட்கள் இருவரை அழைத்தான்.

"அடுத்த கிராமத்திற்கு மணமகன் அழைப்புக்காக சென்றுள்ளவர்களிடம் இங்கே வரவேண்டாம் என்று தகவல் கொடுத்துவிடுங்கள். விரைவாகச் செல்லுங்கள்" என்றான். அது மட்டும் தான் குஜால் செய்த ஒரே ஒரு புத்திசாலித்தனமான காரியம்.

கிராம ஆட்கள் இருவர் வழிகாட்ட குஜால் தன் ஆட்களுடன் கிராமத்துக்குள் சென்றான்.

பஞ்சாயத்து நடைபெற்ற இடத்துக்கு அவர்கள் போனபோது, பஞ்சாயத்துத் தலைவர் இரத்த வெள்ளத்தில் சரிந்து கிடந்தார்.

ஆங்காங்கே பல உடல்கள் துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்ட நிலையில் கிடந்தன.

பூலான் ஆட்களை எங்கும் காணவில்லை. குஜாலுக்கு உள்ளூர சந்தோஷமாக இருந்தது.

குசுமாவுககு வீரமாகக் காட்டிக் கொண்டானே தவிர, பூலான் ஆட்களின் பலம் தங்களைவிட அதிகமாக இருப்பதை நினைத்து உள்ளூரப் பயந்துகொண்டு தான் வந்தான்.

பூலான் போய்விட்டாள் என்றதும் குசுமாவுக்கு வீரம் காட்ட நினைத்தான் குஜால்.

"அடியே.. எங்கேயடி ஒழிந்து கிடக்கிறாய்? குஜால் வந்திருக்கிறேன். எங்கேயடி உன் ஆட்கள்? கூட்டிவாடி" என்று தொண்டை நரம்புகள் புடைக்க கத்தினான்.

பூலானும், அவள் ஆட்களும் கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டனர் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில்தான் குஜால் சவால் விட்டான்.

ஆனால், நடந்தது எதிர்பாராத காட்சி. குஜாலின் காதோரமாகக் கேட்டது வேட்டொலி.

அதிர்ந்துபோன குஜால், தன் துப்பாக்கியை உயர்த்த நினைத்தான்.

நினைக்க மட்டும்தான் முடிந்தது.

குஜாலின் வலது கையில் துப்பாக்கிக் குண்டொன்று பாய்ந்தது. குஜால் "அம்மா" என்று முனகி, தன் துப்பாக்கியை கீழே போட்டான்.

சுட்டவன் மான்சிங்.

"எல்லோரும் சரணடையுங்கள். உயிர் பிழைக்க அதுதான் ஒரேவழி" ஒலிபெருக்கியில் பூலானின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

ஒரு கையில் துப்பாக்கியுடனும், மறுகையில் ஒலிபெருக்கியுடனும் வந்த பூலானைக் கண்டதும் குஜாலின் ஆட்களின் கைகளில் இருந்து துப்பாக்கிகள் கீழே நழுவின.

அத்தனைபேரும் கைகளைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு மண்டியிட்டனர்.

ஒலிபெருக்கியை தன் அருகில் நின்றவனிடம் கொடுத்துவிட்டு, குஜாலின் மார்பை நோக்கி துப்பாக்கியை நீட்டி குறிபார்த்தாள் பூலான்.

குஜாலின் முகம் வெளிறிப் போயிருந்தது. கையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

அவனது முதுகுக்குப் பின்னால் குசுமா ஒளிந்து கொண்டிருந்தாள்.




சுவரொட்டிகளில் பூலான் தேடுதல்

"வாடி தேவடியாளே!" என்றாள் பூலான். குஜாலின் முதுகுக்குப் பின்னால் நின்ற குசுமாவை பூலானின் ஆள் ஒருத்தன் தலைமுடியில் பிடித்து இழுத்ததும், பூலானின் துப்பாக்கி, குஜாலின் மார்புக்கு குண்டை ஏவியது.

குஜால் கடைசித் தடவையாக தன் அம்மாவை அழைத்துவிட்டு, இனி எழவே முடியாத மரணப் படுக்கையில் வீழ்ந்தான்.

இப்போது குசுமா நடுங்கினாள். கைகளைக் கூப்பி மன்றாடினாள்.

"அக்கா! என்னை ஒன்றும் செய்யாதீர்கள். ஏதோ புத்தி பிசகி நடந்து கொண்டு விட்டேன். இனிமேல் உங்களுக்கு பணிவிடை செய்து கொண்..."

அவள் சொல்லி முடிக்க முன்னர், பூலானின் கை ஓங்கி அவள் கன்னத்தில் வெடித்தது.

"தூ... நாயே! அக்காவாம் அக்கா. யாரடி உனக்கு அக்கா? சொல்லடி அக்கா இல்லை... சொல்லடி" மீண்டும் அறைந்தாள்.

"அ..அக்..கா... இ..இல்லை"

"தூ.." காறி அவள் முகத்தில் உமிழ்ந்துவிட்டு, துப்பாக்கியை அவள் வாய்க்குள் திணித்தாள் பூலான்.

பூலானின் வாயில் இருந்து கெட்ட வார்த்தை ஒன்று புறப்பட்ட அதே நேரம், அவளது துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட குண்டு குசுமாவின் வாய்க்குள் வெடித்தது.

மல்லாவின் மரணத்தை விரைவாக்க ஸ்ரீராமை தூண்டிய குசுமா, சர்வ நிச்சயமாய் செத்துப் போனாள்.

"விக்கிரம் மல்லாவுக்கு ஜே" பூலான் உணர்ச்சிவசப்பட்டவளாய் கத்தினாள்.

அவளைத் தொடர்ந்து, மான்சிங் உட்பட, அனைவரும் 'விக்கிரம் மல்லாவுக்கு ஜே' என்று கோஷமிட்டனர்.

குஜாலின் ஆட்களின் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு, அவர்களை மன்னித்து விடுவித்தாள் பூலான்.

"உங்களோடு நாங்களும் வருகிறோம். எங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். எரிப்பதுபோல அவர்களைப் பார்த்தாள் பூலான்.

"சே.. உங்களுக்கு ரோஷமே இல்லையா? உங்கள் தலைவனை நான்தானே கொன்றேன். என் பின்னால் வருகிறேன் என்கிறீர்களே! நாளை என்னை ஒருவன் கொலை செய்தால், அவன் பின்னால் போவீர்களாடா பரதேசிகளே?"

அவர்கள் தலைகுனிந்தனர். "போங்கடா, தப்பிப் போங்கள்! இந்தப் பூலான் எதிரிகளையும் மன்னிக்கமாட்டாள். உங்களைப் போன்ற துரோகிகளையும் பக்கத்தில் வைத்திருக்க மாட்டாள்"

குஜாலின் உடலையும், குசுமாவின் உடலையும் எடுத்து வருமாறு தன் ஆட்களுக்கு கட்டளையிட்டாள் பூலான்.

"என் மல்லாவின் உடலை யார் கண்ணிலும் காட்டவில்லை. அநாதைப் பிணமாக எங்கே புதைத்தார்களோ தெரியாது. இவர்கள் உடல்களும் அப்படியே போகட்டும்... யார் கண்ணிலும் படக்கூடாது" என்று மான்சிங்கிடம் கூறினாள் பூலான்.

அந்தக் கிராமத்தைவிட்டு பூலான் ஆட்கள் வெளியேறியபோது 22 பண்ணையார்களின் உடல்கள், வீசிய புயலில் பிடுங்கி எறியப்பட்ட மரங்கள்போல ஆங்காங்கே கிடந்தன.

போகும் வழியில் காட்டுக்குள் ஓரிடத்தில் வைத்து குஜால் உடலையும், குசுமாவின் உடலையும் மரக்குச்சிகளை அடுக்கி தீயிட்டு அழித்தனர்.

பெஹ்மாய் கிராமத்துக்குள் பொலிசார் புகுந்தபோது எங்கும் ஒப்பாரிச்சத்தம்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

இரத்த வெள்ளத்தில் கிடந்த 22 பேரில் 2 பேர் உயிரோடு இருந்தனர். "செத்ததுபோல நடித்ததால் தப்பினோம் என்றனர்.

இந்தியா எங்கும் பெஹ்மாய் கிராம படுகொலைகள் பெரும் திகிலை ஏற்படுத்தின.

பூலான்தேவி என்ற பெயர் உச்சரிக்கப் படாத உதடுகளே இல்லை என்று கூறுமளவுக்கு, செய்திகளில் பூலான் பற்றி பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

"சம்பல் பள்ளத்தாக்கின் கொள்ளை ராணி அரசுக்கு சவால் விடுக்கிறாள். இராணுவத்தை அனுப்பி பிடிக்க வேண்டியதுதானே. அரசு என்ன செய்கிறது? தூங்குகிறதா?" எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொய்யாகப், போலியாக உணர்ச்சிவசப் பட்டனர்.

பிரதமர் இந்திரா காந்தி கடும் உத்தரவுகளை பிறப்பித்தார்.

பூலான் தேவியை பிடிக்க தனியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

'தேடப்படுகிறார்கள்' என்ற தலைப் போடு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

முதன் முதலில் பூலானின் படத்தோடு வெளியான சுவரொட்டிகள் அவைதான். வேறு கொலை வழக்குகளில் தேடப்பட்ட மான்சிங் தோமர் (மான்சிங் அல்ல), மல்கான் சிங் ஆகியோரது படங்களும் அதே சுவரொட்டியில் இடம் பெற்றன.

பத்திரிகைகளிலும் 'தேடப்படும்' அறிவித்தலும், புகைப்படங்கடன் வெளியாகின.

பூலானின் படத்தை எல்லோரும் ஆவலோடு பார்த்தனர்.

பூலானும் பார்த்தாள்,

"இதில் நான் இளமையாக இருக்கிறேன்" என்று சிரித்தாள்.

**(தொடர்ந்து வரும்)**

## கட்சிக்குள் அழகிகள்

நடிகை ஜெயப்பிரதாவுக்கு தெலுங்கு தேச கட்சியில் பலத்த மவுசு. எத்தனையோ மூத்த தலைவர்கள் இருந்தும்கூட ஜெயப்பிரதா முன்னுக்கு வந்துள்ளதன் இரகசியம் சுவாரசியமானது.'

அரசியலில் அப்படி ஒன்றும் ஜெயப்பிரதா கை தேர்ந்தவரல்ல. அலட்டல் பெண்மணி என்று இன்னொரு பெண் எம்.பியால் பட்டம் சூட்டப்பட்டவர்தான் ஜெயப்பிரதா.

தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும், முதல்வருமான சந்திரபாபு நாயுடுவுடன் மிக நெருக்கமாக காணப்படுகிறார் ஜெயப்பிரதா. எப்போதும் அவர் பக்கத்தில்தான் காணப்படுகிறார். அதனால் ஜெயப்பிரதாவை முன்னுக்கு கொண்டுவர ஆவலாக உள்ளார் சந்திரபாபு நாயுடு.

ஜெயப்பிரதா எது கேட்டாலும் கிடைக்கிறது. கட்சிக்குள் ஏனைய தலைவர்கள் ஜெயப்பிரதாமீது கோபமாக உள்ளனர். ஜெயப்பிரதாவின் மயக்கத்தில் உள்ள நாயுடுவுக்கு அது பற்றியெல்லாம் கவலையில்லை.

"ஜெயப்பிரதாவுடன் அவர் உறவு வைத்திருக்கட்டும். அதற்காகக் கட்சியை கேளிக்கைக் கூடமாக்க வேண்டாம்" என்கி



றார் மோகன்பாபு. அதனால் மோகன் பாபுவையும் கட்சியைவிட்டு வெளியேறச் செய்துவிட்டார் நாயுடு.

## அபாயக் கடற்கரை

இந்தியாவில் பல கடற்கரைகள் இருந்தாலும் கோவா கடற்கரைக்கு தனிச் சிறப்பு இருக்கிறது. வெளிநாட்டு பயணிகள் ஆண்களும், பெண்களும் நிர்வாணமாக குளியல் நடத்தும் கோலாகல(?) கடற்கரை அதுதான்.



இலவசக் காட்சி காண வரும் உள்ளூர் இளைஞர்கள் சில சமயங்களில் அத்துமீறுவதும் உண்டாம். இதனால் பாலியல் பலாத்கார சம்பவங்கள் பல நடந்துள்ளதாம்.

கோவாவில் ஒரு அறிவிப்புப்பலகையை தொங்கவிட்டிருக்கிறார்கள்.

"பெண்கள் பிரதான சாலைகளில் மட்டுமே நடமாடவும். உங்கள் அறைகளில் இருக்கும்போது கதவுகளையும், ஜன்னல்களையும் தாழிட்டே வைத்திருக்கவும், உங்கள் உடமைகளுக்கு நீங்களே பொறுப்பு" என்று அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டுள்ளது.

சமீபத்தில் இரண்டு சுவீடன் பெண்கள் எட்டுப்பேர் கொண்ட காடையர் கும்பல் ஒன்றினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள். அந்தப் பெண்களின் காதலர்கள் முன்பாகவே இக்கொடுமை நடந்ததாம்.

அப்படி இருந்தும் கோவாவில் கடற்கரை நிரம்பி வழிகிறது. உல்லாசப் பயணிகளும், அவர்களை ரசிப்பவர்களும் அலைமோதுகிறார்கள்.

## மகாராணி எலிசபெத்தை கல்லால் அடியுங்கள்

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் தனது ஐம்பதாவது திருமண நாளை விமரிசையாக கொண்டாடினார்.



இதனையடுத்து லிபியா நாட்டு அரச பத்திரிகையான 'ஜனா' காட்டமான ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. காட்டம் என்றால் அப்படியொரு காட்டம்.

"உலகம் பாராட்டிய பிரிட்டிஷ் இளவரசி டயானா சமீபத்தில் மறைந்தார். அவர் இறந்த மூன்று மாத காலத்திற்குள் பிரிட்டிஷ் அரசி கோலாகலமாக தன் திருமண நாளைக் கொண்டாடி இருக்கிறார். இது ஆச்சரியமல்ல, ஏனெனில் டயானாவை அரசி எலிசபெத்தும், அவரது அரச குடும்பத்தினருமே சதி செய்து கொன்றனர்.

இளவரசி டயானா இஸ்லாம் மதத்திற்கு மாறிவிடுவார் என்ற பயத்தில்தான் அக் கொலையை அரச குடும்பத்தினர் அரங்கேற்றினர்.

டயானாவை கொன்ற அரசி எலிசபெத் இஸ்லாமியச் சட்டப்படி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும்" என்று அப் பத்திரிகை எழுதியுள்ளது.

அப்பத்திரிகையின் கருத்தை லிபியாவின் தொலைக்காட்சியும் ஒளிபரப்பியது.

லிபியா ஆரம்பம் முதலே டயானா மரணத்தில் பலத்த சந்தேகம் தெரிவித்து வருகிறது. எனினும் அதற்கான ஆதாரம் எதனையும் காண்பிக்கவில்லை.

## இன்டர்நெட் விளையாட்டுக்கள்

தொழில் நுட்ப முன்னேற்றங்களை எதற்கெல்லாம் பயன்படுத்துவது என்ற விவஸ்தையே இல்லையா? செய்தி தொடர்பு ஊடகங்களில் நவீன ஆச்சரியங்களில் ஒன்று இன்டர் நெட்.

'இன்டர் நெட்' மூலம் 'செக்ஸ்' படங்கள் காண்பிக்கப்படுகின்றன. காதல் கடிதங்களும் பரிமாறப்படுகின்றன.

பிலிடெல்ஃபியா நாட்டைச் சேர்ந்தவரான ரேமாண்ட்டுக்கு 54 வயது. இவர் கேபிள் ரி.வியின் மூலம் பொழுது போக்கு நிகழ்ச்சி நடத்துபவர். இவரது மனைவிக்கு 47 வயது. பெயர் மெர்லின்.

கணவர் இல்லாத நேரங்களில் மெர்லினுக்கு பொழுது போக்கு என்ன தெரியுமா? இன்டர் நெட் மூலம் ஆண்களுக்கு காதல் கடிதம் அனுப்புவது.

மெர்லின் பொழுது போக்குக்காக இப்படிச் செய்ததை நம்பி பல ஆண்கள் பைத்தியமாக அலைந்தார்கள். எஸ்கின் என்னும் இளைஞன் பூங்கொத்தையும் அனுப்பிவைத்தானாம்.

தன் மனைவி ஆசை வார்த்தைகள் கூறி ஆண்களை மயக்கும் செய்தி கணவருக்கு தெரியவந்தது.

நிறுத்துமாறு கூறினார். மெர்லின் கேட்கவில்லை. கடைசியாக நகருக்கு ஒதுக்குப்



புறமாக மனைவியை அழைத்துச் சென்று சமையலறைக் கத்தியினால் குத்திக் கொன்றுவிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் நடந்த இக் கொலைக்கு சமீபத்தில் தண்டனை கிடைத்திருக்கிறது. 40 ஆண்டுகள் கடும் காவல்.

மனைவி செய்தது தப்புத்தான். அதற்காக இப்படியா தண்டனை கொடுப்பது என்று கோபப்பட்டாராம் நீதிபதி. இன்ட்நெட்டால் ஒரு கொலை. சிறை!



## நீச்சல் மன்னன்

ஈராக் அதிபர் சதாம் உசேன் அமெரிக்காவுக்கு தண்ணி காட்டி வருகிறார். அதுமட்டுமல்ல நீச்சலிலும் சதாம் உசேன் கில்லாடிதான்.

ஈராக்கில் உள்ள டைகிரீஸ் ஆற்றைக் கடக்கும் போட்டிகள் நடப்பதுண்டு. போட்டியை ஆரம்பித்து வைக்க முன்னர் தானே அந்த ஆற்றைக் கடப்பார் சதாம் உசேன். பின்னர்தான் போட்டிகளை ஆரம்பித்து வைப்பார்.

இதுவரை மூன்று தடவைகள் இப்படி ஆற்றைக் கடந்துள்ளார் சதாம் உசேன்.

சதாம் உசேன் பற்றி அமெரிக்காவும், மேற்குலக நாட்டு செய்தி ஊடகங்களும் 'கட்டுக் கதைகள் பலவற்றை கட்டி வருகின்றன.

ஆனால், ஈராக் மக்களில் பெரும்பாலானோர் சதாம்மீது உயிரையே வைத்திருக்கிறார்கள். சதாமின் தலைமை ஈராக் மக்களின் தன்மானத்தை காத்து நிற்கிறது. அழிவுகளுக்கு பயந்தால் கைகட்டி வாய் பொதத்தித்தான் வாழ வேண்டும் என்கிறார்கள் ஈராக் மக்கள். அதுதான் சதாமின் பலம்.



படிப்பகம்

www.padippakam.com




## அசத்தலான பாய்ச்சல்

தடை தாண்டி ஓட்டத்தில் அசத்துகிறார் பாருங்கள். ஒரு கையில் போத்தலுடன், கண்ணாடி குவளை வைத்திருக்கிறார். போத்தலோ, குவளையோ கீழே விழுந்தால் போச்சு!

கடைசிவரை கீழே விழவே இல்லை. ஹொட்டல் ஒன்றில் சர்வராக வேலை பார்த்தாராம். அதுவே பாதிப் பயிற்சியாக அமைந்தது. மீதி முயற்சி! விளைவு, வெற்றியோ வெற்றி!

கைவீசிக் கொண்டு பாய்வது சுலபம். கைகளில் இப்படி ஏந்திக் கொண்டு ஓடுவதே கடினம். கூடவே பாய்வது என்றால் பயங்கர அசத்தல்தானே! எங்கே, முடிந்தால் முயன்று பாருங்களேன்!

## புதுவித ஓவியம்



புதுவிதமான ஓவியம் போல் தெரிகிறதா? அரிசி அல்லது நெல் மணியால் செய்துள்ளார்களோ? என்று பார்த்ததும் எண்ணம் தோன்றும். அதனையும் தாண்டி கடுமையான முயற்சி இது!

தரையில் ஓவியத்தை வரைந்துவிட்டு அதன்மேல் ஆட்களை நிற்கவைத்து மேலே இருந்து எடுக்கப்பட்ட படம் இது.

ஏன் இத்தனை முயற்சி? ஓவியத்தில் இருப்பது யார் முகம்? அமெரிக்க முன்னாள் அதிபர் உட்ரோ வில்சனின் முகம்தான் இது. ஓவியத்தின் அகலம் 210 அடி. நீளம் 710 அடி. நிற்க வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 21 ஆயிரம்பேர்! கூர்ந்துபாருங்கள் குச்சிக் குச்சியாய் தெரிகிறார்கள். இவ்வாறு படம் பிடித்தது உலக சாதனை. இதனை சாதித்த படப்பிடிப்பாளர்கள் ஆர்தர்மோல், மற்றும் வோன் தோமஸ்.

## தகவல் பெட்டி

## தரையில் விமானம்

இது என்ன காணாமல்போன விமானமா? விழுந்த விமானமா? அல்லது புதிதாக அறிமுகமாகியுள்ள விமானமா? மூன்றும் இல்லை.

லெபனான் நாட்டில் புதுமையான இரசனையுடன் கட்டப்பட்ட வீடுதான்இது. இதனைச் சுற்றி அழகான தோட்டம், பச்சைக் கம்பளம் விரித்ததுபோல புற்தரை, என்பவை உள்ளன. தரையில் இருப்பதும், வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே! இந்த வீட்டை கட்டிய செல்வந்தருக்கு எப்போதுமே வானத்தில் இருப்பது போல நினைத்துக் கொண்டிருக்க ஆசை.



## தீராத கோபம்



ஈராக்கிடம் பயங்கர ஆயுதங்கள் இருக்கிறதா? என்று கண்டறிய சர்வதேச பொலிஸ்காரனான அமெரிக்கா ஒற்றைக்காலில் நிற்பது தெரிந்த சமாச்சாரம். பரிசோதனை நடத்த சதாம் ஒப்புக்கொண்டாலும் கூட, ஈராக் மக்கள் அமெரிக்கச் சண்டித்தனத்தை கோபத்துடன் கண்டித்தே வருகிறார்கள். ஈராக்கின் பாக்தாத் நகரில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. அமெரிக்க தேசியக் கொடி பள்ளிச்சிறுமி ஒருத்தியால் மிதிக்கப்படுகிறது.

## இறக்கப்படும் ஆயுதங்கள்

லொறிகளிலும், ட்ரக்டர்களிலும் ஏற்றிச் செல்லப்பட்ட ஆயுதங்கள் புலிகளின் முகாம் ஒன்றில் இறக்கப்படுகின்றன. பெட்டி பெட்டியாக புதிய ஆயுதங்கள், ரவைகள், ஆயுத உபகரணங்கள் இறக்கப்படுகின்றன. வன்னிச் சமர் குறுங்கால யுத்தமல்ல. ஒருவேளை படையினர் முழுப் பலத்துடன் பாதை அமைத்தால்கூட அதன் பின்னர்தான் இன்றைய நிலையைவிட சண்டைகள் படுமோசமாகும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.







படிப்பகம்

# மினி சினி

* முக்தா சீனிவாசன் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தயாரிக்கும் 'கண்களின் வார்த்தைகள்' படத்தில் குன்னக்குடி வைத்தியநாதன் நகைச்சுவை வேடத்தில் நடிக்கிறார்.
* ரகுமான்- ராஜஸ்ரீ-ரசிகா நடிக்கும் 'பிரார்த்தனா' என்ற படத்தின் மூலம் ரிஷபாவா என்ற மலையாள நடிகை தமிழில் அறிமுகமாகிறார். இவர் நூற்றுக்கும் மேற்பட்ட மலையாளப் படங்களில் குணச்சித்திர-நகைச்சுவை வேடங்களில் கலக்கியவர்.
* கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார் கே.பாலச்சந்தர். இந்தப் படத்தை 'வண்டிச்சக்கரம்', 'வாழ்க்கைச்சக்கரம்' போன்ற படங்களைத் தயாரித்த திருப்பூர் மணி தயாரிக்கிறார்.
* ராஜ்கபூர் இயக்கத்தில் சத்யராஜ் நடிக்கும் புதிய படத்தில், நீண்ட நாட்களுக்குப் பிறகு நகைச்சுவை வேடத்தில் எஸ்.வி.சேகர் நடிக்கிறார். இந்த வேடத்தில் முதலில் கவுண்டமணி நடிப்பதாக இருந்தது.
* ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியிருக்கும் கவிஞர் பிறைசூடன், தற்போது 'அதாண்டா இதாண்டா', 'இந்தியா டுடே' ஆகிய இரண்டு படங்களுக்கு வசனம் எழுதி வருகிறார்.
* குமாரி ஷாலினி முதல் முதலாகக் கதாநாயகியாக நடித்த 'அனியத்த பிராவு' என்ற மலையாளப் படம் பெருவெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து இவர் இரண்டாவதாக நடித்த 'களி உஞ்சல்' என்ற மலையாளப்படமும் வெற்றிகரமாக ஓடுகிறது.
* 'கல்லூரி வாசல்' படத்தில் இணைந்து நடித்த பிரசாந்தும், அஜித்குமாரும் மறுபடியும் புதிய படமொன்றில் இணையவுள்ளனர். இப்படத்தை 'காதல்கோட்டை' புகழ் அகத்தியன் இயக்கவுள்ளார்.
* நடிக்க வருமுன் கார்த்திக்கை வைத்து 'கண் சிமிட்டும் நேரம்', 'மிஸ்டர் கார்த்திக்' ஆகிய இரு படங்களையும், பின்னர் தானே கதாநாயகனாக நடித்து 'ரகசிய பொலிஸ்' ஆகிய மூன்று படங்களைத் தயாரித்த சரத்குமார் விரைவில் புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* 'மருதநாயகம்' படத்தில் கமலின் இரண்டு குழந்தைகளும் நடிக்கவிருக்கிறார்கள். இந்தப்படத்திற்கு தபேலா கலைஞர் ஜாகிர் ஹுஸைனும், கார்த்திக் ராஜாவும் இணைந்து இசையமைக்கிறார்கள்.
* 'ரத்னா' படத்தில் முரளிக்கு அம்மாவாக ரேவதி நடிக்கிறார். 'வாக்கப்பட்டபூமி' படத்தில் சரத்குமாருக்கு அப்பாவாக பாரதிராஜா நடிக்கிறார். 'துள்ளித்திரிந்த காலம்' படத்தில் குஷ்புவுக்கு அப்பாவாக ரகுவரன் நடிக்கிறார்.
* 'கோடீஸ்வரன்' படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகும் எபி, பி.கொம் படித்துள்ளார். அத்துடன் நீச்சல், சண்டை, நடனம், குதிரைச் சவாரி, கார் ரேஸ் ஆகியவற்றையும் முறைப்படி பயின்றுள்ளார்.

# திரையுலக மறுபக்கம் 33 நடிகர் சந்திரப

தனது பெயரில் ராமரையும் ராஜாவையும் வைத்திருக்கும் நட
வசனம் எழுதுபவராக ஆரம்பித்து நடிகரானவர். எம்.ஜி.ஆர் ஆதரவைப் பெறவும் கனவு கண்டவர்.

இவர் நடிக்க ஆரம்பித்தபோது நளினமான நடிகையுடன் வஞ்சகமில்லாமல்தான் பழகினார்.

இயக்குநராகவும் அவரே இருந்தமையால் நடிகையை அ உருவாக்கிக் கொள்ள முடிந்தது.

ஏனைய இயக்குநர்கள் செய்வது போன்றே, அவரும், க நடிகையை சென்னை புரசைவாக்கத்தில் உள்ள விடுதி நடிகையும் குறிப்பிட்ட நேரத்தில் அங்கு ஆஜரான ஆரம்பித்துவிட்டு, இடைக்கிடையே உற்சாக பானம் அருந் மறுத்தும் கேளாமல் அவருக்கும் கொஞ்சம் கொடுத் நடிகை அவ்வளவாக ஏற்றிக்கொள்ளவில்லை. நடிகரு நடிகை அன்று காலையில் கலந்துகொண்டு நடித்த சரியாக வரவில்லை என்று சொன்னார் நடிகர்.

"நீங்கள் சொல்லித் தந்திருக்கலாமே?" என்றா சொல்லித் தந்தால் போச்சு" என்ற நடிகர் நடிகைக் சாக்கில் கட்டியணைத்துக் கொள்ள, முதலில் மறு போக்குக்கு விட்டுக் கொடுத்தார்.

அச்சம்பவத்தின் பின்னரும் இரண்டு, மூன்று த இனிமை கண்டனர். அதன் பின்னர் தார் நடிகர்.

நடிகை



பிரபு-கீர்த்திரெட்டி
படம்: இனியவளே

# ரகுவரனிடம் பயம்

ரகுவரன் எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் பிய்த்து உதறி விடுகிறார். அட்டகாசமான நடிகர். அவருடன் இணைந்து நடிக்க பல ஹீரோக்கள் தயங்குகின்றனர்.

ரகுவரன் நடிக்கும் படங்களில் அவர் பெயரைத் தட்டிக் கொண்டு போய்விடுவார். தங்கள் நடிப்பு எடுபடாது என்றுதான் தயங்குகிறார்கள்.

சமீபத்தில் ஒரு பேட்டியில் சில உண்மைகளை மனம் திறந்து ஒப்புக்கொண்டுள்ளார் ரகுவரன்.

"போதைப் பழக்கம், மதுப் பழக்கம், பெண்கள் தொடர்பு எல்லாமே எனக்கு இருந்தன. உண்மைதான். இப்போது எல்லாவற்றுக்கும் கும்பிடு போட்டுவிட்டேன். சிகரெட்டை மட்டும்தான் விடமுடியாது உள்ளது. என் மனைவி ரோகிணிதான் என்னை மனிதனாக மாற்றினாள்" என்று கூறியிருக்கிறார்.

சி னி வி சி ட்

# நீச்சல் நாயகி

சமீபத்தில் எடுக்கப்பட்ட மிக முக்கியமான புள்ளிவிபரம் ஒன்றில் வெளியாகிய தகவல்கள் வருமாறு: "சமப கால நடிகைகளில் அதிக தடவை நீச்சல் உடையில் நடித்தவர் ரம்பா. அதிக தடவை படங்களில் குளிக்க வைக்கப்பட்டவர் சங்கவி. தமிழில் முத்தக் காட்சியில் கிறக்கம் ஏற்படுத்தியவர் கௌதமி.



லக்ஷ்மி
படம்: இனியெல்லாம் சுகமே

# துக்கம் விசாரிக்கிறார்கள்?

சிம்ரானை காணும் நிருபர்கள் எல்லோரும் ஒரே கேள்வியைத்தான் கேட்கிறார்கள். "அப்பாசுக்கு திருமணம் ஆச்சாமே. உங்கள் அபிப்பிராயம் என்ன?"

பயங்கரக் கடுப்பில் இருக்கிறார் சிம்ரான். எல்லா நிருபர்களும் ஏதோ துக்கம் விசாரிப்பதுபோல ஒரே கேள்வியைக் கேட்கிறார்கள். நானும் அவரும் நல்ல ஃப்ரண்ட்ஸ். நானும் ஜாலியான டைப். அவரும் ஜாலியான டைப். அதைப்போய் காதல் என்று எப்படிச் சொல்லலாம்?" என்று கேட்கிறார் சிம்ரான்.

"ஓ.கே. சிம்ரான். அப்படி என்றால் அப்பாசின் திருமணத்தில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?" என்ற கேள்விக்கும் பதில் தயாராக வைத்திருக்கிறார். "அன்று படப்பிடிப்பு இருந்ததால் கலந்து கொள்ள முடியவில்லை" (உண்மை தானா?)

# மூன்று படங்கள்

சண்டைப்படப் பிரியர்கள் மட்டுமல்ல, இரண்டு மணி நேரத்திற்கு விறுவிறுப்பான படம் பார்க்க ஆசைப்படுகிறவர்களுக்கும் உகந்த படங்கள் சில வந்துள்ளன.. அவை பின்வருமாறு, 1) ஜாக்பொட் (மம்முட்டி நடித்தது) 2) கர்ம வீரன் (சுரேஷ் கோபி நடித்தது) 3) டில்லி தர்பார் (மம்முட்டி). மலையாளத்தில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்ட படங்கள் இவை.

நம்மூரில் வீடியோவில பார்க்கலாம். சகல வீடியோ கடைகளிலும் இப்படக் கசட்டுக்கள் இருப்பதில்லை. ஏனெனில் பிறமொழிப் படங்கள் என நினைத்து, இவற்றை வாடிக்கையாளர்கள் நாடுவதில்லையாம். சலிப்பான தமிழ்ப் படங்களைவிட மேற்கண்ட மூன்று படங்களும் எவ்வளவோமேல். வாய்ப்புள்ளவர்கள் தேடிப் பிடித்துப் பாருங்கள்.

# ரம்பாவின் கேள்வி

கவர்ச்சியாக நடிப்பதில் தப்பே இல்லை. இந்த வயதில் நடிக்காமல், இளமை இருக்கும்போது கவர்ச்சி காண்பிக்காமல், பின்னர் எப்போதுதான் காண்பிப்பது? அதுதான் நான் தயங்காமல் நடிக்கிறேன் என்கிறார் ரம்பா.

ரம்பா என்னும் இந்த தேவலோக யானையால் தனது வாய்ப்புக்களும் பறிக்கப்படுவதாக மீனாவும் புலம்புகிறார். (முன்னர் நக்மா புலம்பினார்)

அதற்கு ரம்பாவின் பதில் இதுதான்: "எனக்கு அந்த மாதிரி வேலையெல்லாம் செய்யத் தெரியாது. நான் எப்படியும் நடிக்கத் தயார். சிரஞ்சீவியுடன் விரைவில் நியூசிலாந்துக்கு பறக்கிறேன். அங்கே ஒரு படப்பிடிப்பில் கலந்து கொள்ள மட்டும்தான் இந்தப் பயணம்" என்கிறார் ரம்பா.

# பிரபுவுக்கு பாராட்டு

கீர்த்தி ரெட்டிக்கு பிரபுவுடன் நடித்த போது பயங்கர குஷியாம். பெரிய நடிகரின் பிள்ளையாச்சே எப்படியெல்லாம் பந்தா பண்ணுவாரோ என்று பயந்தாராம்.

பந்தா கிலோ என்ன விலை என்று கேட்கலாம் பிரபுவிடம். அந்தளவுக்கு இயல்பாக, தமாஷாகப் பழகுகிறார் என்று கூறிச் சிலிர்க்கிறார் கீர்த்தி ரெட்டி.

# காதோடு சொல்லுகிறோம்

காதல் கோட்டை நாயகிக்கும் அவரது மனேஜருக்கும் காதல் என்பது முதலில் வந்த செய்தி. ஆனால் காதலும் இல்லை, கத்தரிக்காயும் இல்லையாம். காதல் கோட்டையில் பிரபலமாக முன்னர் வாய்ப்புத் தேட தாராளமாக நடந்து கொண்டவர் நாயகி. காதல் கோட்டை தயாரிப்பாளருக்கும் 'கம்பனி' கொடுத்துத்தான் வாய்ப்பும் பெற்றார். எப்படியோ அவர்கள் ஒன்றாக இருந்த காட்சிகளை வீடியோவில் படம்பிடித்துவிட்டார் மனேஜர். அதனைக் காட்டித்தான் நடிகையை மிரட்டி தன் எண்ணப்படி நடக்கச் செய்தாராம். அது போதாது என்று பணம் கறந்து வருகிறார். சில காலம் தலைமறைவாக இருந்துவிட்டு மீண்டும் நடிகையைச் சுற்றி சுற்றி வருகிறார்.

படப்பிடிப்புக்காக கனடா சென்ற முன்றெழுத்து 'மா' நடிகை, அங்கு பை நிறைய சம்பாதித்துவிட்டாராம். பிரபல ஆங்கில பத்திரிகையான 'ப்ளேபாய்'க்கு பயங்கரமான போஸ் கொடுத்திருக்கிறார். ஒரு ஹொட்டல் அதிபருக்கு கம்பனியும் கொடுத்திருக்கிறார். 'பா' இயக்குநரும், படத்தின் நாயகனுமான கண்ணாடி போட்ட நடிகர் அதனை அறிந்துவிட்டாராம். பின்னர், இயக்குநரும் நடிகருமான நாயகனையும் நடிகை அனுசரித்து நடந்துகொண்டார். இல்லாவிட்டால் இரகசியம் அம்பலமாகிவிடுமே. இந்த விவகாரம் 'குமார' நடிகருக்கு தெரிந்தால் எப்படி 'நாட்டாண்மை' செய்வாரோ?

'மந்த்ர' நடிகையின் கவர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டுவருகிறதாம். அதனால் மீண்டும் ஹார்மோன் ஊசி போட்டுக் கொள்ள வெளிநாடு செல்லப்போகிறாராம். தந்தைக் குலத்தின் கெடுபிடிகளால் தனக்கு கிடைக்கும் வாய்ப்புக்கள் பறிபோவதும் நடிகையின் மன நிம்மதியைக் கெடுத்துள்ளதாம்.

'பூ' நடிகையைப் பார்க்க ரசிகர்கள் பட்டாளம் ஒன்று சென்றதாம். நடிகை வீட்டின் வரவேற்பு அறைக்கு முன்பாக உள்ள கதவில் மிகச் சிறிய கமராவும், ஒலிபெருக்கியும் பொருத்தப்பட்டுள்ளதாம். வந்திருப்பது யார் என்பதை கமரா வழியாகப் பார்த்துவிட்டு, ஒலிபெருக்கி மூலம் பதில் சொல்வாராம் நடிகை. அன்றும் "நீங்க யாரு?" என்று பூ நடிகை ஒலிபெருக்கி வழயாக விசாரித்தாராம். ரசிகர்களில் ஒருவர் உதட்டைக் குவித்துக்காட்டி 'உம்மா வேண்டும்' என்று சைகை காட்டினாராம். இன்னொருவர் நாக்கை நீட்டிக் காட்டினாராம். 'யூ ராஸ்கல்' என்று கத்தினார் நடிகை. மறு நிமிடம் நடிகையின் சகோதரரும், வேறு சிலரும் சேர்ந்து ரசிகர்களை புரட்டி எடுத்துவிட்டார்கள். குங்பூ. குங்பூ!

எந்த மொழியில் நடிக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு, அந்த மொழியில் உள்ள ஹீரோ தயாரிப்பாளர், இயக்குநர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் தெரிந்து கொண்டு அதற்கேற்பத்தான் ஊதியம் கேட்கிறாராம் 'சிம்ம' நடிகை. எல்லாம் ஒரு முன்னேச்சரிக்கைதான். அனுசரிப்புக்கு ஏற்ப முன்கூட்டியே வாங்கிவிட்டால் பிரச்சனைப்பட வேண்டி இருக்காதல்லவா.

பூ பர

பொட்டு வைத்த முகமோ



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# நடத்திய கதை விவாதம்
# ...பாபுவுக்கு நேர்ந்த கதி

...ர் அவர். இயக்குநராக, கதை
...ல நடித்து கிராம மக்களின்

...ட்பு ஆரம்பித்தது. நடிகையும்

...கடி சந்திக்க காரணங்களை

...த டிஸ்கஷன் என்ற பெயரில்
...றுக்கு அழைத்திருந்தார்.
...ர். கதை டிஸ்கஷன் என்று
...ஆரம்பித்தார் நடிகர். நடிகை
...ர்.
...கு ஏக்கச்சக்கமாக ஏறிவிட்டது.
...டல் காட்சியில் மூவ்மெண்ட்

...நளின நடிகை. "இப்போது
...மூவ்மெண்ட் சொல்லித் தரும்
... நடிகை, பின்னர் நடிகரின்

...வைகள் இருவரும் தனிமையில்
...டிகையை விட்டு விலக நினைத்

...விடவில்லை. நடிகரின்
...ருபத்தை வெளிப்படுத்த
...ன்னிடம் ஆதாரம் உள்ளதாக
...ரட்டினார். நடிகர் வேறு
...ழியின்றி பணிந்தார். அந்த
...டிகையையே திருமணம் செய்து
...காண்டார்.
பின்னர் நளினமான நடி...

...கைக்கும் சிங்கப்பூர் தொழிலதிபர் ஒருவருக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டன. அப்போது நடிகருக்கு மார்க்கெட் டல்லாகி இருந்தது. அங்கம் வகித்த கட்சியில் இருந்தும் 'அம்மா' அவரை தூக்கி வீசியிருந்தார்.

நளின நடிகையின் புதிய உறவு நடிகருக்கும் தெரியவந்தது. அதே நேரம், திருமணத்தின் பின்னரும் நடிகர் ராமராக இருக்கவில்லை என்பது நடிகைக்கும் முன்னரே தெரிய வந்தது.

இதனால் இருவரும் சில காலம் பிரியவேண்டி ஏற்பட்டது. பின்னர் சமீபத்தில் மறுபடி சேர்ந்துள்ளனர். நடிகரின் மார்க்கெட்டும் இப்போது சுமார் ரகத்தில் உள்ளது.

## எம்.ஜி.ஆர் கொடுத்த அடி

எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடிக்க மாடிவீட்டு ஏழை என்ற படத்தை சொந்தமாகத் தயாரித்தார் சந்திரபாபு. சிறந்த நகைச்சுவை நடிகரான சந்திரபாபு மது, மாது விஷயங்களில் மிக நாட்டமுள்ளவர்.

மாடிவீட்டு ஏழை படப்பிடிப்புக்காக ஒரு பெரும் வீட்டை வாடகைக்கு பிடித்துக் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

அந்தவீடு பிரபலமான ஒரு செல்வந்தருக்கு சொந்தமானது. சந்திரபாபுவுக்கும், செல்வந்தரின் துணைவிக்கும் இடையே நட்பு ஏற்பட்டது. இந்த விடயம் எம்.ஜி.ஆரின் காதுக்கு சென்றது.

சந்திரபாபு ஏற்கனவே பல பெண்களை ஏமாற்றி இருந்தார். ஜெமினி சாவித்திரி விவாகரத்தில்கூட சந்திரபாபு சாவித்திரியை ஏமாற்றியவர். இதனை எல்லாம் அறிந்திருந்த எம்.ஜி.ஆர் சந்திரபாபுவை அழைத்து கண்டித்தார். சந்திரபாபு கேட்கவில்லை.

'மாடிவீட்டு ஏழை' படப்பிடிப்புக்கு செல்லாமல் தவிர்த்தார் எம்.ஜி.ஆர். அதனால் பல இலட்சம் ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டது சந்திரபாபுவுக்கு.

இறுதிவரை குடியும், கும்மாளமுமாக இருந்த சந்திரபாபு கடைசிக் காலத்தில் அன்றாட செலவுக்கே அவதிப்பட்டார். இறுதியில் தற்கொலை செய்துகொண்டார்.

## ஷில்பா வித்தியாசம்

இந்தி நடிகைகளில் ஷில்பா ஷெட்டி வித்தியாசரகம். எப்போதுமே முன்னணி இளம் ஹீரோக்களுடன் மட்டுமே கிசுகிசுக்கப்படுவார். ஆனால் ஏனைய இந்தி நடிகைகள் போல ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கமாட்டார்.

என் திருமணம், வீட்டார் பார்த்துப் பேசி யாரை முடிவு பண்ணுகிறார்களோ அவருடன்தான் என்கிறார் ஷில்பா. சினிமாவில் நடிக்க வந்த பின்னர் சந்தோசமாக இருந்த நாட்களைவிட சங்கடமாக இருந்த நாட்கள்தான் அதிகம் என்கிறார். பொய்!

## வருகிறது மும்பாய் மழை


'பாரதி கண்ணம்மா' படத்தின் மூலம் இயக்குநர் சேரனை அறிமுகம் செய்தவர் தயாரிப்பாளர் ஹென்றி. அப்படத்தின் வெற்றியின் பின்னர் இருவருக்கும் பிரச்சனை. பிரிந்தனர்.

இப்போது ஹென்றி இன்னொரு இயக்குநரை அறிமுகம் செய்கிறார். அவரது பெயர் பிரமோத். இவர் இயக்கப்போகும் முதல் படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர் 'மழை வரப்போகுது'.

இப்படத்தில் நடிக்க மும்பாயில் இருந்து மழையாக வரப்போகிறவர் ஜுகி சாவ்லா. அவரது ஜோடி பிரபுதேவா. ஏற்கனவே 'மிஸ்டர் ரோமியோ' படத்தில் தொப்புள் அழகி ஷில்பா ஷெட்டியுடன் நடித்தவர் பிரபுதேவா. நாசர், மணிவண்ணன், பிரதாப் போத்தன் ஆகியோரும் உண்டு. இசை அமைப்பதும் புதுமுகம். ஜெய்தீப் அமேதே என்பது அவரது கஷ்டமான பெயர்.

## 'கோல்மால்' தயார்

'கோல்மால்' என்றால் சுத்து மாத்து, என்றும் ஏமாற்று என்றும் அர்த்தம். புதிய படம் ஒன்றுக்கும் 'கோல்மால்' என்று பெயரிட்டுள்ளனர். நடிகர் ராஜசேகரின் தம்பி செல்வாவும் நடிகர்தான். 'கோல்மால்' படம் மூலம் இயக்குநராக பதவி உயர்வு பெறுகிறார். படத்தின் கதாநாயகனும் செல்வாதான். கதாநாயகியாக இறக்குமதி அழகி நடிக்கிறார். மும்பாயில் இருந்து மோனிகா நெருகர் என்பவரை கொண்டு வருகிறார்கள். மோனிகாவுக்கு மொடலிங் செய்து நல்ல முன்அனுபவம் உண்டாம்.




## சங்கவிக்கு பாராட்டு

சங்கவியிடம் இத்தனை சமாச்சாரம் உள்ளதா? என ...ல்லோரும் வியக்கிறார்களாம். 'பொற்காலம்' படத்தின்மூலம் ...ன்னிடம் மறைந்து கிடந்த நடிப்புத் திறமையை காட்டிவிட்டார் ...ங்கவி. இப்படியொரு நடிகையை கவர்ச்சி காட்ட ...வைத்துவிட்டு, நடிப்புத் திறமையை மட்டும் மூடிவைக்கச் ...செய்துவிட்டார்களே என்று ரசிகர்கள் பலர் கண்ணீருடன் ...டிதம் போட்டுள்ளார்களாம். சங்கவி சொல்லிச் சொல்லி ...ளகாங்கிக்கிறார்.

## சிம்ரானுக்குப் பிடித்தவர்கள்

இன்றைய தேதியில் ஜொள்ளர்களின் கனவில் புகுந்து ...திரடி நடத்தும் நடிகை சிம்ரான். அவருக்கு எப்படியான ...ட்களைப் பிடிக்கும் என்று தெரியுமா? திட்டமிட்டு செயற் ...டுபவர்கள், புதுமையாக சிந்திப்பவர்கள், எதனையும் ...ரசனையோடு செய்பவர்கள் ஆகியோரைத்தான் பிடிக்கு ...ாம்.

அப்பாஸ் பற்றி சொல்லும் போது, 'அவர் திட்டமிடத் ...தரியாத பையன் என்கிறார். எட்டாப் பழம் புளிக்கும்.

## மாத விருந்து

செய்தி வாசிப்பாளராக இருந்து நடிகையானவர் பாத்திமா பாபு. இவர் பற்றி முன்னரே பலத்த கிசு கிசுக்கள் இருந்தன. நடிக்க வந்த பின்னர் மேலும் அதிகமாகிவிட்டன.

அக்கா, அம்மா வேடங்களில் நடித்து வரும் பாத்திமா பாபு, மாதம் ஒரு முறை தன் வீட்டில் விருந்து கொடுக்கிறார். அந்த விருந்தில் சினிமா உலகப் பெரும் புள்ளிகள் பலர் ஆஜராகின்றனர். ஏன் இந்த விருந்து. வாய்ப்புத் தேடத்தான்!

## அமிதாப் ஆடுகிறார்

அமிதாப் பச்சன் நடித்த 'ஹம்' படத்தின் தழுவல் தான் ரஜினி நடித்த 'பாட்ஷா'. இப்போது அமிதாப் பச்சன் 'லால் பாட்ஷா' என்ற படத்தில் நடிக்கிறார். பாட்ஷா படத்திற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. பெயரைத்தவிர.

அமிதாப்புக்கு வயதாகிவிட்டது. இளம் நடிகைகளுடன் ஜோடியாக நடிக்க முடியாது. ஈடு கொடுக்கவும் இயலாது என்று கிண்டல் செய்தனர்.

கிண்டலுக்கு பதிலடி கொடுக்கிறார் அமிதாப். 'லால் பாட்ஷா' படத்தில் இரண்டு இளம் நாயகிகள் தான் ஜோடிகள். ஒருவர் மனிஷாகொய்ராலா. இன்னொருவர் ஷில்பாஷெட்டி. ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் என்று புகுந்து விளையாடுகிறார் அமிதாப். விரைவில் திரைக்கு வருகிறது 'லால் பாட்ஷா'.

| | |
|---|---|
| டாக்டர் ராஜசேகர் | முகப்பாகம் |
| பூலான்தேவி | |
| கஜோல் | |


கஜோல்-பூலான்தேவி

## ...னின் ரசிகை

...ான்தேவி இப்போது ...ழமொழுவென்று ...ளிக்கிறார். அழகு நிலை ...ன்று அடிக்கடி தன்னை ...ட்டிக் கொள்கிறார்.

...கை கஜோல் சமீபத்தில் 'மும்பாய்' ...கை ஒன்றுக்கு பேட்டி எடுக்க பூலா... சந்தித்தார். இருவரும் மனம்விட்டுப் ...காண்டு இருந்தனர். கொஞ்ச நேரத்தி... பூலானின் ரசிகையாகிவிட்டார் கஜோல். ...க் கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தமழை ...தார் கஜோல்.

...டி பற்றியும் சந்திப்புப் பற்றியும் பின்னர் ...கூறும்போது, "எனக்கு எத்தனையோ ...ள் இருந்தாலும், நான் பூலானின் ...சிகையாகிவிட்டேன்" என்று கூறிமி...ர்.

...ால் நடித்த மின்சாரக் கனவு ...டத்தை பூலான் பார்த்து விட்டா... ...ன்றாக நடனம் ஆடுகிறாய் ...ராட்டினாராம் பூலான்தேவி.

...பொன்மணிச் சரமோ
அந்தி மஞ்சள் நிறமோ....?


ஷில்பா ஷெட்டி

## சரோஜாதேவியின் மகள் மரணம்

நடிகை சரோஜாதேவிக்கு வளர்ப்பு மகள் ஒருவர் இருந்தார். அவரது பெயர் புவனேஸ்வரி. 39 வயது. சரோஜாதேவி தன் மகளை நடிகையாக்க விரும்பவில்லை. தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாக, அந்தத் துறையில் காலடி எடுத்து வைக்கவே கூடாது என்று மகளை தடுத்துவிட்டார்.

ஆனால் மகளான புவனேஸ்வரிக்கு உல்லாசங்களில் ஆசை. திருமணமாகி கவுதம் (வயது 14) பரமேஸ்வரி (வயது 17) ஆகிய பிள்ளைகளும் உள்ளனர்.

புவனேஸ்வரி அடிக்கடி இரவு விடுதிகளுக்கு சென்று தங்குவார். சரோஜாதேவி வீட்டுக்கும் போய் தங்குவார். இதனால் கணவருக்கும் அவருக்கும் தகராறு ஏற்பட்டது. அதனால் சரோஜாதேவியுடன் சென்று தங்கிக்கொண்டார்.

சமீபத்தில் புவனேஸ்வரி திடீரென்று மரணம் அடைந்துள்ளார். அவர் குடித்த காப்பியில் விஷம் கலந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மனைவியின் மரணத்தில் மர்மம் உள்ளது என்றும், பொலிஸ் அதிகாரிகளுடன் சரோஜாதேவிக்கு உள்ள நெருக்கம் காரணமாக பல இரகசியங்கள் மூடி மறைக்கப்பட்டுவிட்டது என்றும் கணவர் கூறுகிறார்.

ஆனால், புவனேஸ்வரியின் உடல் தகனம் செய்யப்பட்டுவிட்டதால் இனிமேல் கொலையா, தற்கொலையா? என்று அறிவது கடினம்.


படிப்பகம்

www.padippakam.com

## லேடீஸ் ஸ்பெஷல்

கர்ப்ப கால ஆரம்பத்திலேயே உங்களது முந்தைய பேறுகால வரலாற்றை அதாவது கருக்கலைப்பு, கருச்சிதைவு போன்றவற்றையும், சிறு வயதில் ஏற்பட்ட நோய்கள், அவற்றிற்கு மேற்கொண்ட சிகிச்சைகள் போன்றவற்றை மருத்துவரிடம் சொல்லித் தேவைப்பட்டால் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

கர்ப்பமாக இருக்கும்போது அப் பெண்ணின் கணவன் புகை பிடிக்கும் பழக்கத்தைத் தற்காலிகமாகவாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். சிகரெட், பீடி போன்றவற்றின் புகை தாக்கினால் கர்ப்பத்தில் குறைபாடுகள் நேரவும், தாயின் உடல் நலம் பாதிக்கப்படவும் வாய்ப்புக்கள் அதிகம்.

## பேறு காலத்தில் கவனம் தேவை



கர்ப்பகாலத்தில் வழக்கத்தைவிட அதிக சத்துள்ள ஆகாரங்களை உண்ண வேண்டியிருக்கும். பேறு காலத்தில் ஏற்படும் நெஞ்செரிச்சலைத் தடுக்கக் கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி சாப்பிடலாம்.

கர்ப்பிணிப் பெண்கள் வழக்கமான வேலைகளைச் செய்யலாம். ஆனால் உடலை வருத்தும் உடற்பயிற்சிகளையும், எடை அதிகமுள்ள பொருட்களையும் தூக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் உடல் எடை எட்டு முதல் பத்து கிலோ வரை அதிகரிப்பது வழக்கம். அதற்கு மேல் ஒரேயடியாக எடை கூடும்போது, மருத்துவரை அணுகி பரிசோதனை மேற்கொள்வது நல்லது.

பிரசவ காலத்தில் ஏற்படும் சாதாரண தலைவலிக்கோ, வாந்தி மற்றும் மலச்சிக்கலுக்கோ மருந்து, மாத்திரைகளை உபயோகிப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

பேறு காலத்தில் இரத்தச் சோகையில் பாதிக்கப்படாமல் இருக்க இரும்புச்சத்து அதிகமுள்ள கீரைகள், பச்சைக் காய்கறிகள் போன்றவற்றையும், பால் உணவுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கரு உண்டான ஆறாம் மாதம் முதல் தாயின் உணர்வுகளைக் குழந்தை உணர்வதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். எனவே தேவையற்ற மன உளைச்சல்களை ஏற்படுத்தாத அமைதியான, மகிழ்ச்சியான சூழலில் கர்ப்பிணிப் பெண்கள் இருப்பது நல்லது. பேறு காலத்தில் கடைசி மாதங்களில் தேவையற்ற மன இறுக்கம் ஏற்படலாம். எனவே அப்போது கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் மனதுக்குப் பிடித்த பொழுது போக்குகளில் ஈடுபடுவதன் மூலம் மன இறுக்கத்திற்கு விடை கொடுக்கலாம்.

தாயின் செயல்கள் அனைத்தும் உணவு உட்கொள்வதிலிருந்து உள் உணர்வுகள்வரை குழந்தையின் வளர்ச்சியுடன் தொடர்புடையவை. எனவே தாயின் பயம், டென்ஷன் போன்றவை சேயின் வளர்ச்சியைப் பாதிக்கலாம்.

பிரசவத்தைப் பற்றி மற்றப் பெண்கள் சொல்லும் கருத்துக்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவோ, அவர்களது பேறு கால அனுபவங்களை உங்களது அனுபவங்களுடன் ஒப்பிடவோ வேண்டாம். ஏனெனில், ஒவ்வொருவரது பேறு கால அனுபவங்களும் ஒவ்வொரு விதத்தில் வேறுபடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக தாய்மையைப் பற்றிய தேவையற்ற குழப்பங்களையும், அச்சங்களையும் தவிர்த்து அமைதி காத்தலே ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க உதவும். ■

## இப்படி ஒரு பரிசோதனை

ஒருவர் சாப்பிடுவதையெல்லாம் ஒரு பிளாஸ்டிக் பையில் அன்றாடம் போட்டுப் பார்த்தால் பயங்கரமாக இருக்கும்.

காலையில் தேனீர் குடிப்பது உண்டா? இன்று நீங்கள் அதைக் குடிக்க வேண்டாம்.

குறிப்பிட்ட பிளாஸ்டிக் பைதான் உங்கள் வயிறு என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அதில் தேனீரை ஊற்றிக் கொள்ளுங்கள்.



கொஞ்ச நேரத்தில் முறுக்கு சிறிது கொறிக்கிறீர்களா? நீங்கள் கொறிக்க வேண்டாம்.

கையால் நொறுக்கி அதே பிளாஸ்டிக் பையில் போடுங்கள். அதுதானே உங்கள் வயிறு.

எப்படியும் கொஞ்சம் தண்ணீர் அருந்துவீர்கள். அதையும் அதே பையிலேயே ஊற்றுங்கள்.

மூன்று வேளைக்குரிய சாப்பாட்டில் சோறு, கறி, ரசம், மோர், ஊறுகாய், சிற்றுண்டிகள் அடங்கும்.

இவற்றையும் அதே பையில் போடுங்கள். சாப்பிட்டதும் வெற்றிலை, பாக்கு போடும் பழக்கம் உண்டா? நீங்கள் போட்டுக் கொள்ளாதீர்கள். அரையும், குறையுமாகக் கடித்து அந்தப்பையில் துப்பிவிடுங்கள்.

இதுபோல், காலை 6 மணிக்குத் தொடங்கி, இரவு படுக்கும்வரை நீங்கள் சாப்பிடுகின்ற வழக்கமான மற்றும் சாப்பிட நினைக்கும், எல்லாப் பொருட்களையும் குடிக்க நினைக்கும் நீரையும் பான வகைகளையும் அந்தப் பிளாஸ்டிக் பையில் போட்டுவிடுங்கள்.

இரவு படுக்குமுன் அந்தப் பையைப் பார்க்க அசிங்கமாகவும், வெறுப்பாகவும் இருக்கும்.

அந்தப் பைதான் உங்கள் வயிறு என்று நினையுங்கள். சீ என்றாகி விடும்.

ஆனால், இதே பை நமது வயிறாக இருந்தால், இயற்கையின் அழகிய அற்புத சக்தியால் ஆறு மணி நேரத்திற்குள் அத்தனை பொருட்களும் ஜீரணமாகி, அவற்றிலுள்ள சத்துக்கள் உடலின் இரத்தத்தோடு கலந்து நம்மை இயங்க வைக்கின்றன.

திணித்துத் திணித்து வயிற்றைக் கொடுமைப்படுத்தாமலிருக்க, இந்தப் பிளாஸ்டிக் பை நேர்காணல் முறையை ஒரு தரம் செய்து பார்த்தால் உணவு விஷயத்தில் எச்சரிக்கையும், அதன் பயனாக நிதானமும் ஏற்படலாம். ■


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.





**வாரம் ஒரு பட்டுச் சேலை** CV

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை—நேர்மை—வெளிப்படைத் தன்மை**

பி:கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-12-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 13

டயானாவைப் பார்த்ததும் கமீலா புன்னகைத்தாள். ஆனாலும் அந்தப் புன்னகையில் கள்ளம் இருப்பதாக தன் உள்மனம் உறுத்தியதாக டயானா பின்னர் கூறியிருக்கிறார்.

சாள்ஸைப் பார்த்து கண்சிமிட்டிய கமீலா,"என்ன, உங்களை கொத்திக் கொண்டு செல்லப்போகும் கொக்கு இவள்தானா?" என்று கேட்டபோது, டயானா ஒப்புக்காகச் சிரித்து வைத்தாள்.



டயானாவுடன் சகோதரி ஜேன் மற்றும் ஹென்றி

எனினும் சாள்ஸ்–கமீலா உறவு பற்றிய சந்தேகங்கள் எழுந்தபின்னர்தான், முதன் முதலாக கமீலாவைச் சந்தித்தபோது, அவளது புன்னகைக்கான அர்த்தங்களும், பேச்சுக்கான கோணங்களும் டயானாவுக்கு முழுதாகப் புரிந்தன.

டயானாவின் கையைப் பற்றிய கமீலா, "இன்று முதல் நீயும், நானும் நண்பிகள். நீ மட்டுமல்ல சாள்ஸும் எனக்கு நண்பர்தான். இனிய நண்பர்" என்று கூறினாள். பின்னர் டயானாவின் கன்னத்தில் இலேசாகத் தட்டிவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டாள். "யார் இந்த சீமாட்டி?" என்று சாள்ஸிடம் கேட்டாள் டயானா.

கைக்குட்டையால் தன் முகத்தை துடைத்தபடி சாள்ஸ், "எங்கள் குடும்ப நண்பி. ரொம்ப நல்ல பெண்."

உடனே டயானாவுக்கு ஏன் அப்படிக் கேட்கத் தோன்றியதோ தெரியவில்லை. கேட்டுவிட்டாள்: "ரொம்பவும் அவளை அறிவீர்களோ?" கேட்டபின்னர்தான் தன் அதிகபிரசங்கித்தனத்துக்காக நாக்கை கடித்துக் கொண்டாள்.

ஆனால், சாள்ஸ் சாமர்த்தியசாலி. மிகச் சுலபமாகச் சமாளித்தார்.

"டியர்! உன்னைவிட வேறெந்த பெண்ணையும் நான் ஆழமாக அறிய விரும்பியது இல்லை." டயானாவின் இதழ்களில் தன் விரல்களை வைத்து மென்மையை ஸ்பரிசித்து, மேலும் கீழும் விரல்களால் வருடினார்.

பொய் கொஞ்சம் கலந்தால், காதல் இனிக்கும். டயானாவுக்கும் இனித்தது. தன் இதழ்களை ஸ்பரிசித்த விரல்களை மென்மையாக முத்தமிட்டாள் ஏமாந்துபோன டயானா.

### புகைப்படங்கள்

'இங்கிலாந்தின் எதிர்கால இளவரசி' என்ற தலைப்புடன், சாள்ஸ், டயானா இருவரையும் அவர்களுக்குத் தெரியாமல் எடுத்த

## மனப் போராட்டத்தில் சாள்ஸ்

புகைப்படங்கள் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

டயானா பணியாற்றிய பாடசாலை முன்பாகவும் புகைப்படப்பிடிப்பாளர்கள் கமராவுடன் தவம் கிடந்தனர்.

பாடசாலையின் பின்புற வழியாக வெளியேறி, தன் தோழி வீட்டுக்குச் சென்றாள் டயானா.

என்ன ஆச்சரியம், அந்த வீட்டையும் எப்படியோ கண்டு பிடித்து வந்து குழுமிவிட்டனர்.

அழைப்பு மணி அடிக்கடி அழுத்தப்பட்டது. டயானாவின் தோழி சென்று பேசிப் பார்த்தாள்.

"ஒரே ஒரு தடவை வெளியே வந்து, ஒரே ஒரு போஸ் கொடுக்கச் சொல்லுங்கள். நாங்கள் போய் விடுகிறோம்" அடம்பிடித்தார்கள்.

வேறு வழியின்றி டயானா வெளியே வந்தாள். அப்போது மெல்லிய துணியில் டயானா ஆடை அணிந்திருந்தாள்.

கமராக்கள் வெளிச்சங்களால் டயானாவை நனைத்தன. தொட்டுப் பார்த்தன. அளவெடுத்தன.

மறுநாளே அப் புகைப் படங்கள் பிரிட்டனின் சகல பத்திரிகைகளிலும் வெளியாகின.

டயானாவின் மேனி வனப்பை மெல்லிய ஆடை பிரகடனம் செய்து கொண்டிருந்தது. டயானாவின் நீளமான கால்கள் துல்லியமாகக் காட்சிதந்தன.

பக்கிங்ஹாம் அரண்மனையில் மகாராணியாரும் அப் புகைப்படத்தைப் பார்த்தார்.

"இந்த ஆடையோடு போஸ் கொடுத்திருக்கிறாளே, பைத்தியக்காரப் பெண். பத்திரிகையாளர்களுடன் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளச்சொல்" சாள்ஸை அழைத்து கூறினார்.

டயானாவுக்கு அதற்கு முன்னரே சாள்ஸ் ஃபோன் செய்திருந்தார்.

காலை எழுந்தவுடன் சாள்ஸ் கண் விழித்தது டயானாவின் அந்தப் புகைப்படம் வெளியான பத்திரிகைகளில்தான்.

பார்த்ததும் ஃபோன் செய்தார். "உன் கால்கள் மிக அழகானவை.. எடுப்பானவை என்பது எனக்கும் தெரியும். ஆனால் இத்தனை எடுப்பாக இருக்கும் என்று நினைக்கவில்லை. செதுக்கி வைத்ததுபோல இருக்கின்றன. நீ மட்டும் இப்போது அருகே இருந்தால் அந்த கால்களில்..."



தனது மாளிகையில் டயானா–பலெற் நடனப் பயிற்சி

மறுமுனையில் வெட்கத்தில் மௌனித்தாள் டயானா. மகாராணியாரின் கருத்தை டயானாவிடம் சாள்ஸ் கூறவில்லை.

இதற்கிடையே தன் தோழிகளுடன் விருந்துக் கேளிக்கைகளிலும் கலந்து கொள்ள டயானா தவறுவதில்லை.

### நண்பனின் மடியில்

டயானா தன் தோழிகளுடன் சென்றாலும் கூட, இளம் பையன்கள் டயானாவைத்தான் மொய்த்து நிற்பார்கள்.

"உன்னோடு வந்தால் எங்களை கவனிப்பாரே கிடையாது" என்பார்கள் தோழிகள்.

விருந்துக்கேளிக்கை ஒன்றில் டயானாவின் நீண்டகால நண்பனான ஹேர்பேர்ட் தன் மடியில் டயானாவை தூக்கிவைத்திருக்க, கமராக்கள் அக் காட்சியை தங்களுக்குள் வாங்கிக் கொண்டன.

டயானா அதனையிட்டு கவலைகொள்ளவில்லை. ஹேர்போர்ட்டின் பிடியில் இருந்தபடியே போஸ் கொடுத்தாள்.

அப் புகைப்படங்களில் ஒன்று எப்படியோ, யாரோ ஒரு புகைப்படக்காரர் மூலம் இளவரசர் சாள்ஸின் பார்வைக்குச் சென்றது.

சாள்ஸுக்கு அந்த இளைஞனை தெரியும். மகாராணி குடும்பத்தின் குதிரையோட்ட பந்தய அமைப்பின் நிர்வாகியான ஏர்ல் கார்ஹாவன் என்பவரது இரண்டாவது மகன்தான் ஹரி ஹேர்போர்ட்.

தன் எதிர்கால மனைவியும், பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் எதிர்கால மருமகளும், வருங்கால மகாராணியுமான டயானா, பிற ஆண்களுடன் சகஜமாகப் பழகுவதை பிற கண்கள் எப்படி நோக்கும்? கவலைப்பட்டார் சாள்ஸ்.

இன்னொரு கவலையும் சாள்ஸை அரித்தது.

இளைஞர்களுடன் பழகும் இளம் டயானா தன்னைக் காதலிப்பது ஏன்? தன் காதலை ஏற்றுக் கொண்டது ஏன்?



ஹரி ஹேர்போர்ட்டின்மடியில் டயானா. அருகே நண்பிகள்

ஒருவேளை மகாராணியாகும் ஆசையால்தானோ? மனப்போராட்டத்தில் அடிக்கடி சிக்கிக் கொண்டார் சாள்ஸ்.

தனது அபிப்பிராயங்களை டயானாவிடம் நேரடியாகக் கூறுவதற்கோ, மனம் விட்டுப் பேசுவதற்கோ சாள்ஸுக்கு அறவே துணிச்சல் கிடையாது.

டயானாவின் சகோதரி ஜேன் முன்னர் சாள்ஸுடன் பழகியதுபோலவே, பின்னர் இன்னொரு ஆணுடன் பழகி வந்தார்.

அவரது பெயர் ஹென்றி. இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினர். பாராளுமன்ற உறுப்பினர் என்பதால், வயதானவர் என்று கற்பனை செய்துவிடாதீர்கள். இளைஞர். கேளிக்கைப் பிரியர்.

தனது சகோதரியின் ஆண் நண்பருக்கு டயானா சூட்டிய பட்டம் எலி.

அந்த எலியின் பார்வை தனது சகோதரி ஜேனிடம் இருந்து விலகி, தன்னை நோக்கிப் பாய்வதை டயானா புரிந்து கொண்டாள்.

ஜேனைக் காண வருவதுபோல டயானாவைக் காண வந்தார் ஹென்றி.

ஜேனுக்கு ஃபோன் செய்வதுபோல, டயானா ஃபோனில் கிடைப்பாளா? என்று தேடுவார் ஹென்றி.

ஹென்றியின் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்தாள் டயானா.

தனக்கும், இளவரசருக்கும் உள்ள காதலைப் பற்றி ஒருநாள் ஹென்றியிடம் கூறினாள்.

அவரது ஏமாற்றத்தை தவிர்க்கும் நல்லெண்ணத்துடன்தான் டயானா அதனை கூறினாள்.

ஆனால் ஹென்றியால் டயானாவின் இழப்பைத் தாங்க முடியவில்லை.

அவர் மனதில் கபடமான திட்டம் ஒன்று தோன்றியது.

(அடுத்த வாரமும் வரும்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மூதூர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**திருமதி அ. அன்னலெட்சுமி, வட்டார இல.06, சேனையூர், மூதூர்.**


பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்



# தேனீர் கிண்ணம்

முத்தெனச் சிதறிற்றுன்
இதழுதிர் பூக்கள்
நெஞ்சு மயிர் நீவி,
நீவிப் பரந்தென் மார்பில்
கிளிமூக்குரசினாய்
உன் முகத்தை அப்பி!
**
கடுமிருட்டு
கார் கூந்தலிடை கையளைந்து
நீள் விரல் மடக்கிச் சொடுக்கிட்டு
புறாக் கழுத்து வடிருடிச் சளைத்து
மெல்லிதழ் முத்தி ஊருமென் கரம்!
**
என் மடியழுந்த முகம் புதைத்து
சீ... விடுங்களென்பாய்
அழகான சங்கீதம்!
**
அது நிலவுதிர்காலம்
பனிச்சொட்டென நீரொழுக
பற்றியிழுத்து இவென்றாய்
பின் கழுத்தை வளை வளைத்து
மார்போடொன்றி விசும்பிற்றுன்–பூநெஞ்சு!
**
என் பிரிய ரோசா
உப்பிச் சிறுத்தவுன் மூஞ்சினது
மழைகண்டு, விழியுடையச் சரிந்தேன்
உன் மார்பில்!
**
நம் காதலைக் கொன்றவுன்
முன்னெறி தெய்வங்களை
சபித்தே கொல்வனென்றாய்
தேம்மலிடை!
**
கிணற்றடி பூவரசில்
முதுகண்டி வெறித்திருப்பேன்
உறக்கம் குடித்த உன்னது
நினைவட்டை,
சுருண்டிருக்கும் என்னுள்ளே!
**
இருந்தாற்போல்–
வானப்பொட்டின் ஜோதியிலெழுமுன்
திருமுகம்.
தனியனாய் குந்தியிருக்க
நுனிமனசில் தீயெரியும்
பின் குளிரும் சில்லென மனம்!
**
40 தின்பின்–
நாமொரு பைத்தியம்
ஒரு தாரமும்– சில குழந்தையுமானபின்
நம் இளந்தாரிக் காதல்
எம் மாத்திரம்?

என் சுஹா.

# புரிந்துகொள்

முகாமுள் எல்லைப்பட்ட
அகதியின் துயரமும்,
போரில் புலம்பெயர்ந்த
உனது அவலத்தையும்,
எனக்கும் பழகிப் போன
வாழ்க்கை நியதிகள்தான்!
*
சிதறிக்கிடக்கும் விண்மீன்கள் போன்ற
எம் மண்ணின் மக்களும்,
வேரோடே பிடுங்கி வீசப்படும்
எமது வாழ்வும்,
சரித்திரங்களாக ஒருநாள்
விமர்சிக்கப்படும்–போற்றப்படும்!
*
வசந்தங்களை எதிர்பார்க்கின்ற நீ...
இலையுதிர்வை ஜீரணித்துக் கொள்,
*
ஒரு சோலையைத் தேடும் நீ...
இந்தப் பாலைவனத்தைத் தாண்டியே
பயணிக்க வேண்டும்,
பிரியவளே!
வாரிப்போன நினைவுச்சுவடுகளை அழி–
புதியதோர் அணிந்துரை எழுது,
கானலுக்கும் கங்கைக்கும்
வேறுபாட்டைப் புரிந்துகொள்!
*
ஒரு காலம் வரும்...
உன்னுள்ளும் ஈரம் வரும்
அதுவரை...
வாழ்க்கையென்பது
கற்பனைகளின் சாம்ராஜ்ஜியமல்ல
முட்புதர்களின் கானகமென்பதைப்
புரிந்துகொள்–தெளிந்து கொள்!
*

ஆத்மராஜா ராத்
சந்திரிக்கா–பிலிமத்தலாவ.

# ஆயுதக் குழந்தை!

மருத்துவிச்சி
தலையில்
கையை வைத்தவாறு
வெளியே வந்தாள்.
•
ஆவலோடு
கணவன் கேட்டான்,
"பிறந்தது
ஆணா? பெண்ணா?"
•
"இப்படிப்
பார்த்ததில்லை.
தலைவரும்
அல்லது
கால்வரும்
இது
இரண்டுமல்ல"

தாய்க்குத்
தலைப் பிரசவம்
ஆஸ்பத்திரியும்
அம்புலன்சும்
இங்கில்லை
மரத்துக்குக்
கீழே
குந்தியிருந்து
கலங்கினான்
கணவன்!
•
மருத்துவிச்சி
வெளியே வந்தாள்.
"ஒரு 'துவக்குப்'
பிறந்திருக்கு!"
•
அதிசயமாக
உள்ளே
நுழைந்தான்
உண்மையாகவே
ஒரு துவக்கு!
•
பெருமூச்சு
விட்டான்.
"பிள்ளை
வயிற்றுக்காரி
அடிக்கடி
எதனைப்
பார்க்கிறாளோ
அப்படியே
பிள்ளை பிறக்கும்"
எங்கோ
வாசித்த ஞாபகம்'

மாரிமுத்து
யோகராஜன்,
அக்கரைப்பற்று–08.

# தூரத்து நண்பனுக்கு

என்னை
தூக்கியெறிந்துவிட்டு
தூரத்திற்குப்போனவனே!
உன்
பிரிவுப்பாலைவனத்தில்
நினைவிழந்தும்
நிதானமுற்றும்...
நான்!
—•—
சோகத்தையே
சுமந்து சுமந்து
சுருங்கிப்போனது
என்
மனசு!
—•—
உனக்குத் தெரியுமா?
என்
மன முற்றத்தில்
கருகிக் கிடக்கும்
சந்தோஷ
மலர் மொட்டுக்களை
மலரச் செய்யும் சக்தி
உன்
கடிதத்திற்கு மட்டும்தான்
உண்டு!
—•—
உன்னோடு
பேசாமல்...
மௌனித்திருந்து
என்னமாய்
வாடிப்போனது
என்
இதழ்கள்!
—•—



சுருக்கமாகச் சொன்னால்
சுவர்க்கடிகாரம்
இன்னிசை பரப்பி...
மணியடிப்பதுபோல்
என்
மனக்கடிகாரம்
உன்
நினைவிசை..
பரப்பியே
அடிக்கடி
-மணியடிக்கிறது!

காவத்தமுனை– ஹாறூன்,

# வல்"அ"ரசுகள் வளை குடா க்க கள்

நீங்கள்
எதை உண்கிறீர்கள்?
எம்மிடம் சொல்லிவிட்டு
உண்ணுங்கள்!
***
நீங்கள் சமையலுக்கு பாவிக்கும்
பதார்த்தங்கள் பற்றி
எமக்கு சொல்லுங்கள்!
***
உங்கள்
குளியலறை கதவை
திறந்து வைத்துவிட்டு
குளியுங்கள்!
***
உங்கள்
கழிப்பு அறைக்கு
கதவுகள் போட
வேண்டாம்!
நாம்
பார்க்க வேண்டும்.
***
அரண்மனையின்
அந்தப் புரங்களின்
கதவுகளையும்
சாத்த வேண்டாம்.
***
மனைவியுடன்
பேசுவதற்கு
மட்டுமல்ல
எல்லாவற்றிற்கும்
எம்மிடம்
அனுமதி பெறவேண்டும்.
***
இப்படி சொல்வதால்
எம்மை
தப்பாக
நினைக்க வேண்டாம்!
***
நாங்கள்
'உலகின் காவல்காரன்'
உங்களை காப்பது
எம் கடமை!
***
எங்களை மட்டும்,
இப்படி எல்லாம்
செய்யச் சொல்லி
கேட்க வேண்டாம்.

சுபா வரன், கண்டி.







# பிறந்தநாள்

டிசம்பர் 12 ரஜினியின் 47வது பிறந்தநாள். சொந்தப் பெயர் சிவாஜி ராவ். (நடிப்புலக இமயத்தின் பெயரில் பாதி) பாலச்சந்தர் வைத்த பெயர். ரஜினிகாந்த் (இதுவும் 'கௌரவம்' படத்தில் சிவாஜியின் பாத்திரப் பெயர்தான்) கறுப்புக் காந்தம் என்றும் அழைக்கிறார்கள்.







## இந்த வாரம் உங்கள் பலன்

(14.12.1997 தொடக்கம் 20.12.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், புதன். |
| மகரம் | - வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிங்கம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- | வீண் முயற்சி, பலவித கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, பணச் செலவு. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, கடன் படல். | பி.ப. 1 மணி |
| சனி- | துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தொழில் உயர்ச்சி, பலவித நன்மை. | பி.ப. 1 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | இனசன மகிழ்ச்சி, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, பண வரவு. | பி.ப. 1 மணி |
| சனி- | காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், பொருள் பேறு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகாயம், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பலவித கஷ்டம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் கஷ்டம், அந்நியர் பகை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, கௌரவம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- | மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- | பணக் கஷ்டம், கடன் படல். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பெரியோர் சுகம், கௌரவ மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, வெளியிட வாழ்க்கை. | மு.ப. 10 மணி |
| புதன்- | இனசனப் பகை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தொழில் கஷ்டம், மனக் கவலை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| திங்கள்- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | உறவினரால் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, கௌரவ மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- | பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, பயனுள்ள செயல். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| புதன்- | உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- | பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- | கடன்சுமை, கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் சுகம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தொழில் உயர்ச்சி, கௌரவ மிகுதி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன்- | இனசன நன்மை, மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, பலவித பேறு. | மு.ப. 10 மணி |
| சனி- | தொழில் மந்தம், பண வரவு குன்றும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | பெரியோர் சுகம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், பொருள் நஷ்டம். | பகல் 11 மணி |
| புதன்- | பிரயாணமிகுதி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை. | மு.ப. 1 மணி |
| சனி- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | கௌரவக் குறைவு, காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| புதன் - | தொழில் உயர்ச்சி, பலவிதபேறு. | பகல் 11 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| புதன்- | பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பெரியோர் சுகம், பண வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | முயற்சி பலிதம், தொழில் கஷ்டம். | பகல் 11 மணி |
| சனி- | பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் கஷ்டம், கடன் சுமை. | மு.ப. 10 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, பிரயாண மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| புதன்- | துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| சனி- | கடன் தொல்லை, மனக்கவலை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4



www.padippakam.com
படிப்பகம்





தாரகை என்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போ மனமே
சரச் சுவையதில் ஊறி வரும் அதில்
இன்புறுவாய் மனமே!

—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# முயற்சியால் வென்ற மன்னன்

றொபேட் புரூஸ் ஸ்கொட்லாந்து நாட்டின் மன்னனாக இருந்தான்.

அப்போது இங்கிலாந்து ஸ்கொட்லாந்து மீது படையெடுத்தது. சண்டையில் ஸ்கொட்லாந்து, தோல்வியைத் தழுவியதால் இங்கிலாந்திடம் அடிமையானது. இதனால் மனமுடைந்த மன்னன் புரூஸ் நாட்டை விட்டுத் தப்பியோடி ஒரு குகையினுள் மறைந்திருந்தான்.

அவனின் சிந்தனையெல்லாம் நாட்டைப் பற்றியும், நாட்டு மக்களைப் பற்றியுமே இருந்தது. இங்கிலாந்துடன் நடைபெற்ற போரில் பலமுறை தோல்வி அடைந்ததால் அவன் மனம் உடைந்து விட்டது.

'இவ்வளவு தடவைகள் தோல்வியடைந்து விட்டோமே இனிமேலும் போர் செய்வதால் வெற்றி பெற முடியாது. தாய் நாட்டை விடுவிக்கும் முயற்சியைக் கைவிட்டு விட வேண்டியதுதான்' என்று வருத்தத்துடன் முடிவு செய்தான் புரூஸ்.

இவ்வாறு அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அவன் கண்கள் குகையின் மேற்பக்கம் தொங்கிக் கொண்டிருந்த சிலந்தியைப் பார்த்தது.

அந்தச் சிலந்தி வலை பின்னுவதற்காக குகையின் மறுபக்கம் பாய்ந்தது. ஆனால் கீழே விழுந்துவிட்டது. சிலந்தி இப்படிப் பல தடவைகள் முயற்சி செய்து கொண்டிருந்தது.

இதைப் பார்த்த புரூஸுக்கு சிரிப்பு வந்தது. சிலந்தி மீண்டும் மீண்டும் முயன்று இறுதியில் குகையின் மறுபக்கத்தை அடைந்தது.

'ஒரு சாதாரண சிலந்தி இவ்வளவு தூரம் முயற்சி செய்து வெற்றி பெற்று விட்டதே. நாம் ஏன் முயற்சிக்கக்கூடாது' என்று எண்ணினான்.


உடனே அக்குகையில் இருந்து வெளியேறி ஸ்கொட்லாந்தை அடைந்தான். ஸ்கொட்லாந்து எதிரிகளின் பிடியில் இருந்ததால் அந்நாட்டிற்கு வெளியே தனது போர்த்தளபதிகளை அழைத்துப் பேசினான். போர்க்கருவிகளைத் தயாரித்துப் படைகளைத் திரட்டினான்.

படையைத் திரட்டிக் கொண்டு ஸ்கொட்லாந்து நாட்டில் உள்ள இங்கிலாந்துப் படையுடன் போரிட்டான். இதிலும் புரூஸுக்குத் தோல்வியே கிட்டியது.

இதனால் சற்றும் தளராமல் மீண்டும் போரிட்டு இங்கிலாந்துப் படையை விரட்டியடித்துத் தன் தாய்நாட்டை மீட்டார்.

## அதிசயம் — ஆனால் உண்மை!

### தீவாக மாறிய கப்பல்:



↑ ஃபிரெஞ்ச் மற்றும் டச் கயானாவுக்கு இடையேயுள்ள ஆற்றின் நடுவே கவனிப்பாரற்றுக் கிடந்த கப்பலில் மண் படிந்து, மரம் செடிகள் முளைத்து விட்டன. ஆற்றுக்கு நடுவே இருந்த இந்தக் கப்பல் 36 வருடங்களில் ஒரு சிறு தீவாக மாறி விட்டது.

### வெள்ளிச் சிலுவை



→ ஜெர்மனியில் உள்ள லால்பே என்ற இடத்திற்கு அருகே, ஜெண்டர்பக் சுரங்கத்தில் காணப்படும் வெள்ளி, இயற்கையிலேயே சிலுவை போன்ற உருவத்தில் அமைந்தது.

### மரணத்தின் பின் நறுமணம்



← இந்தச் செடி உயிருடன் இருக்கும்போது வாசம்தராது. இதன் இலைகள் வாடிக் கருகிவிழுந்த பின்தான் இவற்றில் வெனிலா வாசம் வீசும்.

### பெரிய தோடம்பழம்



← நியூயோர்க்கில் உள்ள புருக்லின் என்ற இடத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் தோட்டத்தில் 19 1/2 அங்குலம் சுற்றளவு கொண்ட தோடம்பழம் ஒன்று உற்பத்தி செய்யப்பட்டது.

## வாரம் ஒரு நாடு

### டொமினிகா



தலைநகர்– ரோஸியாவ்
பரப்பு– 750 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை – 88,000
மொழி – ஆங்கிலம், ஃபிரெஞ்ச் படோய்
எழுத்தறிவு – 90%
சமயம் – கிறிஸ்தவம்
நாணயம் – கிழக்கு கரீபியன் டொலர்
தனிநபர் வருமானம்– 1650 டொலர்

**அமைவிடம்:**

கரீபியன் கடலில் அமைந்துள்ளது. தெற்கே கௌதலாப்பும்; வடக்கே மார்ட்டினிக்கும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

1978ல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது. முப்பது உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றம் உள்ளது.

**பொருளாதாரம்:**

விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை முக்கிய வருமான மூலங்கள் ஆகும்.

## போரின் விளைவுகள்



இதுவரை நடந்த போர்களில் முதல் உலகப் போரில்தான் அதிகமான இராணுவ வீரர்களும், பொதுமக்களும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| ஜெர்மனி – | 20 இலட்சம் படைவீரர்கள் |
| ரஷ்யா – | 17 இலட்சம் படைவீரர்கள் |
| ஒஸ்ரியா-ஹங்கேரி – | 12 இலட்சம் படைவீரர்கள் |
| இத்தாலி – | 6 இலட்சத்து 50 ஆயிரம் படைவீரர்கள் |
| பிரிட்டன் – | 7 இலட்சத்து 60 ஆயிரம் படைவீரர்கள் |
| துருக்கி – | 3 இலட்சத்து 75 ஆயிரம் படைவீரர்கள் |
| அமெரிக்கா – | 12 இலட்சத்து 60 ஆயிரம் படைவீரர்கள் |
| பொதுமக்கள் – | 12.5 பில்லியன் பேர் |

அதுமட்டுமன்றி 8000 சதுரமைல் விளைச்சல் நிலங்களும், 50 மில்லியன் கட்டடங்களும் வீடுகளும் அழிக்கப்பட்டன.

## மக்னீசியம்



ஹம்ப்ரி டேவி

மக்னீசியம், வெள்ளியைப் போல ஓர் உலோகம். உலோகங்களில் மிகவும் இலேசானது மக்னீசியம் தான். கி.பி. 1808ல் ஆங்கில வேதியியல் அறிஞர் ஹம்ப்ரி டேவியால் கண்டுபிடிக்கப்பட்டது.

இது கிரேக்க நகரான மக்னீசியாவுக்கு அருகில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டதால், 'மக்னீசியம்' என்று பெயரிடப்பட்டது.

இதைத் தகடாக அடிக்கலாம். கம்பியாகவும் நீட்டலாம். இது எரியும்போது, மிகுந்த பிரகாசமான ஒளியைக் கொடுப்பதால் இதன் தூளை எரித்து, அதனால் ஏற்படும் ஒளியில், இருட்டில் படம் பிடிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

வெண்கலம், நிக்கல், வெள்ளி ஆகிய உலோகக் கலவை தயாரிப்பதில் மக்னீசியம் பயன்படுகின்றது. அலுமினியத்துடன் மக்னீசியத்தைச் சேர்த்துத் தயாரிக்கும் உலோகக் கலவைக்குப் பெயர் மக்னேலியம்.

மிகவும் இலேசாக இருக்கும் மக்னேலியம் உறுதி வாய்ந்தது. ஆகாய விமானத்திலுள்ள பல பாகங்கள் மக்னேலியத்தினாலானவை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.12.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 223
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 221

பரிசுக்குரியவர்:
சங்கீதா மாணிக்கராசா,
உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருக்கோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பிரியதர்ஷினி மோகன், ப.த.ம.ம.வித்தியாலயம், பண்டாரவளை. | ரி. தசரதன், சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம், முறக்கொட்டான்சேனை. |
| வஸீம் மஹ்ருப், அல்-ஹம்றா மு.ம.வித்தியாலயம், கட்டுகஸ்தோட்டை. | எஸ். கோகில ஹர்ஷணி, பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி. |
| சிறீஸ்கந்தராசா லோகிதராஜ், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. | கே. ஸ்.ப்ராஸ் மொஹமட், மஹவெல முல்ல, முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. |
| கே. தட்சனி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா. | தர்ஷனி ராஜசேகர், எல்பட தமிழ் வித்தியாலயம், பொகவந்தலாவ. |
| ரிஸ்னா ஹமீட், மகளிர் வித்தியாலயம், நாவலப்பிட்டி. | இப்திகார் பாரிட், ஜமீமுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடத்தலவின்ன. |

## விடுகதைகளும் விடைகளும்

1. நோயில்லாமல் இளைப்பான், உணவில்லாமல் பருப்பான்.
   அவன் யார்?
2. இணையாக வருவர், ஆனால் இணைய மாட்டார்கள்.
   அது என்ன?
3. இலை இல்லாத மரம், தலைமேலே முளைத்திருக்கு.
   அது என்ன?
4. அணிந்தால் அழகு, தின்றால் விஷம்.
   அது என்ன?
5. மணியடித்தால் மலைப்பாம்பு நகரும்.
   அது என்ன?
6. இளமையில் பச்சை, முதுமையில் சிவப்பு.
   அது என்ன?
7. குளிரில் உறையாத திரவம், வெந்நீரில் உறையும்.
   அது என்ன?
8. நெளிந்த கிழவிக்கு உடலெல்லாம் பல்.
   அது என்ன?
9. அன்றாடம் மலர்ந்து அனைவரையும் கவரும்.
   அது என்ன?
10. வெய்யிலில் மலர்வான், காற்றில் உலர்வான்.
    அவன் யார்?

### விடைகள்

| | |
|---|---|
| 1. நிலா | 2. தண்டவாளம் |
| 3. மான்கொம்பு | 4. வைரம் |
| 5. இரயில் | 6. மிளகாய் |
| 7. முட்டை | 8. அரிவாள் |
| 9. கோலம் | 10 வியர்வை |

தொகுப்பு: ஏ. அகல்யா.

## தென்னாபிரிக்க கீரி



கீரிப்பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்த பாலூட்டி விலங்குகளில் ஒன்றுதான் மீர்காட். இவை தென்னாபிரிக்காவில் வசிக்கின்றன.

இந்தக் கீரிப்பிள்ளைகள் எல்லாக் கீரி இனங்களைப்போல் இல்லாமல், சற்று வித்தியாசமானவை. இவை எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பதுடன் பின்னங்கால்களால் முயல்கள் போல் நிற்கும் திறன் பெற்றவை.

இவை எழுந்து நிற்கும்போது எப்பொழுதும், சூரியகாந்தி மலர்போல் சூரியனை நோக்கியே தமது வயிற்றைக் காட்டி நிற்கும். எனவேதான் இவற்றைச் 'சூரியனை வணங்கும் கீரி' என அழைக்கின்றனர்.

இவை பூமிக்கடியில் குழிகள் தோண்டி, 25 வரையான எண்ணிக்கை கொண்ட கூட்டங்கூட்டமாக வசிக்கின்றன.

பெற்றோர் விலங்குகள் வேட்டையாடி உணவு கொண்டுவரச் செல்லும் நேரங்களில் அந்தக் குடும்பத்தின் மூத்த விலங்குதான் தனது சகோதர, சகோதரி விலங்குகளைப் பாதுகாப்பாகக் கவனித்துக் கொள்கிறது.

## ஒளித்துகள்கள்



மின்னலைப் போன்று சிற்சில ஒளிகளை வானத்தில் உண்டாக்குபவை ஒருவகை ஒளித்துளிகள். இவை 'அரோராக்கள்' என அழைக்கப்படும்.

இந்த அரோராக்கள் நோர்வே, கனடா, ஸ்கொட்லாந்து, அலாஸ்கா போன்ற நாடுகளில் தோன்றுகின்றன.

சூரியனில் இருந்து அணுத்துகள்கள் பூமியை நோக்கி வரும்போது, அவைகள் காற்றுடன் மோதுகின்றன. இதனால் ஏற்படும் வெளிச்சமே 'அரோரா' ஆகும்.

அரோரா பூமியில் இருந்து 80 முதல் 600 கிலோமீட்டர் தூரத்தில் வானத்தில் தோன்றுகின்றன.

www.padippakam.com

**புதிய தொடர் 1**

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி சஸ்பென்ஸ் கலந்து எழுதிய விறு விறு நாவல். உங்களைக் கவரும். இனி வாரா வாரம் வாசிப்பது உங்கள் முறை!

# இனி என் முறை

எழுத்துச் சித்தர் பாலகுமாரன்



அமுதா நுனி பாதத்தில் மெல்ல நடந்து, வீட்டை விட்டு வெளியே வந்தாள். ஓசைப் படாமல் கதவுகளைச் சாத்தினாள். பூட்டை விடுவித்து அகற்றி நாதங்கியை மேலும் கீழும் அசைத்துப் பொருத்தினாள். பூட்டினாள். நகர்ந்து ஹீல்ஸ் ஷூவை மாட்டிக் கொண்டாள். வீடு சுற்றி ஜன்னல் பக்கம் போய் படுக்கையறை திரைச்சீலை விலக்கி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

உள்ளே செல்வராஜ் அமைதியாய் ஒருக்களித்து தூங்கிக் கொண்டிருந்தான். இடுப்பு லுங்கி நெகிழ்ந்து உடம்பைச் சுற்றிக் கொண்டிருந்தது. அகலமான மார்புப்படம் சீராய் சுவாசத்தில் ஏறித் தாழ்ந்து கொண்டிருந்தது.

"குண்டப்பா... சைலண்டா தூங்கு. அரைமணி நேரத்துல வந்துருவேன்." தோட்டத்தில் நின்றிருந்த மொபெட் தள்ளி, காம்பவுண்ட் கதவு திறந்து, சின்ன உதையில் கிளப்பி, ஹெல்மெட் அணிந்து ஏறி உட்கார்ந்தாள். வண்டி நகர, விரைவாக்கினாள். வீடு இருந்த தெருவிலிருந்து மெயின் ரோடுக்குள் புகுந்து இன்னும் விரைவுபடுத்த முகத்தில் உச்சி வெய்யில் காற்று தாக்கிற்று.

வண்டியைத் திருகி விரட்டினாள். காற்று, வெப்பத்துடன் முகத்தில் அடித்தது.

பள்ளிக்கூட வாசலை ரிக்ஷாக் கூட்டம் அடைத்துக் கொண்டிருந்தது. மொபெட்டை ஓரம் நிறுத்தி, பூட்டு போட்டு விட்டு சாவியை உருவி விரலில் கோர்த்துக் கொண்டாள். ஹெல்மெட் அவிழ்த்து உள்ளே போனாள். தெரிந்த முகங்கள் சிரித்தன. கை தூக்கி கடிகாரம் பார்த்தாள். மணி பதினொன்று ஐம்பத்தைந்து. இன்னும் ஐந்து நிமிடம்தான். திலீபன் வந்து விடுவான். இப்போதே பையை முதுகில் மாட்டி, வாட்டர் பாட்டிலை தோளில் போட்டுத் தயாராய் காத்திருப்பான். மின்சார மணி கதறியதும் முதல் ஆளாய் வெளியே வருவான். தொலைவிலிருந்து கை காட்டுவான். பூட்ஸ் முழுவதும் புழுதிபடிய ஓடி வருவான்.

திலீபன்.... திலீபன் எங்கே? அமுதா கூடை கூடையாய் வழிந்த பூக்களில் தன் பூவைத் தேடினாள். திலீபன் நிதானமாய் நடந்து வந்தான்.

"அம்மா... கை கொடு."

"என்னடா?"

"கை கொடு." அமுதா கை கொடுத்தாள். பிள்ளை இறுகப்பற்றி வேகமாய் குலுக்கினான்.

"இன்னிலேர்ந்து நான்தான் க்ளாஸ் லீடர்."

"நடராஜு லீடர் இல்லையா?"

"அவன் நாலு நாளா ஹோம் ஒர்க் செய்துட்டு வரலை. அவன் வேணாம்னு என்னைப் போட்டாங்க. இனிமே நான் பெல் அடிச்சா உடனே வரமாட்டேன். எல்லோரும் போன பிறகு க்ளாஸ்ரூம் செக் பண்ணி, ஜன்னல் மூடிட்டு, கதவு மூடி சாவி ஹேண்ட் ஓவர் பண்ணிட்டுத்தான் வருவேன். நீ அஞ்சு நிமிஷம் லேட்டா வா, போறும்!"

மொபெட் வீட்டு வாசலுக்கு வந்த போது அவன் வராந்தாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

வாசல் கதவில் பூட்டு தொங்கிற்று.

★–★–★

மொபெட்டை வாசலில் நிறுத்திய போது, கிட்டத்தட்ட சரிகிற வேகத்தில் பிள்ளை கீழிறங்கினான். தோட்டக் கதவு திறந்து உள்ளே ஓடினான்.

வராந்தாவில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த செல்வராஜ் நிமிர்ந்தான். 'கதவு பூட்டிட்டு போனேனே எப்படி?' அமுதாவுக்கு புருஷனின் வாசல் இருப்பு ஆச்சரியமாய் இருந்தது.

"எப்படி வந்தீங்க, பூட்டிட்டு போனேனே?"

"அப்பா பின்கதவு திறந்து வந்திருப்பாங்க. இல்லப்பா?" பிள்ளை எகிறி தகப்பனைக் கட்டிக் கொண்டது. வலுவு மிகுந்த தகப்பனின் புஜம் பிள்ளையை இறுக்கிக் கொண்டது.

"கொள்ளைப் பக்கமாவா வந்தீங்க?"

"நீ பொலிஸ்காரன் பெண்டாட்டியே இல்லடி. உள்ளே வச்சு கதவு பூட்டினா புருஷன் வெளியே வர முடியாதபடி தவிப்பான்னு நினைக்கிற பாரு... நீ எம் பொண்டாட்டியே இல்ல. இது புள்ளை. எம் புள்ளை. டக்குன்னு புடிச்சான் பாரு."

"பெண்டாட்டி இல்லாத புள்ளை வானத்துலேருந்து வந்துதாக்கும்." முணு முணுத்தபடி கதவு திறந்தாள். "பின் கதவு திறந்து போட்டுட்டு வந்துட்டீங்களா?" அவசரமாய் பின் பக்கம் போனாள்.

கதவு சாத்தி உள்பக்க நாதங்கியில் பிளாஸ்டிக் பக்கெட் மாட்டப்பட்டிருந்தது.

"என்ன இது, பக்கெட் மாட்டியிருக்கு?"

"உள்பக்கம் கதவு திறந்து வெளிப்பக்கம் சாத்தி, சாத்தறப்போ பக்கெட் மாட்டியிருப்பாங்க. யாராவது கதவு திறந்தா டபால்னு பக்கெட் விழும். வாசல்ல இருக்கிற அப்பாவுக்கு சத்தம் கேக்கும்."

"பின்னிட்டடா. எட்டு வயசுப் பையனுக்கு இருக்கிறது கூட உனக்கில்லை." திலீபா... இந்த பக்கெட் விழாம வெளிலேர்ந்து கதவு திறக்கணும். உன்னால முடியுமா?"

பிள்ளை பின் கை கட்டி பக்கெட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். விருக்கென்று பட்சி மாதிரி வெளியே ஓடினான். அமுதா நகர்ந்து ஹாலுக்குப் போக முற்பட, செல்வராஜ் அவள் புஜத்தை இழுத்து நிறுத்தினான். அருகில் இறுக்கிக்கொண்டான். "இரு. என்ன பண்றான் பார்ப்போம்."

கதவு மெல்ல ஆடிற்று. அரை அங்குலம் விரிந்தது. விரிய பக்கெட் நாதங்கி நுனிக்கு வந்தது. இன்னும் ஒரு தள்ளு, பக்கெட் தடாலென்று விழும். மெல்ல ஒரு மூங்கில் குச்சி உள்ளே நுழைந்து, பக்கெட் கம்பிக்குள் நகர்ந்து உறுதியாய் நின்றது. பிள்ளை தடக்கென்று தோளால் கதவு மூடினான். பக்கெட் குச்சியில் விழுந்து அவன் கைக்குப் போயிற்று. கதவு சின்ன சத்தம் கூட இல்லாமல் அகலத் திறந்தது. பின்பக்க வாசலில் பிள்ளை சிரிப்போடு நின்றது.

செல்வராஜ் கை தட்டினான். "திருடன். திருடன் பக்காத் திருடன்!" அமுதா வியப்புடன் கூவினாள்.

திருடத் தெரியாதவன் பொலிஸ்காரனாக முடியாது. திமிர் இல்லாதவன் அதிகாரியாக முடியாது. புத்தி இல்லாதவன் இந்த உலகத்துல பிழைக்க முடியாது.

"கிட்ட வா திலீபா" பிள்ளையை அருகே அழைத்து, தலையைக் கோதினான்.

"நான் கொஞ்சம் பயந்துட்டு இருந்தேன் அமுதா. இவன் போறும் உன் துணைக்கு." பிள்ளையும் தகப்பனும் ஹாலில் நுழைந்தார்கள்.

மடமடவென்று அமுதா உணவுப் பாத்திரங்களும், தட்டுகளும் மேஜையில் பரப்ப, சாப்பிட உட்கார்ந்தார்கள். முஷ்டி மடக்கி புஜபலம் பார்த்தார்கள். எவாசில்வர் கரண்டியை முழங்காலில் வைத்து வளைத்தார்கள். நிமிர்த்தினார்கள். வளைத்தலுக்கு ஒரு கெக்கலிப்பு. நிமிர்த்தலுக்கு ஒரு கெக்கலிப்பு என்று ஆடினார்கள்.

ஆண்கள் உலகமே வேறு. ஆண்களின் சந்தோஷமே வேறு.

வன்முறையும் வல்லடியும் இயல்பிலேயே அவர்களுக்குள் இருக்கின்றன. சிதறடிக்கிற மூர்க்கம் எப்போதும் உள்ளே இருக்கிறது. ஆளுமை செய்கின்ற ஆசை, யாரும் கற்றுக் கொடுக்காமலேயே வருகிறது. ஒரு காவல்தனம் தானாய் வந்துவிடுகிறது.

எட்டு வயசுப் பிள்ளை என்ன காவல்? கூட்டல் கழித்தல் தப்பாய் போட்டு, லொட்டு லொட்டு என்று என்னிடம் அடிவாங்கும் பிள்ளை எப்படி எனக்குக் காவல்? ஏன் பயம். எதைப் பற்றி பயம். உணவுக்குப்பின் புருஷனும் மனைவியும் படுக்கை அறைக்குப் போனார்கள். பிள்ளை வாசலில் அடுத்த வீட்டுப் பிள்ளைகளோடு கிரிக்கெட் ஆடிற்று.

"அடச்சே... நான் சாதாரணமா சொன்னதை பெரிசா எடுத்துக்கிட்டியா? அவன் குழந்தைதான். அது அவன் சந்தோஷத்துக்கு சொன்னதுதான். ஆனா நான் ஊர்ல இல்லாதபோது, நீ ஜாக்கிரதையா இருக்கணுமேங்கற பயம் உண்டு. பொலிஸ்காரனை பிடிக்காதவங்க ஊர்ல நிறைய உண்டு."

"ரௌடி பசங்க தொந்தரவு வருமா?"

"என் வேலை பேட்டை ரௌடிகளோட இல்லை. பெரிய புள்ளிகளோடு. அதான் கவலை."

"புரியும்படி சொல்லுங்களேன்."

"போன வருஷம் மெட்ராஸ்ல ஒரு கேஸ் விஷயமா வந்தேன் தெரியுமா?"

"சாராய கேஸ்."

"கேஸ் போன மாசம் முடிஞ்சது. ஒண்ணரை கோடி ரூபா ஃபைன் லைசென்ஸ் கேன்ஸல்ட். ஃபைன் கட்டிட்டு நேரா என்கிட்ட வந்தாரு. தமிழனுக்குத் தமிழன் காட்டிக் கொடுக்கறது நிஜம்தான்னு புரிஞ்சுக்கிட்டேன். நன்றி, தம்பின்னாரு."

"கந்தசாமியா?"

"ம்.ம்.."

"அப்புறம்."

"நீ தமிழன் இல்லை. உனக்கு ஜாதி இல்லை. கடவுள் இல்லை. காசு தவிர, காசு சம்பாதிக்கிற வெறி தவிர உனக்கு ஒரு ஒழுக்கமும் இல்லை. இந்த உணர்ச்சிப் பேச்செல்லாம் என்கிட்ட வேணாம்னேன்."

"நான் எதுக்கும் உணர்ச்சி வசப்படாதவன் தம்பி. கோபம் கூட எனக்கு மொள்ளதான் வரும். போகப் போக புரிஞ்சுப்பே அப்படின்னு சொல்லிட்டு போயிட்டாரு."

"மிரட்டலா?"

"இருக்கலாம். இல்லை வெறும் வாய் வீம்பாவும் இருக்கலாம். அவனுங்களை சட்டுன்னு எடை போட முடியாது."

"அதனால என்னங்கறீங்க?"

"ஜாக்கிரதையா இரு. இராத்திரி கதவு தட்டினா யாருன்னு தெரியாம திறக்காத."

"வம்பு பண்ணுவாங்களா வந்து."

"நேரடியா வரமாட்டாங்க."

"எக்ஸைஸ் டியூட்டி ஏமாத்தினான்னு புடிச்சீங்களே அதானே. அதுக்கு ஒன்னரை கோடி அபராதமா?"

"மேலேயே போடணும். அவர் வக்கீல் ரெண்டு பேரு கெட்டிக்கார ஆளுங்க. மறதி, வேலை ஆட்கள் மோசடின்னு அவரை தப்பிக்க வச்சு அபராதம் மட்டும் வாங்கிட்டாங்க."

"பொய் லேபிள் ஒட்டின கேஸ் தானே?"

"ம்.ம்."

"நீங்க சுண்ணாம்பு அடிக்கிற ஆளா வேலைக்குப் போய் புடிச்சது..."

"ம்.ம்."

போன ஆகஸ்ட் மாதம் பிடித்த கேஸ் அது. ஒரு வருடத்துக்கு மேல் ஆகிறது. திடுதிப்பென்று ஒரு நாள் பெட்டியோட வந்தான். "ரெய்ட் போறேன் அமுதா, முடிஞ்சபோது வீட்டுக்கு வரேன். வேற எங்கேயும் போகாதே என்றான்.

இரவு பதினொரு மணிக்கு உடம்பு முழுவதும் சுண்ணாம்பு பொட்டுக்களோடிருந்தான். எண்ணைத் தேய்த்துக் குளித்தான்.

சாராய லைசென்ஸ் ஆளு ஏமாத்தறான். கவர்மெண்ட் எக்ஸைஸ் தராம ஒரு நாளைக்கு ஆறாயிரம் பாட்டில் சாராயம் பொய் லேபிள் ஒட்டி வெளியே அனுப்பறான். லோக்கல் ஆள் போனா மிரட்டறான். எங்களுக்கு ரிப்போர்ட் பண்ணாங்க. நெசமான்னு தெரிய உள்ள பூந்துட்டேன். ஃபாக்டரி முழுக்க சுண்ணாம்பு அடிக்கறாங்க. அந்த ஆள் கூட்டத்தோட சேர்ந்து இடம் முழுக்க சுத்திட்டேன் புரிபடலை"

"பொய் லேபிள்னா?"

"அந்த தீப்பெட்டி எடு. அதுல ஒரு லேபிள் ஒட்டியிருக்கு பாரு மூடிக்கிட்ட அது எக்ஸைஸ் டிபார்ட்மெண்ட் லேபிள். ஒரு லேபிளுக்கு இத்தினி பர்ஸென்ட்டுன்னு வரி உண்டு. வரிகட்டி லேபிள் வாங்கிட்டு வரணும்."

அவள் வியப்பாக கேட்டாள். அந்த வியப்பு அவனுக்கு பிடித்திருந்தது.

'என் புருசனிடம் இத்தனை வித்தைகளா?' விழி விரித்தபடி கேட்கத் தொடங்கினாள்.

அவன் தன் அனுபவத்தை சுவையாக விபரித்தான்.

(தொடர்ந்து வரும்)

---

## "நீதியை ஆதரிக்க எப்போதும் தயாராய் இரு"

உலகின் கெரில்லா தலைவர்களில் முன்னோடி சேகுவேரா. கியூபாவில் அமைச்சர் பதவியை துறந்துவிட்டு, பொலிவியாவில் கெரில்லாப் போர் நடத்தப் புறப்பட்டபோது தன் மகளுக்கு எழுதிய கடிதம் இது.

*அன்பான ஹில்டிடா!*

இன்று நான் உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஆனால் மிகவும் தாமதமாகத்தான் இது உனக்குக் கிடைக்கும்; நான் உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை மறந்துவிடாதே. நீ உனது பிறந்த நாளன்று மகிழ்ச்சியாய் இருப்பாய் என்று நம்புகிறேன். நீ இப்போது ஒரு பெண்ணாகியிருப்பாய், ஒரு குழந்தைக்கு எழுதுவது போல், உப்புச்சப்பற்ற பிதற்றல்களால் இந்தக் கடிதத்தை நிரப்ப முடியாது.

நான் உன்னிடமிருந்து தொலைதூரத்தில் இருக்கிறேன் என்பதையும் இங்கே நான் நீண்ட காலமாகத் தங்கியிருந்து நமது எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் எனது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்து வருகின்றேன் என்பதையும் நீ அறிந்து கொள்ள வேண்டும். இந்தப் பணியில் எனது பங்கு அதிகமில்லை; மிகவும் குறைவானதுதான். ஆனால் நான் உன்னைக் குறித்துப் பெருமிதம் கொள்வது போல், நான் உனது தந்தை என்பதற்காக நீயும் எப்போதும் பெருமைப்படுவாய் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் போராட்டம் நீண்ட நெடுங்காலமாக நடந்து வருகிறது என்பதையும், நன்கு வளர்ந்த பிறகு நீயும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்பதையும் மறந்துவிடாதே.

இடைக்காலத்தில், நீ ஒரு நல்ல புரட்சிக்காரியாக உன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதாவது, இந்த வயதில் நீ உன் பலமனைத்தையும் செலவழித்துப் படிக்க வேண்டும்.

நீதியை ஆதரிக்க எப்போதும் தயாராய் இருக்க வேண்டும். மேலும் நீ உனது அம்மாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். உன்னைப் பற்றி உயர்வாகக் கருதிக் கொள்ளக்கூடாது. இந்தக் குணமெல்லாம் வயதாக வயதாக உன்னிடம் வந்துவிடும்.

உனது பள்ளியின் சிறந்த மாணவிகளில் ஒருத்தியாய் விளங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நீ உழைக்க வேண்டும். நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை நீ புரிந்து கொண்டிருப்பாய். படிப்பிலும் புரட்சிகர நடவடிக்கைகளிலும் அல்லது, வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் உழைப்பதற்கான ஆர்வம், தாய்நாட்டுப்பற்று, புரட்சியின் மீது நேசம், தோழமை இன்னபிற குணங்களிலும் நீ சிறந்து விளங்க வேண்டும்.

நான் உன்னைப் போல் இருந்தபோது அப்படியெல்லாம் இருக்கவில்லை. ஆனால் நான் வேறு விதமான சமுதாய அமைப்பில் வளர்ந்தேன். நீயோ முற்றிலும் மாறுபட்ட சமுதாய அமைப்பில் வளர்கிறாய். நான் வளர்ந்தபோது இருந்த சமுதாய அமைப்பில் மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகளாக இருந்தனர். நீ வித்தியாசமான காலத்தில் வாழும் பேறு பெற்றுள்ளாய். இந்தப் பெருமைக்குரியவளாக நீ வாழ வேண்டும்.

குழந்தைகளை எப்போதும் கவனித்துக் கொள்ள மறந்து விடாதே. கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும். என்றும் நன்னடத்தை உடையவர்களாக விளங்க வேண்டும் என்றும் நீ அவர்களுக்குப் புத்திமதி கூறு. அலெய்டிடாவை நன்கு கவனித்துக்கொள். நீ அவளது மூத்த சகோதரி என்பதால் அவள் உன்மேல் ஏகப்பட்ட மரியாதை வைத்திருக்கிறாள்.

நல்லது, மகளே மீண்டும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறுகிறேன். என் சார்பாக அம்மாவையும் கினாவையும் அணைத்துக்கொள். நான் உன்னை விட்டுப் பிரிந்திருக்கப் போகிற அத்தனை காலத்திற்குமான என் அன்புத் தழுவலை ஏற்றுக்கொள்.

உனது தந்தை
'சே'



சேகுவேராவின் மகளான அலெய்டா கஸ்த்ரோ இந்தியாவுக்கு விஜயம் செய்தார். இடதுசாரி தலைவரான ஜோதிபாசுவுக்கு கைகொடுக்கிறார். 'சே' நினைவுதினத்தில் எடுக்கப்பட்ட படம் இது.



படிப்பகம்

www.padippakam.com




"பெற்றோர்களில் கெட்டவர்களை, துரோகிகளை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? என் வாழ்க்கை நிர்க்கதியானதற்குக் காரணமே அவர்கள் செய்த துரோகம்தான். அவர்களைப் பொறுத்தவரை நான் ஒரு பணம் கொட்டுகிற மிஷின்!"

*நடிகை காஞ்சனா ஒரு பேட்டியில்... 'ஆனந்தவிகடன்'–13.04.97 இதழில்...*

ஈஸ்வர் வெற்றிலையைக் குதப்பியபடி அடிக்கண்களால் மதுமிதாவைப் பார்த்தார். துர்க்கா அவரருகில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தாள். சற்றுத்தள்ளி டைனிங் டேபிளில் அமர்ந்து இனியா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"ரொம்ப முக்கியமாப் பேசணுமாம்மா?" என்றாள் மதுமிதா.

"முக்கியமா இருந்தாத்தான் உங்கிட்டப் பேசணுமா?" என்றாள் துர்க்கா. ஈஸ்வர் மடித்து நீட்டிய வெற்றிலையை வாங்கி வாயோரத்தில் அடக்கிக்கொண்டு,

"நான் இப்ப வெளில புறப்பட்டு கிட்டிருக்கேம்மா. அதனால அப்படிச் சொன்னேன்."

"இந்த நேரத்தில எங்க போறே? இப்ப ஷூட்டிங், டப்பிங் எதுவும் கிடையாதே..."

"இந்த வீட்டை விட்டு நான் வெளில போகணும்னா நடிகைன்ற ஸ்தானத்தில மட்டும்தான் போகணுமா? வெறும் மதுமிதாவா வெளில போகக்கூடாதா என்ன?"

"எங்கன்னு கேட்டா பதில் சொல்றதை விட்டுட்டு எடக்குப்பேசறியே... அம்மான்ற மரியாதையே இல்லாமப் போச்சு உனக்கு?"

பதில் பேசாமல் கைகளைக் கட்டியபடி துர்க்காவைப் பார்த்தாள் மதுமிதா. அந்தப் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் துர்க்கா.

ஈஸ்வர் எழுந்து வாஷ்பேசினுக்குப் போய்த்துப்பிவிட்டு வந்து,

"மது, உன்மேல உள்ள அக்கறையாலதானம்மா அம்மா கேக்கறா" என்றார்.

அவரை எரித்து விடுவதைப்போலப் பார்த்தாள் மதுமிதா. அவர் பார்வையைத் தாழ்த்திக்கொண்டு, நகங்களில் படிந்த சுண்ணாம்பைச் சுரண்டத் தொடங்கினார்.

"உன்னைத்தான் கேக்கறேன் மதுமிதா. என்ன அப்படிப் பார்க்கறே? நீ எங்கே போறேன்னு கேக்கற உரிமை எனக்கு இல்லையா?"

உதடுவரை வார்த்தைகள் கொப்பளித்தன. 'ஒரு அம்மாவுக்கு உரிய அத்தனை உரிமைகளையும் நீ பயன்படுத்தியிருந்தால் இந்த உரிமையும் உனக்கு உண்டு.

என்னை எப்போது அரிதாரம் பூசி உட்கார வைத்தாயோ, அந்த நிமிடத்திலிருந்து என்னை நீ மகளாகப் பார்த்ததில்லையே அம்மா.

ஒரு நடமாடும் இயந்திரமாகத்தானே என்னை இத்தனை நாளும் நடத்தி வந்திருக்கிறாய்! இயந்திரத்திற்கு இதயம் எங்கே இருக்கப்போகிறதென்று அலட்சியமாய் விட்டு விட்டாய்!


என்னுடைய எத்தனை சின்னச் சின்ன ஆசைகளை நசுக்கி வீசியிருக்கிறாய் தவறு! நசுக்கவில்லை எரித்துவிட்டாய்! நசுக்கினால் மீண்டும் உருவம் பெற வாய்ப்பிருக்கிறதே என்று சாம்பலாக்கிக் கரைத்துவிட்டாய்.

என் உருப்படாத அப்பா உன்னை நிர்க்கதியாக்கி விட்டு ஓடிப்போனதால், பணப் பிரச்சனையைச் சமாளிக்க என்னைப் பலிக்கடாவாக்கி விட்டாய்!

உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்! நான் இந்தத் துறையை விரும்பினேனா? பள்ளிக்கூடத்தில், 'எதிர்காலத்தில் நீ என்னவாக விரும்புகிறாய்? என்கிற கேள்விக்கு ஒவ்வொரு பெண்ணும் கலெக்டர், பொலிஸ் அதிகாரி, விமானப் பணிப்பெண் என்று சொல்ல, 'நான் எழுத்தாளராக விரும்புகிறேன்' என்றேன்.

அப்போதே நோட்டுப் புத்தகங்களில் சக மாணவிகள் பொம்மை வரைய, கோலம் போட, நான் உதட்டில் பென்சில் வைத்து யோசித்து கவிதை எழுதினேன். அப்போது நான் எழுதியவற்றை கிறுக்கியவை என்று தான் சொல்ல வேண்டும். அவை கவிதையிலும் சேர்த்தியில்லை.

*'நிலா காட்டி சோறூட்டுவாள் அன்னை.*



*நிலாவுக்கு சோறூட்டுவது யார்?'*

நன்றாக நினைவிருக்கிறது. இதுதான் என் முதல் கிறுக்கல். அதை டீச்சரிடம் என் தோழி எடுத்துக் காட்டிவிட, டீச்சர் என்னைத் திட்டப்போகிறாரோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும்போது, என் கன்னத்தில் தட்டி 'வெரிகுட் கீப் இட் அப்' என்ற வார்த்தைகள் எனக்குள் சேர்த்த நம்பிக்கையின் அளவை அந்த டீச்சர் உணர்ந்திருக்க மாட்டார்.

அதே கவிதையை உன்னிடத்தில் காட்ட நான் பதினைந்து நாட்கள் போராடியதும் நினைவிருக்கிறது எனக்கு.

அப்போது நீ சினிமாவில் பயரங்க பிஸி. வீட்டின் வாசலில் பத்துக்கும் மேற்பட்ட கார்கள் நின்று கொண்டிருக்கும் எப்போதும். டெலிஃபோன் ஒலித்துக் கொண்டேயிருக்கும். போகிற போக்கில் என் முதுகில் தட்டி 'நல்லா படிக்கணும்' என்று விருந்தாளி சொல்வது போல சொல்லி நகர்வாய். பாய்ந்து வரும் வெள்ளைப் பாமரேனியனை அள்ளியெடுத்து அணைத்து முத்தம் கொடுப்பாய். உன்னோடு அதையும் ஷூட்டிங்கிற்கு அழைத்துச் செல்வாய். உன் மடி மீது வைத்து.

அந்த நாய்க்குட்டியைக் கொஞ்சின அளவுக்குக்கூட நீ என்னைக் கொஞ்சினதில்லை அம்மா.

இந்த நடிப்புத் தொழிலில் உள்ள கஷ்டங்களை, பிரச்சனைகளை எதுவும் எடுத்து சொல்லாமல் வித விதமாக ட்ரெஸ் போடலாம். எல்லோரும் பாராட்டுவார்கள், புத்தகங்களில் எல்லாம் உன் ஃபோட்டோ வரும் என்று கனவுத் தன்மையோடு கூடிய வார்த்தைகளில் போட்டு என்னை உற்சாகத்தோடு இறங்க வைத்தாய்.

அம்மா இன்றைக்கு இதே துறையில் வரவேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிற என் சகோதரிக்கு என்னால் மனப்பூர்வமாக இந்தத் துறையைச் சிபாரிசு செய்ய முடியவில்லையே.

நான் கடந்து வந்த பாதை என்பது நீ கடந்துவந்த அதே பாதை தானே? உனக்கு உன் அந்தரங்க மனதிற்கு முழுமையான மகிழ்ச்சியை இந்தத் துறை கொடுத்திருக்க முடியாதே! உன்னுடைய தன்மானமும் பலமுறை காப்பட்டு நைந்து போயிருக்கும்! நீயும் எத்தனையோ அவமானங்களை, ஏமாற்றங்களை, அவமரியாதைகளை, அநாகரிகங்களை, அதிகாரங்களை, அலட்சியங்களை, துரோகங்களைச் சந்தித்திருப்பாய்!

தான்பட்ட துன்பம் தன் மகளும் படட்டும் என்று எந்தத் தாயாவது நினைப்பாளா? நீ எப்படியம்மா நினைத்தாய்?

உனக்குப் பணம் ஒன்று மட்டும் குறிக்கோளாகி, அதில் உன் பாசத்தைப் பலியிட்டாய்.

என் அழகு கெட்டுவிடக் கூடாதென்று நீ கலைப்பட்ட அளவுக்கு, என் மனம் வருத்தப்படக் கூடாதென்று நீ கவலைப்பட்டதே இல்லையே...

வீட்டிலேயே ஒரு அறை ஒதுக்கி உடற்பயிற்சி சாதனங்கள் வாங்கிப்போட்டாய். எனது ஆகாரத்தை நீ திட்டமிட்டாய். வெளியில் நிற்க விடமாட்டாய். எல்லாம் பாசத்தினாலா?

இதெல்லாம் என் அழகு பாதிக்கப்பட்டுவிடக் கூடாதென்பதற்கு? உனக்கு நினைவிருக்கிறதா அம்மா?

நான் திரையுலகில் நுழைந்த ஆரம்ப கட்டத்தில் எனக்குப் பல விஷயங்கள் அதிர்ச்சியாய் இருந்தன.

'அம்மா, அந்த புரெடியூசர் என்னைத் தொட்டுத் தொட்டுப் பேசறாரும்மா!'

'வயசுல பெரியவரும்மா. உனக்கு அப்பா மாதிரி!'

ஆனால் யாரும் இங்கே மகளாய் நினைப்பதில்லை என்பதை அனுபவம் தான் கற்றுத் தந்தது?

முதன் முதலாக கொஞ்சம் கவர்ச்சியான நீச்சலுடைக் காட்சியில் நடிக்கச் சொன்னபோது, நான் அழுது வீட்டிற்கு ஓடி வந்து உன்னிடம் அழுதது நினைவிருக்கிறதா?

"அம்மா அந்த ட்ரெஸ் போட்டா ரொம்ப அசிங்கமா தெரியும்மா. ப்ளீஸ்மா.. நான் போடலைம்மா... நீ கூப்பிட்டுச் சொல்லும்மா."

"என்னம்மா இப்படி பேசறே? கை நீட்டிப் பணம் வாங்கிட்டோம். இது நம்ம தொழில். இதில் என்ன இருக்கு மதுமிதா? நான் பாப்புலரானதே என் கவர்ச்சியாலதானே... நீ முன்னேறணும் மதுமிதா. நிறைய போட்டி வந்துடிச்சி. கொஞ்சம் அப்படி, இப்படி நடிக்கத்தான் வேணும். உனக்குன்னு தனியா ஒரு கார் கேட்டியே, அது வாங்க வேணாமா? அதுக்குப் பணம் இருந்தாத்தானே முடியும்? டைரக்டர் சொல்ற மாதிரி எல்லாம் நடிச்சாத்தானே பணம் கிடைக்கும்?"

"எல்லோரும் பார்ப்பாங்கம்மா. எனக்கு வெட்கம் பிடுங்கித் திங்குதும்மா! ரொம்ப கஷ்டமா இருக்கும்மா!"

"ஆமா, உன்னைப் பார்க்கறதுதானா அவங்களுக்கு வேலை? எல்லாருக்கும் இது தொழிலும்மா. கொஞ்ச நாளானா சரியாப் போயிடும் மதுக்கண்ணு!"

எப்படிப்பட்ட அற்புதமான அறிவுரைகள்!

ஆசையை மரத்துப் போகச் செய்த நீ... பெண்மைக்கே உரித்தான நாணத்தையும் மரத்துப்போகச் செய்தாய்!

வேண்டாம். பட்டியலிட்டாள் பத்துப் பாகத்திற்குப் பட்டியல் இடலாம்.

அம்மாவைப் பார்க்கும்போது ஒரு மகளுக்குப் பாசம் பிறக்க வேண்டும். கோபம் பிறக்கக்கூடாது.

பட்டுக்கோட்டை பிரபாகர்

ஆனால், உன்னை நான் பார்க்கும் போதெல்லாம் எனக்குக் கோபம்தான் பொங்குகிறது. என்ன செய்வது?

எதுவும் பதில் பேசாமல் மெதுவாக வாசலை நோக்கிக் காரின் சாவியைச் சுழற்றியபடி நடந்தாள் மதுமிதா.

"இங்க ஒருத்தி குத்துக்கல்லாட்டம் உக்காந்துக்கிட்டு கேள்வி கேக்கறேன். எந்தப் பதிலும் சொல்லாமப் போறா பாருங்க!" என்றாள் துர்க்கா.

மதுமிதா திரும்பிப் பார்த்தாள்.

"அம்மாவாத் தெரிய வேண்டிய நீ ஒரு குத்துக்கல்லாத்தான் எனக்குத் தெரியறே! குத்துக்கல்லுக்கு யாரும் பதில் சொல்றது கிடையாது!" என்று வார்த்தைகள் துடித்தன. அடக்கிக் கொண்டாள்.

மதுமிதா தன் அம்மாவின் எதிரில் வந்து நின்றாள்.

"இப்ப உனக்கு என்னம்மா தெரியணும்?" என்றாள்.

"இப்ப நீ எங்கே போறே?"

"ஹோட்டலுக்குப் போறேன்"

"கல்யாண ரிசப்ஷனிலதான் சாப்பிட்டமே"

"இப்ப சாப்பிடப் போகலை. ஒருத்தரை சந்திக்கப்போறேன்."

"யாரை?"

"என்னைக் கல்யாணம் செய்துக்கப் போறவரை! அவர் வெய்ட் பண்ணிட்டிருப்பார். இதுக்கு மேலே எல்லா விபரமும் நாளைக்குப் பேசிக்கலாம்."

விருட்டென்று கிளம்பி மதுமிதா போனதும், ஈஸ்வரைத் தொட்டு அவசரப்படுத்தினாள் துர்க்கா. "நம்ம கனவுல எல்லாம் மண்ணை அள்ளிப் போடப் போற அந்தப் படுபாவி யாருன்னு தெரிஞ்சாகணும். பின்னாடியே போய் யாரவன்னு தெரிஞ்சுக்கிட்டு வாங்க. கிளம்புங்க" என்றாள். **(தொடரும்)**

## அனுபவம் புதுமை புதிய பகுதி

'சம்பாதிக்க ஒரு புத்தி வேண்டும்; சம்பாதிப்பதை சேமிக்க ஒரு புத்தி வேண்டும்; சேமித்ததை செலவழிக்க ஒரு புத்தி வேண்டும்,' என்று எழுதுவார் கவிஞர்.

இந்த மூன்று திறமைகளில் முதல் திறமை மட்டும் கவிஞரிடம் இருந்தது என்பது உண்மை. ஆனால், அவர் ஊதாரியல்ல; உபகாரி.

பல குடும்பங்கள் அவரை நம்பி வாழ்ந்தன. பல மாணவ மாணவியரை கல்லூரிவரை பயில்வதற்கும், விடுதிகளில் தங்குவதற்கும் அவர் செலவழித்துக் கொண்டிருந்தார்.

இடது கைக்குகூட தெரியாது. அவர் செய்து வந்த இத்தகைய உதவிகளை பெற்றவர்கள் தமிழகத்தில் மட்டுமல்ல; கடல் கடந்த நாடுகளிலும் உள்ளனர்.

இலங்கையில் பிரேமதாசா அமைச்சரவையில் அமைச்சராக பதவி வகித்த ராஜதுரை 1955-56ல் கவிஞர் இலங்கைப் பயணம் மேற்கொண்டபோது, அவருக்கு நண்பரானார். அவர் அடிக்கடி தமிழகம் வருவார். சென்னையில் கவிஞரின் விருந்தினராக தங்குவார். இந்த நட்பு நெருக்கமாகி நீண்டது.

ராஜதுரை தனது பெண் மக்கள் இருவரை சென்னை கல்லூரியில் சேர்த்து படிக்க வைக்க வேண்டும் என விரும்பினார்.

தனது நண்பரின் விருப்பத்தை கவிஞர் தானே முன்வந்து ஏற்றுக் கொண்டார்.

அந்த பெண்களை பராமரிக்கும் (கார்டியன்) பொறுப்பேற்று அவர்களை கல்லூரிகளில் சேர்ப்பித்து விடுதிகளில் தங்க வைத்து படிக்க வைத்தார்.

ஒருவர் மருத்துவத் துறையில் படித்து பட்டம் பெற்றார்; மற்றவர் பிஎஸ்சி., தேர்வு பெற்றார்.

தான் சம்பாதித்து வரும் பணத்தை பெட்டியில் பூட்டி வைத்து கவிஞர் பார்த்து மகிழ்ந்ததே இல்லை.

அவரைப் பொறுத்தவரை பணம் வரும் போகும்; அவர் பணத்திற்கு கொடுத்த மரியாதை அவ்வளவுதான்!

பணத்திற்கு ஒரு ருசி உண்டு என்பதும், பணத்தை பணம் பெருக்கும் என்பதும் அவர் அறியாத ஒன்றல்ல.

அவர் முயன்றார்; ஆனால் முடியவில்லை. கடன் தலைமாட்டில் நிற்கும்போது பணத்தை எங்ஙனம் பூட்டி வைப்பது என்று விட்டார்.

இங்ஙனம், குடும்பத்தை கட்டிக் காக்க வேண்டிய குடும்பத்தலைவியால் இருக்க முடியுமா?

குழந்தைகளின் கல்விக்கும், அவர்களது எதிர்காலத்துக்கும் பாதுகாப்பு தருவதில் ஒரு தாய்க்கும் பங்குண்டல்லவா?

# உன்னைக் கவனிக்க ஆளில்லையோ?

கணவனின் புகழைக் காப்பதிலும், குடும்பத்தின் கவுரவத்தை பாதுகாப்பதிலும் மனைவியின் பங்கு மகத்தானது அல்லவா?

இதில், கவிஞரின் இளைய மனைவி பார்வதி மிகவும் சூடிக்கையானவர்.

கணவன் செலவாளியாக இருந்தால் மனைவி சிக்கனமாக இருக்க வேண்டும் என்னும் பொறுப்புணர்ந்தவர்.

சரியான சமயத்தில் பார்வதி விழித்துக் கொண்டார்.

ஸ்ரீகமலாலயம் என்ற நிறுவனத்தை 1967ம் ஆண்டு துவக்கி, 'தாயே உனக்காக' என்னும் படத்தை தயாரித்து கவிஞர் வெளியிட்டார்.

அன்றைய பிரபல நடிகர்களில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரையும், நடிகவேள் எம்.ஆர். ராதாவையும் தவிர மற்ற நடிகர், நடிகைகள் அனைவரும் நடித்து வெளிவந்த படம் 'தாயே உனக்காக.' ஆயினும், படம் வெற்றி பெறவில்லை.

'தாயே உனக்காக' படத்தில் கிடைத்த லாபத்தைக் கொண்டு தனக்கிருந்த கடனில் முக்கால் பகுதிக்கு மேல் அடைத்தார்.

ரங்கராஜபுரத்தில் கிரவுண்ட ஐநூறு ரூபாய் வீதம் நான்கு கிரவுண்ட் நிலம் வாங்கினார்.

தனது மூத்த மனைவிக்காக தியாகராய நகர், ராமன் தெருவில் ஒரு வீட்டை வாங்கினார்.

ஒரே வீட்டில் ஒற்றுமையாக குடித்தனம் நடத்திய இரு மனைவியரும் தனித்தனிக் குடித்தனமானார்கள்.

தனது மூத்த மனைவியின் மகள் அலர் மேலுவுக்கு பெரிய அளவில் செலவழித்து ஆபட்ஸ்பரி மண்டபத்தில் திருமணம் நடத்தினார்.

வரவும் செலவும் நேர்பட்டுவிட்டது. ஆனால், கவிஞரது குடும்பமெனும் நேர்கோட்டில் நடுவே ஒரு மெல்லிய புள்ளிவந்து அமர்ந்து கொண்டதை அவரும் அறியவில்லை; அவரது குடும்பத்தினரும் அறியவில்லை.

இந்த வெற்றுப்புள்ளி அன்று பரவலாக பிரபலமாகவில்லை என்றாலும், இந்த அபவாதம் நமக்குத் தேவையில்லை என்று கருதிய கவிஞர் தனது தீவிரப் போக்குகளை குறைத்துக் கொண்டார்.

அதேநேரத்தில் பல படத் தயாரிப்பாளர்களும் கவிஞரை ஒதுக்கத் தலைப்பட்டனர்.



எனவே, ராமன் தெருவில் வாங்கிய வீட்டையும், ரங்கராஜபுரத்தில் வாங்கிய நிலத்தையும் அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டு படத்தை தயாரிக்கத் தொடங்கினார். பிறகு ஹென்ஸ்மென் சாலையில் உள்ள வீட்டின் பேரிலும் கடன் வாங்கினார்.

கவிஞர் பதினைந்து குழந்தைகளின் தந்தை.

முதல் மனைவிக்கு மூன்று பெண் மக்களும், நான்கு ஆண் மக்களும்.

இரண்டாவது மனைவிக்கு இரண்டு பெண் மக்களும், ஐந்து ஆண் மக்களும்.

மூன்றாவது மனைவிக்கு ஒரு பெண் பிள்ளை.

ஆறு பெண்களில் ஒரு பெண்ணுக்குத் தான் திருமணம் முடிந்திருந்தது.

ஒன்பது ஆண் மக்களில் நான்கு பேர் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தனர்.

எல்லா கடன்களும் தீர்ந்த நிலையில் குடியிருக்கும் வீட்டின் பேரில் கடன் வாங்கி விட்டாரே என்றும், வாங்கிய வீட்டையும், நிலத்தையும் விற்று விட்டாரே தன் கணவர் என்றும் பார்வதி கலங்கிப் போய் விட்டார்.

'பொன்னிக்கென்று வாங்கிய வீட்டையும், நிலத்தையும் விற்று விட்டு, அவர்களை வாடகை வீட்டில் குடியிருக்க வைத்து விட்டீர்களே... போதாதற்கு குடியிருக்கும் இந்த வீட்டையும் அடகு வைத்துவிட்டீர்களே... இது உங்களுக்கே நல்லா இருக்கா? வளருகின்ற பிள்ளைகளை நினைத்துப் பார்த்தீர்களா..?'

-பொறுப்புள்ள தன் மனைவியின் தார்மீகக் கோபம் கவிஞருக்கு புரிந்தது என்றாலும், 'இந்தா எனக்குத் தெரியாதா என்ன? பேசாம இரு!' என்று அடக்கி விட்டார்.

தனக்கும், குடும்பத்திற்குமிடையில் ஒரு திரை விழுந்து விட்டதாகவும், மனையாள் முகங்கொடுக்காது புறக்கணிப்பதாகவும், குழந்தைகள் தன்னிடம் அன்பு செலுத்த மறுப்பதாகவும், தன்னை கவனிப்பாரே இல்லாதது போலவும் கவிஞர் தானாகவே கற்பிதம் செய்துகொண்டார்.

*'பொன்னை விரும்பும்*
*பூமியிலே*
*என்னை விரும்பும்*
*ஒருயிரே*
*புதையல் தேடி*
*அலையும் உலகில்*
*இதயம் தேடும்*
*என்னுயிரே'*

- என்று தன்னைப் பாடி மகிழ்ந்த கணவரையா பார்வதி புறக்கணிப்பார்? தன் கணவரின் மேல் துரும்பு விழச் சகியாதவர் அவர்; முகம் கோணப் பொறுக்காதவர்.

அவர் எப்போதும் போலவே தன் கணவருக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளை குறைவறச் செய்து கொண்டிருந்தார்.

கவிஞரின் மனப்புழுக்கம் அதீதமாகிக் கொண்டிருந்தது. அவர் அடிக்கடி தனிமையை நாடினார். ஆனாலும், உற்சாகமாகவே காணப்பட்டார்.

மனக்கவலைகளை கவிஞர் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார். ஆனால், சந்தர்ப்பம் வாய்க்கும் போது, அந்த கவலைகளை ஒரு சொற்சித்திரமாகவோ, உருவகமாகவோ வெளிப்படுத்தி விடுவார். நிழல் போல அவரைத் தொடர்ந்து கொண்டிருப்பவர்களால் மட்டுமே அவரது அத்தகைய உணர்ச்சிப்பூர்வமான அந்த வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்படி வெளிப்பட்டதுதான் "கலைமகள் கைப்பொருளே- உன்னை கவனிக்க ஆளில்லையோ," என்ற பாடல்.

வசந்தமாளிகை திரைப்படத்தில் வரும் கதாநாயகன் ஒரு ஜமீன்தாரின் மகன். சந்தர்ப்பவசத்தால் மதுவுக்கு அடிமையாகிறான். முழுநேரமும் அவன் போதையிலேயே மிதக்கிறான். அவனை யாரும் கவனிப்பதில்லை. எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட அவன் தனிமையில் ஒரு மாளிகையில் வசிக்கிறான். அவனது அந்தரங்க காரியதரிசியாக ஒரு பெண் வருகிறாள். அவனது நிலையை அறிந்து பரிதாபப்படுகிறாள்.

ஒரு அறையில் அழகான வீணை ஒன்று தூசு படிந்து கேட்பாரற்று கிடப்பதை காண்கிறாள். கதாநாயகன் நிலையைப் போலவே வீணையும் தேடுவாரற்றுக் கிடப்பதை ஒப்பிட்டு பாடுகிறாள்.

பாடலின் சூழலுக்குத் தன்னை முன்னிறுத்துகிறார். அவர் அதீதமாக கற்பித்துக் கொண்டபடி அவரது அப்போதைய நிலையும் அதுதானே!

கவிஞனும், வீணையும் கலைமகளின் கைப் பொருள்களல்லவா!

பல்லவியிலும், சரணங்களிலும் அவர் தன்னை, தன் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்ட பாணி தனி முத்திரை பதித்தது.

*கலைமகள் கைப்பொருளே–*
*உன்னை*
*கவனிக்க ஆளில்லையோ*
*விலையில்லா மாளிகையில்–*
*உன்னை*
*மீட்டவும் விரலில்லையோ!*
*உன்னிடம் ஆயிரம் ராகங்களே–என்றும்*
*உனக்குள் ஆயிரம் கீதங்களே*
*இதையறிந்தோர் மீட்டுங்களேன்– இல்லை*
*எனக்கேனும் வழி காட்டுங்களேன்!*
*நான் யார் உன்னை மீட்டவும்*
*நன்மைக்கும் தீமைக்கும் வழிகாட்ட*
*ஏனோ துடிக்கின்றேன்– அதன்*
*இனம் தெரியாமல் தவிக்கின்றேன்!*
*சொர்க்கமும் நரகமும் நம்வசமே–நான்*
*சொல்வதை உன்மனம் கேட்கட்டுமே*
*சத்தியம் தர்மங்கள் நிலைக்கட்டுமே–இது*
*தாய்மையின் குரலாய் ஒலிக்கட்டுமே*

உணர்ச்சி மோதலில் பிறந்த இந்தப் பாடல் கவிஞரின் உற்றாருக்குகூட அவர் தன்னிலை குறித்து இயற்றியது என்பது தெரியாது.

ஆம்; இந்த விலையில்லாத மாணிக்கத்தை அன்று புரிந்து கொண்டாரும் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

# காதல் அவமானம்

**அவள் சுற்றும்முற்றும் பார்த்தாள். பயத்தை அமுல்படுத்தினாள்.**

ரவியின் இதயம் இருண்டு கிடந்தது. அவன் எதிர்காலத்துக்கான ஒளியைத் தேடினான். அந்தத் தேடலின்போதுதான், அவனின் விழிகள் இன்னுமொரு ஒளியைக் கண்டது.

அவன் பாடசாலை மல்லிகை. கல்வித் தேன் அருந்த, தூரமிருந்து அந்தப் பாடசாலைக்கு வந்து சேர்ந்தான்.

புதிய பாடசாலை. புதிய சூழல். புதிய முகங்கள். அவனுக்கு புதுமையைப் பூசின. அவனின் எதிர்காலத்துக்காக ரவியின் பெற்றோர் அந்த ஊருக்கே குடி புகுந்தார்கள்.

"மகன்! சயின்ஸ் படிக்கிறாய்... இண்டைக்கு லீடிங் ஸ்கூல் இதான். அதனால... கவனமாப்படிச்சி ஒரு நல்ல நில அடையணும்... அதான் என்ர ஆச... காசப்பத்தி செலவப்பத்தி கவலப்படாம.... ஒழுங்காப் படிச்சாப் போதும்...."

அவனின் அம்மா அறிவுரை விதைத்தாள். எதிர்கால வசந்தம் ரவிதான் என்று அடையாளப்படுத்தினாள்.

"அம்மா! நீங்க நெனக்கிற மாதிரி நான் படிச்சி ஒரு டொக்டராக வருவன்...." ரவி மனதைத்திறந்து காட்டினான். அவனின் உணர்வை வார்த்தைகளால் வெளியே வைத்தான்.

அப்படியான ரவியின் இதயம் இடையில் தடம் புரண்டது.

காவ்யா! அவனின் இதயத்தினுள் புகுந்த வெண்மல்லிகை.

ரவியின் வகுப்பு இருபால். அதனால் அவனின் தென்றல் விழிகளில் வீசியது. ரவி காதல் பூசி, அவளைக் கண்களால் தீண்டினான். வெண்மல்லிகை என்ற வட்டத்தை விட்டுத் தாண்டினான். "காவ்யா! உங்கட பொட்னிக் கொப்பியத் தாறீங்களா?..."

சாதாரணமாக வார்த்தைகளை அவளிடம் சமர்ப்பித்தான். ஆனால் அசாதாரணமான நினைவுகளுடன்.

அந்த வெள்ளைப் புறா கொப்பியைக் கொடுத்தாள். அதைப் பொக்கிஷமாகக் கருதினான் ரவி. அவளின் தொடர்புக்கான கருவி மட்டுந்தான் அந்தக் கொப்பி.

அடுத்த சூரிய வெளிச்சத்தில் அந்த மலர் வகுப்பில் மலர்ந்தது.

"குட்மோனிங் காவ்யா...!"

"குட்மோனிங்...! ஆமா... கொப்பியத் தாறீங்களா...?"

"இன்னும் ரைட் பண்ணல்ல...."

காவ்யா கொப்பியினைக் கேட்டு அவனிடம் பல முறை விண்ணப்பித்தாள். அவன் பொய்களை வரிசைப்படுத்தினான்.

"என்..ன ரவி...? கொப்பியத் தொலச்சிப் போட்டிங்களா...? நானும் படிக்கணும் இல்லையா...?"

அவள் சின்னச் சோகத்தைக் காட்டினாள்.

"நாளைக்கு... நீங்க... கொஞ்சம்... தனியா சந்திப்பீங்களா....?"

"ஏ...ன்...?"

"கொப்பி தாறதுக்குத்தான்..."

"கொப்பி தாறதுக்கு தனியா சந்திக்கணுமா...? .... சும்மா விளையாடாம... கொப்பியத் தாங்...க... ரவி...!"

அவள் நெளிந்து அசைந்து பேசினாள். ஆயுள் முழுவதும் அவளோடு பேசிக் கொண்டிருக்க வேண்டும்போல் தோன்றியது அவனுக்கு.

நான்கு மணிக்கு வகுப்பு, மூன்றுமுப்பதுக்கு அவன் பாடசாலைக்கு வந்தான். காவ்யா ஏற்கனவே வந்திருந்தாள்.

"கொப்பி கொண்டு வந்தீங்களா...?"

அவன் கொப்பியைக் கொடுத்தான். அதன் மூலம் தன்னைக் கொடுத்தான்.

"நீங்க நல்ல ஆள்தான்... ரொம்ப ஏமாத்திப் போட்டிங்களே...?"

அவள் கொப்பியைப் புரட்டினாள். அவனின் இதயம் அதற்குள் அமர்ந்திருந்தது.

அந்த நிலா கடிதத்தை எடுத்தது.

"இ...இ..தெ...ன்ன்..னன...?" அவளின் விரல் மலர்கள் நடுங்கின. வார்த்தைகள் மின்சாரம் பாய்ந்து ஒலித்தன.

"கா...வ்...யா! பதற்றப்படாம.... வாசித்துப்பாருங்க....!"

அவள் சுற்றும்முற்றும் பார்த்தாள். பயத்தை அமுல்படுத்தினாள். அவளின் இதயம் அவளுக்குள் இருப்பதாக அவள் உணரவில்லை. அது வெளியே விழுந்து துடிப்பதாக உணர்ந்தாள்.

விழிகளை மூடினாள். கடவுளை வேண்டினாள். தன்னைக் கட்டுப்படுத்தினாள். தன்னை வெல்வதற்கு முயற்சி செய்து ஓரளவு வெற்றி பெற்றாள்.

அவள் படித்தாள். துடித்தாள்.

கடிதத்தைக்கிழித்து வீசியெறிந்தாள். ரவி உடைந்து கிடந்தான். அவமானத்தைச் சுமந்து கொண்டான். அவனின் இதயம் குருதி சிந்தியது.



"கா..வ்..வ்...யா...ஆ...!"

அந்தப் புறா சோகம் சுமந்து பறந்து போனது. அவனை வெறுத்து உமிழ்ந்து சென்றது.

'ச்...சே... அவசரப்பட்டுட்டே....னே...! என்ர மரியாத.... போயிட்டதே....' அவனுக்குள் அவன் நொந்தான். அவனின் காதல் வெந்து சாம்பலானது. அவனின் காதல் ஆம்பல் கருகி உதிர்ந்தது. இதயம் உருகி வடிந்தது.

அடுத்த விடியல் ரவிபற்றியதாகப் பிறந்தது. அவனின் மதிப்பு, மரியாதை இறந்து போகவென்றே அந்தச் சூரியன் உதித்தான். வகுப்பு மாணவர்கள் அனைவருமே அவனை உமிழ்ந்தார்கள்.

காவ்யா எல்லோரிடமும் விசயத்தைச் சொல்லி, அவனுக்கு கறை பூசினாள். அவனின் சுயநிறம் பற்றி விளக்கினாள்.

"என்..ன ரவி...?.. எல்லாம் உண்மை....யா...?"

"நீ...யா...?"

"ச்.சே... யார நம்புறது. யார நம்பாதது என்டு ஒண்டுமே புரியல்ல..."

அவனின் செயல் பற்றி விமர்சித்து அவனின் இதயத்தைக் கொன்றார்கள்.

அவமானம். அதனால் ஏற்பட்ட சோகம். காதல் தோல்வி. இவை அவனை விரக்தியின் வாசலுக்கு அழைத்துச் சென்றன. சோகத்தால் களைத்துப் போன ரவி, பாடசாலைக்கு விடுமுறை போட்டான்.

"உன்..ன மல போல நம்பினேனே... நீ இப்படிச் செய்வாயெண்டு நான் கொஞ்சங் கூட எதிர்பார்க்கல்ல... படிக்கிற வயசில காதலென்ன வேண்டிக்கிடக்கு...?"

"அ..ம்..மா..மா... என்...ன... மன்னிச்சிடுங்கம்...மா...!...."

அவனின் காதல் அவமானம் வீடுவந்து வாசல் தட்டியது. அவனின் அம்மா தன் சந்தோசத்தை தொலைத்தாள். விழிகளை உப்பு நீருக்கு வழங்கினாள்.

"எல்...லாத்தையும் மறந்திட்டு ஸ்கூலுக்குப்... போ....!"

"அம்...மா... இனி நான் அந்த ஸ்கூலுக்குப் போக மாட்...டன்...."

அவன் மறுத்தான். வாழ்க்கையை வெறுத்தான். சொந்த ஊருக்கு வந்தான். ஊர்ப்பாடசாலை அவனை வரவேற்றது. காவ்யாவை மறக்க முயற்சி செய்து முயற்சி செய்து தோல்வியடைந்தான் ரவி.

**கரீமா ராஹில்**

பர்ட்சையைக் கடந்தான். பெறுபேறுகளுக்காக எதிர்பார்ப்பை அமுலாக்கினான். இன்று பர்ட்சை பெறுபேறுகள் வெளியாக இருப்பதால் ரவியின் இதயம் இருண்டு கிடந்தது. பயம் அவனைப் பயமுறுத்திக் கொண்டது. அவனின் மனதைக் கொன்றது.

அவன் பெறுபேறுகளை பார்க்கச் சென்றான். தாவரவியல், விலங்கியல் இரண்டு பாடங்களிலும் 'எஸ்' எடுத்திருந்தான். மற்றவை 'எஃப்'

ரவியின் இதயம் சுழன்றது. அவனின் மிகுதி சந்தோசங்கூட கழன்று விழுந்தது.

காதல் தோல்வி முதல் அனுபவம்.

பர்ட்சையில் தோல்வி இரண்டாவது அனுபவம். அழுதான்.

தனிமையில் வாய்விட்டு அழுதான். இரகசியமாக அழுதான். தனக்குள்தான் அழுதான்.

படிக்கின்ற காலத்தில் எந்த மாணவனும் காதலிக்..கக்கூடாது. அப்படிக் காதலித்தால் வாழ்க்கையே தோல்விதான்...

தனக்குள் பேசி முடிவெடுத்தான். அனுபவம் அவனுக்குத் துயரத்தை வழங்கியது.

"நீ என்...ன புள்ளய...டா... இப்படி ஏமாத்...திப் போட்டிய...டா..."

அவனின் அம்மா அழுகைக்குள் விழுந்து கிடந்தாள்.

அன்று ரவியின் நண்பன் ஒருவன் சொன்ன செய்தி கேட்டு அவன் அதிர்ந்தான்.

"அட... காவ்யா நான்கு பாடங்களிலேயும் ஏ எடுத்திருக்கிறாள்.... இத நீ புரிஞ்சாச்...செரி..."

அவனின் அந்த நிலவு இமயத்திற்கு உயர்ந்து விட்டாள். ரவியோ பள்ளத்தில் விழுந்து கிடந்தான். ■

# கூடு

இந்த மாரிகாலத்திலும் அதிகாலை தன் சுகப்பிரசவமாய் சூரியக்கதிர்களை சுகம் விசாரிக்க பூமிக்கு அனுப்பிக்கொண்டிருந்தது. தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாய் வடியத் தொடங்கியது.

கமலாம்பிகையின் குடிசையில் மண்சுவர்களும் ஊறல் எடுத்து உதிர்ந்து விழும் நிலையைக் கண்டுவிட்டது. இந்த வெய்யிலில் கொஞ்சம் சாணி மெழுகிவிட்டால் சரி கொஞ்சநாட்கள் சமாளிக்கலாம் என்பது அவளின் நினைவு.

வேலையை ஆரம்பிப்பதற்கு முன்,காலையில் ஓடியாடி வேலை செய்த களைப்புத்தீர ஒருவாய் தேனீர் அருந்தவேண்டும் போலிருந்தது அவளுக்கு. சுடச்சுட தேனீரை பானையில் இருந்து குவளைக்குள் வார்த்தவள், கையில் சிறிதளவு சீனியையும் எடுத்துக் கொண்டு திண்ணையில் ஓரமாய் வந்தமர்ந்தாள்.

திண்ணையின் மேற்கூரையில் கூடுகட்டி அவளுக்குத் துணையாய் அக்குடிசையில் வாழ்ந்துவருகின்ற அடைக்கலம் குருவி கூட்டுக்குள் இருந்து தலையை வெளியே எடுத்து எட்டிப்பார்த்தது. சுற்றும் முற்றும் தன் கழுத்தைத் திருப்பிப் பார்வையைச் செலுத்திய குருவி வெளியே வந்தது. உள்ளே, அதன் குஞ்சின் ஆரவாரம் செவிமடுக்கக் கூடியதாகவிருந்தது.

கமலாம்பிகைக்கு சிரிப்பு வந்தது. வாய்க்குள் முணுமுணுத்தாள். "உங்களுக்கென்ன முதல் கூடு. பிறகு குஞ்சு."



கூட்டைவிட்டு வெளியே வந்த தாய்க் குருவி தன் அலகால் குஞ்சின் அலகைத் தடவிக்கொண்டது. குஞ்சு சிணுங்கிக்கொண்டே தன் இறக்கைகளை அசைத்துக் கொண்டிருந்தது.

கமலாம்பிகை தன் ஒரே மகன் சுரேனை நினைத்துக் கொண்டாள். கண்களிலிருந்து அவளையறியாமலேயே கண்ணீர் அரும்பத் தொடங்கியது.

கமலாம்பிகைக்கு இழப்புக்கள் புதியவையல்ல. எண்பத்துமூன்றாம் ஆண்டு இனக் கலவரத்தின்போது புகையிலை வியாபாரத்துக்காக கொழும்புக்குச் சென்ற கணவன் காடைத்தனத்தின் பிடியில் உயிரிழந்தான்.

எண்பத்தேழின் இராணுவ நடவடிக்கையின் போது, அலுமினியப் பறவைகளின் குண்டு வீச்சு அவளை கல்வீட்டில் இருந்து குடிசைக்கு மாற்றி விட்டது.

பின்னர், இப்போது யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையின்போது அவளின் ஒரே உறவான மகனும் காணாமல் போனோர் பட்டியலில்...

திடீரென ஒருநாள் வளவுக்குள் புகுந்த இராணுவம் சோதனைகளின் பின், சுரேனை அழைத்துச் சென்றனர். அவள் எவ்வளவோ கத்தியும் அவர்கள் விட்டபாடில்லை. இறுதியாகச் சொன்னார்கள், "விசாரணை முடிய விட்டுவிடுவோம்!"

கைது செய்து வருடங்கள் ஆகியும், அவர்கள் அவனை விடுதலை செய்யவில்லை. அவள் ஒவ்வொரு முகாமிலும் விசாரித்துப் பார்த்தாள். ஆரம்பத்தில் அப்படியான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை என மறுத்தவர்கள், பின்னர் கொழும்பில் சிறையொன்றில் இருப்பதாகக் கூறினார்கள். அவள் பதறிப்போனாள்.

வெளியே சென்ற தாய்க்குருவி மீண்டும் இரையுடன் கூட்டுக்கு வந்தது. தன் அலகுகளில் இருந்த இரையை குஞ்சுக்குப் பரிமாறியது.

கமலாம்பிகைக்கு விம்மல் வெளிப்பட்டது. வாய்விட்டு அழுதாள். "அவனைப் போய் கொழும்பிலை பாக்கவேணும். என்ரை குஞ்சு பாவம் என்ன செய்யுமோ? பாழாய்ப் போனவங்கள் அடிச்சிரிப்பாங்கள். அவன் தாங்கமாட்டான்."

***

இரவு நடுச் சாமம். அவள் கண்களில் உறக்கமில்லை. மனத்துக்குள் இருந்த துயரங்கள் விம்மலாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. உதடுகள் "தம்பி, தம்பி..." என முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

அவள் இன்னமும் உயிரைத் தன் உடலில் தங்க வைத்துக்கொண்டிருப்பதற்கான காரணமே மகன் சுரேன்தான்.

திடீரென கூரையில் இருந்த அடைக்கலங்குருவியின் கூட்டுக்குள் இருந்து அலறல்.

விளக்குடன் ஓடினாள் கமலாம்பிகை. கூட்டின் வெளிவாயிலில் பெரிய எலி, அதன் வாயில் குஞ்சு. எலி வெளிச்சத்தைப் பார்த்ததும் ஓடத் தொடங்கியது. குஞ்சை நிச்சயமாகக் காப்பாற்ற முடியாது. எலி வாயில் இரைதான்.

**யாழ். ஞானகணேசன்**

கமலாம்பிகை மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள். 'நாளைக்கு விடிந்ததும், தம்பியைப் பார்க்க கொழும்புக்குப் போற அலுவலை ஒருக்காப் பாக்கவேணும். யாரை யாவது உதவிக்கு கேட்டுப் பாப்போம்.'

'அவனை எப்பிடியும் வீட்டை கூட்டி வரவேணும்.'

இப்போ அவள் மனதில் ஒரு நிம்மதி. உறக்கம் கண்களைத் தழுவத் தொடங்கியது.

ஆனாலும் தாய்க்குருவியின் அலறல் ஓய்ந்த பாடில்லை.

கமலாம்பிகை திட்டினாள். "குறுக்காலை போன குருவி. ஒரு கண் நித்திரை கூடக் கொள்ளவிடாமல் ஒப்பாரி வைக்குது."

அவளுக்கு எங்கே புரியப்போகிறது தன் கூடும் சிதைந்துவிட்டதென்பது. அவள் மகனை புதைத்த இடத்தில் புல் அல்ல மரமே முளைத்திருக்கும். ஆனாலும் அவர்களின் பொய்யில் அவளுக்கு அதிக நம்பிக்கை தான். ■

# உறுதியின் உறைவிடம்

**முரசு 233ல் வெளியான கதைக்கு பதில்கதை**

**சிறுகதைக்கு முன் கொஞ்சம்.....**

பல ஆண்டுகளாக நடந்து வரும் யுத்தம். அதற்கு மத்தியில் வாழத்துடிக்கும் ஜீவன்கள். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. யுத்தம் கொடூரமானது என்றாலும் அவற்றுக்கிடையே அவர்கள் வாழ்க்கையை அனுபவிக்கத் துடிப்பதில் தவறில்லையே....

நேரம் தன் வழியில் எவரும் குறுக்கிட முடியாது என்ற ஆணவத்தில் போய்க் கொண்டே இருக்கின்றது.

கபிலனை இன்னும் காணவில்லை என்ற துடிப்பில் தீபிகாவின் மன ஓட்டங்களும் எங்கெங்கோ பாய்ந்து கொண்டிருக்கின்றது.

"அம்மா.... பசி தாங்க முடியேலயே...." என்று எந்தவித யோசனையுமில்லாமல் குழந்தை அழுது கொண்டே இருக்கின்றது.

இவ்வுலகத்தில் எவ்வித குற்றங்களும், கவலைகளும் இல்லாத ஜீவன்கள் குழந்தைகள் தான். அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

தீபிகாவின் தாய்மனம் குழந்தையின் அழுகை கேட்டு தானும் அழுகின்றாள். குழந்தையை தனது மடியில் தூக்கி வைத்துத் தடவிக் கொடுக்கின்றாள்.



அகதி முகாமில் வெளியே நிற்பவர்கள் ஏதோ சலசலப்படையும் சத்தம் தீபிகாவின் காதில் கேட்டது. ஆனால் அது என்ன என்று அறியும் ஆவலும் இல்லாமல், வெளியில் எழும்பிப் போகத் தெம்பும் இல்லாமல் அப்படியே இருந்தாள் தீபிகா. அவளது எண்ணம் முழுவதும் கபிலனது வருகையிலேயே இருந்தது.

ஆனால் முகாமில் இருப்பவர்கள் எல்லோரும் தன்னை, பரிதாபமாகப் பார்ப்பதையும், ஏதோ 'கபிலன், கபிலன்' என்று கதைப்பதையும் தீபிகா கவனிக்கத் தவறவில்லை.

'ஏன்?....ஏன்...? இப்படிப் பார்க்கிறார்கள். என் கபிலன் எங்கே...? கபிலனுக்கு ஏதோ நடந்துவிட்டதோ..' என்று உள்ளுணர்வு கூறத் தொடங்குகின்றது.

'ச்சா... இதுதான் மனம் ஒரு குரங்கு என்பார்களோ.... கொஞ்ச நேரம் காணவில்லை என்றால் ஏதோ நடந்துவிட்டதோ என்று எண்ணத் தொடங்கிவிடும். அதிலும் இந்த பெண்மனம் ஏதேதோ விபரீதமான, எண்ணங்களைக் கூட எண்ணத் தயங்காது.'

தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொள்கிறாள் தீபிகா.

'ஆனால்.... ஆனால்.... அந்த அம்மாள் ஏன் கலவரமான முகத்துடன் என்னை நோக்கி வருகிறாள்...' இப்போது தீபிகாவால் இருக்கவே முடியவில்லை. குழந்தையையும் தூக்கிக்கொண்டு எழுந்துவிட்டாள். அவள் மனம் பதைபதைப்பதை அவள் முகமே காட்டிக் கொடுத்துவிட்டது.

"அம்மா.. தீபிகா ஒன்றும் யோசியாதையம்மா... எல்லாம் இறைவன் எழுதியபடிதான் நடக்கும். நாங்கள் என்ன செய்யிறது. ஊரை விட்டு அகதியா வந்த எங்களுக்கு இழப்பு என்றது சர்வ சாதாரணமாயிட்டுது. ஆனால் வாழ்க்கையை இழந்தால் அது....."

'ஏன்..? ஏன்...? எனக்கு என்றுமில்லாமல் இன்று இப்போது இப்படியொரு விளக்கம். என் கபிலனுக்குத்தான்.... ஐயோ! கடவுளே என்னால் நிற்க முடியவில்லையே... இந்த அம்மாளின் வியாசங்கள் ஏன்...? என் மனம்... என்னை... என்.. உயிரைத் தேடி அழைக்கிறதே....'

தீபிகா பிள்ளையையும் தூக்கிக் கொண்டு ஓடுகிறாள். எங்கே போகிறாள்? என்பது அவளுக்கே தெரியாத விடயம். ஆனால் அவள் வாய் மட்டும் 'கபிலன்... கபிலன்...' என்று சொல்லிக் கொண்டே இருக்கின்றது.

அகதி முகாமிற்கு வெளியில் வந்தவள் யாரிடமும் எதுவும் கேட்கத் தோன்றாமல் அப்படியே நின்றாள்.

நின்றவளின் கண்களில் கொஞ்ச தூரம் தள்ளி இருந்த அம்மன் கோயில் பட்டது.

அம்மாளாச்சியிடமே போய் என் கபிலனைப் பற்றி கேட்போம் என்று அந்த பேதை மனம் துடிக்கிறது. அம்மன் கோயிலை நோக்கி ஓடுகிறாள் தீபிகா.

கோயிலை நெருங்க நெருங்க அந்த அரளிமரம், அதைச் சூழ்ந்து நிற்பவர்கள், அவர்களது பார்வைகள் என்பவற்றைச் சந்திக்கிறாள். 'அவர்களது கண்கள் என்னைப் பார்த்துப் பரிதாபப்படுகிறதே... ஐயோ கடவுளே.... ஏன்.... ஏன்.. எனக்கு ஒன்றும் புரியவில்லையே.'

ஆனால் தீபிகா தன்னை அறியாமலே அவர்களை விலக்கிக் கொண்டு முன்னே ஓடுகிறாள்.

அங்கு.... அங்கு.... கபிலன்.... அவளது கபிலன்.... வேரற்ற மரமாக...

தீபிகா குழந்தையையும் அணைத்தபடியே மூர்ச்சையுற்றாள்.

கபிலனின் மரணச் சடங்குகள் எல்லாம் முடிந்து மூன்று நாட்கள் ஆயிற்று. யார் யாரோ வந்தார்கள் போனார்கள். தீபிகா பிரமையிலேயே இருந்தாள்.

எதை நினைப்பது. உண்மையில் தீபிகாவிற்கு அவனது அருகாமை தேவைப்பட்டது. அவனிடமே தனது மனக் கவலைகளைச் சொல்லிச் சொல்லி அழவேண்டும் போலிருந்தது.

பிள்ளையை அணைப்பதும் அழுவதுமாகவே அவள் வாழ்வில் மேலும் மூன்று நாட்கள் போய் விட்டன.

இதுதான் இந்த இரண்டு நாட்களாக அவள் தனக்குத் தானே கேட்டுக் கொண்ட கேள்வி!

**எஸ். ஜானகி**

ஒருநாள் சாப்பாடு வாங்க முடியவில்லை என்று விரக்தியில் ஒரு நிமிடத்தில் தன்னை அழித்துக் கொண்ட கபிலன், தன்னையே முழுமையாக நம்பியிருக்கும் தீபிகா, பெற்ற குழந்தைகள் வாழ்நாள் பூராவும் சாப்பாட்டிற்கு என்ன செய்வார்கள் என்று எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டான்.

காலம் முழுவதும் தன்னுடன் துணை நிற்க முடியாதவனிடம் தனது வாழ்க்கையை ஒப்படைத்து, அவனுடன் இவ்வளவு நாளும் தான் தாம்பத்தியம் நடத்தியதை எண்ணி தீபிகா வருத்தப்பட்டாள்.

கபிலனைப் போல, அவள் ஒருநாள் சாப்பாடு இல்லை என்று தன்னை அழித்துக் கொள்ளும் அளவுக்கு முட்டாளாக விரும்பவில்லை.

தன் பிள்ளைகளை அநாதைகளாக்க அவள் தயாரில்லை. வறுமையிலும் வன்மையாக இருக்கப் போகின்றாள். நாட்கூலி வேலை செய்து கஞ்சியேனும் குடித்து வாழப் புறப்பட்டுவிட்டாள் தீபிகா.

கபிலனைப் போலல்லாது, தனது பிள்ளைகளை வீரர்களாக வளர்க்கக் கங்கணங்கட்டிக்கொண்டாள்.

அதன்பின்னர் தீபிகா அழ்வில்லை. இனி அழவும் போவதில்லை. ■

***

**சிறுகதைக்குப் பின் கொஞ்சம்....**

இனப்பிரச்சனையின் கொடுமையிலும், வறுமையிலும் தங்களை அழித்துக் கொள்வது என்றால் அது கோழைத்தனம்.



படிப்பகம்

www.padippakam.com

"கொட்டடா முரசு கொட்டடா
முட்டடா பகையை முட்டடா
தட்டடா தோள் தட்டடா
வெட்டடா சிரம் வெட்டடா!"

ஆர்த்தது முரசம்
அழைத்தது போருக்கு!

தமிழரசன்
போருடை தரித்தான்!

"நில்லப்பா!-இது
வெல்ல முடியாத போரப்பா!
நீ ஏனப்பா போகிறாய்
வீணப்பா!"

சகோதரன்
தத்துவம் பேசினான்!

தமிழரசனின்
கண்கள் ஒளி வீசின!
செவியில் கேட்ட
செந்தமிழ் கவி
நெஞ்சத்தில் ஒலித்தது!

"ஓடப்பரெல்லாம்
உதையப்பராகிவிட்டால்
உதையப்பரெல்லாம்
ஓடப்பராகிடுவர்"

உரைத்தான்
உடைவாள் அணிந்தான்!

புறப்பட்டபோது
எதிர்ப்பட்டாள் இன்பா!

செங்கதிர் பட்ட
தாமரைபோல்
தன் முகம் மலர்ந்தாள்!

செவ்விதழ் உள்ளே
சிரித்தது முல்லை!

வேறொரு தருணம்
என்றால்
வீசியிருப்பான் வினா!

"பறிக்கவா?
பதிக்கவா?"
என்று கேட்டிருப்பான்!

அவளும்தான் குறும்புக்காரி;
"எதைப் பறிப்பீர்?
எதைப் பதிப்பீர்?"
எனக் கேட்டிருப்பாள்!

"பூத்திருக்கும் முல்லை
அதைப் பறிக்கவா?
பூவிதழில் முத்திரை
ஒன்றைப் பதிக்கவா?"

விடமாட்டாள் அவளும்
வீசுவாள் பதில்;

"பறித்தாள்
முல்லை மாலையாகும்!
முத்தம் பதித்தால்
பூவை இவள் மயக்கமாவாள்!
மாலை வேண்டுமா?
மயக்கம் வேண்டுமா?"

"மாலையும் வேண்டும்
மயக்கமும் வேண்டும்!
செவ்விதழ் தேனும்
சிறப்புற வேண்டும்!
கொய்யாக் கனிகள்
வசப்பட வேண்டும்!
கோல மயிலே
குலவிட வேண்டும்!
காலம் முழுதும்
களித்திட வேண்டும்!"

இன்பா முகத்தில்
இளைய முறுவல்!

"வேண்டும்! வேண்டும்
எத்தனை வேண்டும்?"

"எல்லாம் வேண்டும்
இனியவை வேண்டும்!
பூவும், கனியும்
கமுகுத் தோளும்
வாழைக் கால்களும்
பஞ்சப் பாதமும்
பிஞ்சு விரல்களும்
கொஞ்சு முகமும்
கொவ்வைக் கனியும்,
கிளி மூக்கும்
கனிதரு மேனியும்
எல்லாம் வேண்டும்
எப்போதும் வேண்டும்!"
என்பான் அவன்.

"எனக்கும் வேண்டும்
எனக்கும் வேண்டும்!"
என்றுரைப்பாள் அவளும்!

"குத்தும் மீசையும்
குறும்பு விழிகளும்,
உருண்ட தசையும்
திரண்ட மார்பும்
நெற்றியில் புரளும் முடியும்
வெற்றியில் உயரும் புருவமும்
உரம் கொண்ட தேகத்தை
திடம் கொண்டு
தாங்கும் கால்களும்,
எல்லாம் வேண்டும்
எப்போதும் வேண்டும்!"

தமிழரசன்
அவளை கைகளுக்குள்
கவர்ந்து கொள்வான்!
கைகள் பரவும்
கண்கள் ஏங்கும்!

"இப்போதே வேண்டுமா?
இங்கேயே வேண்டுமா?"
காதோரமாய்
தமிழரசன் கிசுகிசுப்பான்!



# உயிரோடு உயிராக

இலக்கிய நயம்

"ஆசைதான்
பொறுத்திரும் பிள்ளாய்
பொங்கி எழலாம்!"
தள்ளிவிட்டு ஓடுவாள்!

கண் எதிரே இப்போது
இன்பாவைக் கண்டதும்
தன் நெஞ்சுக்குள்
சிலிர்த்துப் போனான்!

"போய் வரவா-பகைப்
பேய் விரட்ட?"

கண்களால்
சம்மதித்தாள் இன்பா!

மென்மையாய் அணைத்தான்
போருடை பூண்ட மார்பில்
பூங்குயில் சாய்ந்தாள்!

முகத்தினை உயர்த்தி
அவனது உதட்டினை நாடி
இதழினால் ஒற்றினாள்!

இதழும், இதழும்
ஒட்டிக் கொள்ள
நாவுகள் இரண்டும்
நயம்தனை உணர
உயிர்கள் இடம்மாறி
உட்கார்ந்து கொண்டன!

அவள் உயிரை
வாங்கிக்கொண்டு
அவன் சென்றுவிட்டான்!

அவன் உயிரை
வைத்துக்கொண்டு
அவள் காத்திருந்தாள்!

"ஏனடி தோழி
உனக்கு பயம் இல்லையா?"

"ஏன் பயம் எனக்கு
என்னவர் வருவார்!
ஏன் என்று கேளடி
என் உயிர் அவரிடம்
எப்படி இழப்பார்?
தன் உயிர் என்றால்
போகட்டும் என்பார்
அதுதான் தோழி
என் உயிரை அனுப்பினேன்!"

தோழி வியந்தாள்;
"பிரிவு
உன்னை சுடவில்லையா?
தனிமை உனக்கு
தகிக்கவில்லையா?"

எப்படிச் சுடும்
எப்படித் தகிக்கும்
கலந்திருந்த நினைவுகளை
சுவாசித்துக் கொண்டிருக்க,
நாட்கள் கரைந்துவிடும்
அவர் வரும் நாள் வந்துவிடும்!"

என்றவளுக்கு
தும்மல் வரும் போல
நாசிக்குள் உறுத்தல்!
வருவேன் என்ற தும்மல்
வராமல் மறைந்தது!

"ஐயோ.. ஐய்யோ
ஐய்யோ.. ஐயோ"
என்றாள் இன்பா'

"ஏனடி .பதறுகிறாய்
என்னடி நடந்த போச்சு!"



"தும்மல் வரும் போல்
இருந்தது தோழி- அதுஏன்?
நினைக்க நினைத்தார்
அதுதான்!
தும்மல் வராமல் போனது
தோழி-அது ஏன்?
நினைக்க நினைத்து
நினையாமல் இருந்துவிட்டார்
அதுதான்!"

வாடிப் போனாள் இன்பா
வருவது போல வந்து
வராத தும்மலுக்கு
வள்ளுவர் எழுதிய குறள் பாரீர்.

"நினைப்பவர் போன்று நினையார்
கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்"
அதிகாரம் 121 குறள்-1203.

தருவது ராஜீகன்

## ஸ்போர்ட்ஸ்

# நூறாவது விக்கெட்

கடந்த 5 வருடங்களாக டெஸ்ட் கிரிக்கெட் விளையாடி வரும் கர்நாடக வேகப்பந்து வீச்சாளர் ஜவகர் ஸ்ரீநாத். இலங்கைக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.

28 வயதான ஸ்ரீநாத் பங்கேற்ற 30வது டெஸ்ட் போட்டி இதுவாகும். இவரது 100வது விக்கெட் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் பிரமோதய விக்கிரமசிங்கவுடையது.

இதன் மூலம் 100க்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர்கள் வரிசையில் சேர்ந்துள்ளார் ஸ்ரீநாத். 100க்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர்கள் பற்றிய விபரம் வருமாறு:

| பந்து வீச்சாளர் | விக்கெட்டுக்கள் | டெஸ்ட் |
|---|---|---|
| 1. கபில் தேவ் | 434 | 131 |
| 2. பிஷன்சிங் பேடி | 266 | 67 |
| 3. சந்திரசேகர் | 242 | 58 |
| 4. பிரசன்னா | 189 | 49 |
| 5. அனில் கும்ப்ளே | 175 | 43 |
| 6. வினுமன்கட் | 162 | 44 |
| 7. வெங்கட் ராகவன் | 156 | 57 |
| 8. ரவிசாஸ்திரி | 151 | 80 |
| 9. சுபாஷ் குப்தே | 144 | 36 |
| 10. திலிப் தோஷி | 114 | 33 |
| 11. கர்சன் காவ்ரி | 109 | 39 |
| 12. ஷிவ்லால் யாதவ் | 102 | 35 |



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பிரிஸ்பேர்ன் மைதானத்தில் 1992ல் தனது டெஸ்ட் வாழ்க்கையைத் தொடங்கினார் ஸ்ரீநாத். ஓர் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களுக்கு மேல், இரண்டு முறை எடுத்துள்ளார். இவரது சிறப்பான பந்துவீச்சு 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள். தென் ஆபிரிக்காவுக்கு எதிராக இதை 1996ல் அகமதாபாத்தில் நிகழ்த்தினார்.

இந்தியாவில் 100 விக்கெட் சாதனையைச் செய்த மூன்றாவது வேகப்பந்து வீச்சாளர். கபில்தேவும், காவ்ரியும் முந்தைய சாதனையாளர்கள்.

உலகளவில் 100 விக்கெட் சாதனையைச் செய்யும் 109வது பந்துவீச்சாளர் ஸ்ரீநாத்.

# இது நாலாவது முறை

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையே மும்பையில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் 93 ஓட்டங்களை எடுத்து சதம் அடிக்காமல் ஆட்டமிழந்தார் ராகுல் ட்ராவிட்.

19 டெஸ்ட் போட்டிகளில் 29 இன்னிங்ஸ்களில் ட்ராவிட் 90 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து சதத்தை அடிக்காமல் ஆட்டமிழந்தது இத்துடன் 4வது முறை.

இதற்கு முன் இதே போன்று அஜித் வடேகர் ( திலிப் வெங்சர்கார் (116 டெஸ்ட்கள்) ஆகியோர்



4 முறை 90 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து சதத்தை எட்ட முடியாது ஆட்டமிழந்தவர்கள். இந்த வரிசையில் இப்போது சேர்ந்துள்ளார் ராகுல் ட்ராவிட்.

இதே சமயம் முன்னாள் 'ரன் குவிக்கும் இயந்திரம்' சுனில் கவாஸ்கர் (125 டெஸ்ட்கள்) 5 முறை 90 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து சதத்.த அடிக்காமல் ஆட்டமிழந்து சாதனை புரிந்துள்ள இந்திய வீரர் ஆவார். இவரது சாதனையை எட்ட ட்ராவிட் இன்னும் ஒரு போட்டியில் 90 ஓட்டங்களுக்கு மேல் எடுத்து சதத்தை அடிக்காமல் ஆட்டமிழக்க வேண்டும்.

# சிந்தியா பதில்கள்

* இந்தியாவில் அடுத்து ஆட்சி அமைக்கப் போவது யார்?

கே. மகரூ.:.ப், புத்தளம்.

எனக்கென்னவோ, எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறும்போலத் தெரியவில்லை. மறுபடி கூட்டரசாங்கம்தான்!

* இடத்துக்கு தகுந்தபடி பேசுபவர்களை என்ன செய்யலாம்?

திருமதி மல்லிகா வேணுதாஸ், திருக்கோணமலை.

சில சமயங்களில் இடம் அறிந்துதான் பேசவேண்டும். இல்லாவிட்டால் ஏடாகூடமாகிவிடும்.

ஒரு ஹொட்டல் அறையில் புதுமணத் தம்பதிகள் 'தேன்நிலவு' கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

கணவன் குஷியில், மனைவியைப் பார்த்து பெரும் சத்தமாக, "ஆஹா... என்ன அழகு. இந்த அழகை அப்படியே ஒரு சிற்பியை விட்டு சிலையாக வடிக்கலாம் போலிருக்கிறது" என்றான்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கணவன் எழுந்து போய் கதவைத் திறந்தான். இரண்டு இளைஞர்கள் நின்றனர்.

"யார் நீங்கள்?" என்று கேட்டான் கணவன்.

இளைஞர்கள் சொன்னபதில் கணவனை தூக்கிவாரிப்போட்டது. அப்படி என்ன சொன்னார்கள் என்கிறீர்களா?

"நாங்கள் பக்கத்து அறையில் இருக்கும் சிற்பிகள்" என்றனர்.

* உள்ளூராட்சித் தேர்தல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் காரணம் யாது?

சி. செந்தூரன், கொழும்பு-06.

யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றிய நாள் முதலாய் மாலையானதும் ஊரடங்குச் சட்டம்தான்! தமிழ்க் கட்சிகள் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையோடு ஊரடங்கு ஆட்சிக்கு வெள்ளையடிக்க நாள் குறித்திருக்கிறது அரசாங்கம்!

* சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பி. பாலசுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.

அரசாங்கத்துக்கு மட்டுமல்ல தமிழ்க் கட்சிகளுக்கும் பிடிக்காத அறிக்கை அது என்பேன்! காணாமல் போனோரை தேடித் தருமாறு தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்திடம் மனுக்கொடுப்பதும், ஆர்ப்பாட்டம் நடத்துவதுமாக பெயர் எடுத்துக் கொண்டிருக்கையில், 'ஆட்களே இல்லையாம், பின்னர் யாரைக் கண்டுபிடிக்க, யாரிடம் கேட்கிறீர்கள்?' என்று மக்கள் கேட்டுத் தொலைத்து விடுவார்களோ என்று பயந்து கொண்டிருக்கின்றன தமிழ்க் கட்சிகள்!

* மனித உரிமை பற்றியும், காணாமல் போனோர் பற்றியும் பேசும் கட்சிகள், முதலில் தமக்கு அது பற்றிப் பேசும் தகுதி இருக்கிறதா என்று சிந்திக்கவேண்டும் என்கிறாரே சுரேஸ் பிரேமச்சந்திரன்?

ஜி. யோகராசா, கொழும்பு-11.

புளொட்டை பெயர் சொல்லாமல் அடித்திருக்கிறார்! அது இருக்க: ரூபவாஹினிப் பேட்டியில் யாழ் குடாநாட்டில் கைதாகிப் பலியானவர்கள் பற்றிய கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், சுரேஸ் பிரேமச்சந்திரன் சுற்றிவளைத்ததும் தமக்கும் அந்தத் தகுதி இல்லையென்பதால்தானோ?!

* எம்.ரி.வி.யில் 'பம்பாய்' இந்திப் படம் காண்பித்தார்களே, பார்த்தீர்களா?

செல்வி கி. ஷர்மிளா, தெகிவளை.

பார்த்தேன்! தமிழிலும், இந்தியிலும் ஒரே நேரத்தில் எடுக்கப்பட்ட படம்தானே, மாற்றம் ஏதுமில்லை! நிற்க, "பம்பாய் படத்தை இலங்கையில் திரையிட விடமாட்டோம்" என்று முழங்கிய அரசியல்வாதிகள் என்ன ஆனார்கள்? எல்லாம் அரசியல்தான்!

* நடைபெறுவது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் என்று பாராளுமன்றத்தில் கூறி உள்ளாரே இரா. சம்பந்தன்?

மா. கார்த்திகேயன், அன்புவழிபுரம்.

அடடே... அத்தனை தெளிவாக, திட்டவட்டமாக தெரிந்துகொண்டுதான் அரசுக்கு முட்டுக் கொடுக்கிறார்களா?!



'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவா-மீனா

* இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணியின் ஆட்டம் எப்படி?

கு. இஸ்மாயில், வத்தளை.

தள்ளாட்டம்! இலங்கை அணிக்குள் சோர்வு தலைதூக்கியிருப்பது போலத் தோன்றுகிறது! நீடித்தால் ஈடாட்டம்தான்!

* சன் ரி.வியில் விசுவின் அரட்டை அரங்கம் பார்ப்பது உண்டா?

மு. கௌரி, கொழும்பு-11.

உண்டு! பெண்களை மட்டம் தட்டும் ஆசாமிதான் விசு! அதனையும் மீறி அரட்டை அரங்கத்தில் பேசும் பெண்கள் பலர் வெளுத்து வாங்குகிறார்கள்! கடந்தவாரம் 'எய்ட்ஸ்' கொடுமை பற்றி துணிச்சலாகப் பேசிய பெண்கள் சபாஷ் போடச் செய்துவிட்டனர்!

* ஒருவரை ஒருவர் கவிழ்க்க நினைக்கும் அரசியல்வாதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எம். சந்தீஸ், ஹட்டன்.

பெஞ்சமின் டிஸ்ரேலி, வில்லியம் கிளேட்ஸ்டன் என்ற இரண்டுபேரும் இங்கிலாந்தின் பெரிய அரசியல் தலைவர்கள்.

இருவருக்கும் இடையே பலத்த போட்டி, பொறாமை.

பெஞ்சமின் டிஸ்ரேலியிடம் ஒரு நண்பர் பின்வரும் கேள்வியைக் கேட்டார்:

"துரதிர்ஷ்டம், துயரம் இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?"

பெஞ்சமின் சற்றும் யோசிக்காமல் பதில் சொன்னார்:

"வில்லியம் கிளேட்ஸ்டன் தேம்ஸ் ஆற்றில் விழுந்துவிட்டால், அது துரதிர்ஷ்ட நிகழ்ச்சி! அவரை யாராவது காப்பாற்றினால் அது துயரமான நிகழ்ச்சி!"

* தமிழ் நாட்டில் பாராளுமன்ற தேர்தலில் ஜெயலலிதா கட்சிக்கு வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும்?

இ. செல்வேந்திரன், இரத்தினபுரி.

சென்றமுறைபோல அல்லாமல், இம்முறை தி.மு.க.வுக்கு கடும் போட்டி இருக்கும்! காரணம், கலைஞர் ஆட்சியில் குறிப்பிட்டு சொல்லும்படியான சாதனைகள் எதுவுமில்லை! தவிர, வை.கோபாலசாமி அணியின் வாக்குகளும் சேர்ந்தால் கூட்டுத் தொகை வெற்றி வாய்ப்புக்கு இட்டுச் செல்லும் என்பது செல்வியின் கணக்கு!

* 'நாம் இருவர் நமக்கு இருவர்' என்பது படத்தின் பெயர். பிரபுதேவாவுக்கு இரு ஜோடிகள். நான் ஒருவன் எனக்கு இருவர் என்று பெயர் சூட்டியிருக்கலாமே?

எஸ். ரமணி, கண்டி.

லாம்தான்! படம் வந்தால்தான் கதை தெரியும். அதற்கு முன்னர் ஏன் பொறாமை!

* டியர் சிந்தியா! இன்றைய கிரிக்கெட் வீரர்களில் முதலிடம் யாருக்கு?

செ. இராமநாதன், பதுளை.

ஒருநாள் போட்டிகளில் சந்தேகமே இல்லாமல் சனத் ஜெயசூரியாதான்!

* விரைவில் அதிசயம் நடக்கும் என்று நிதியமைச்சர் பீரிஸ் கூறியிருக்கிறாரே?

என். கிருஷ்ணராஜா, மட்டக்களப்பு.

நம்நாட்டு வானிலை அறிக்கைமாதிரிதான் அதுவும்! பெய்யும் என்றால் பெய்யாது. பெய்யாது என்றால் பொழிந்துவிடும்! வரும் வரும் என்கிறார் அமைச்சர். ஆகவே....?! (கீறிட்ட இடத்தை நிரப்புக)

* கவுண்டமணி, மணிவண்ணன் ஒப்பிடுக?

மு. பாஸ்கரன், குருநாகல்



சிலசமயம் கத்திச் சொல்கிற நகைச்சுவை! பின்னவர் அலட்டல் இல்லாத சரக் சரக்!



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 112

# இராவணன் இறந்தான்

இராமபிரான், இலங்கை வேந்தன் வீசிய வேலை இலக்குவன் தன் மார்பிலே தாங்கி உயிர்நீத்தத் தகவலை அறிய மாட்டார், அரக்க வீரர்களின் படை பலத்தை முழுமையாக அழித்துவிட வேண்டுமென்ற துணிவுடன் தொடர்ந்து கணைகளைத் தொடுத்த வண்ணம் இருந்தார்.

இராவணன் வேலாயுதத்தை வீசியதும் விபீடணருக்குப் பதிலாக இலக்குவன் பலியானதைக் கண்டு, பெரும் ஆனந்த மடைந்தான், தன் அருமைத்தம்பி இலக்குவன் மாண்டபின் இராமபிரான் உயிருடன்



இருக்கப்போவதில்லை என்று துணிந்தான். 'இதற்கு மேல் விபீடணரைக் கொன்றும் பயனில்லை. தம்பி விபீடணன் தனித்து விட்டான். அவனால் தனித்து வாழமுடியாது. அவன் ஒன்றில் மீண்டும் என்னுடன் வந்து இணைவான், இல்லையேல் தற்கொலை செய்து கொண்டு விடுவான்!' என்ற

**இராஜகுமாரன்**

எண்ணத்துடன், இலங்கைக் கோட்டைக்குள் இராவணன் புகுந்தான்.

இலக்குவன், தனக்கு எதிராக வீசப்பட்ட வேலினைத் தன் மார்பிலே ஏந்தி வீழ்ந்ததை உணர்ந்த விபீடணர், மிகவும் வேதனைப் படலானார். 'என் உயிரைக் காப்பதற்காக இலக்குவன் தன் உயிரை மாய்க்க நேர்ந்து விட்டதே!' என்று விபரிக்க முடியாத விசனத் திலாழ்ந்தார். 'இந்நிலையில் இராமபிரானிடம் எவ்வாறு முகம் கொடுக்க முடியும்? எனது உயிரையும் மாய்த்து விடுவதே ஒரே வழியாகும்' என்று தனது உடைவாளை உருவி, தனது மார்பிலே பாய்ச்சுவதற்கு எத்தனித்தபோது ஜாம்பவன் முன்னோடி வந்து தடுத்து நிறுத்தினார். "என்ன காரியம் செய்யத் துணிந்துவிட்டீர்கள் மன்னவரே! முன்பொருமுறை ஆஞ்சநேயரின் உதவியால் இளைய பெருமாள் இழந்துவிட்ட உயிரினை மீட்கவில்லையா? ஆஞ்சநேயர் உடனடியாக வடக்கே சென்று மீண்டும் சஞ்சீவி மலையினைக் கொண்டு வந்தால் உடனடியாக இலக்குவன் மட்டுமல்லாமல், மாண்டு மடிந்த எமது வானர வீரர்களும் உயிர் பெற்று எழுந்து விடுவார்கள். ஆகவே சற்றுப் பொறுமையாக இருங்கள்! என்று கூறியவாறு ஆஞ்சநேயரைப் பார்த்தார். சோகமே உருவாக இலக்குமணரைத் தன் மடிமீது கிடத்தியிருந்த ஆஞ்சநேயரின் முகம் பிரகாசமடைந்தது. அங்கதன் ஓடிச் சென்று இலக்குவனின் உடலை தன் மடியில் தாங்க, ஆஞ்சநேயர் எழுந்து "ஸ்ரீ ராமஜெயம்" என்று உரக்க உச்சரித்த வண்ணம் விண்மீது தாவி வட திசை ஏகினார்.

## மீண்டும் சஞ்சீவிமலை

சில நாளிகைகள் கடந்து போயின. ஆஞ்சநேயர் வானில் சஞ்சீவிமலையுடன் பறந்து வருவது அனைவரின் கண்களிலும் தென்பட்டது. வெகு தொலைவில் அவர் வரும்போதே இலக்குமணரின் உடல் துடித்தது. உறக்கம் கலைந்து எழுபவர் போல் எழுந்து நின்றார், 'ஸ்ரீராம ஜெயம்' மந்திரம் வான் முட்டி மோதியது.

சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து சேர்த்ததனால் இலக்குவன் உயிர் பெற்று எழுந்து விட்ட செய்தியை இராவணனிடம் தூதர்கள் போய்த் தெரிவித்தனர். இச்செய்தி இராவணனுக்கு நம்ப முடியாததொன்றாகவே இருந்தது. சற்று நேரத்தில் போர்க் களத்தில் கேட்கத் தொடங்கிய ஜய கோஷங்கள் அவனுடைய சந்தேகத்தைத் தெளிவுபடுத்தின.

**ஈட்ட அரும் உவகை மீட்டி**
**இருந்தவன் இசைத்த மாற்றம்**
**கேட்டலும் வெகுளியோடு**
**துணுக்கமும் இழவும் கிட்டி**
**ஊட்டு அரக்கு அனைய செங்கண்**
**நெருப்பு உக உயிர்ப்பு வீங்க**
**தீட்டிய படிவம் என்னத்**
**தோன்றினன் திகைத்த நெஞ்சன்!**
*(யுத்த காண்டம்)*

பொருள்:-

*மிக்க மகிழ்ச்சியாக இருந்த இராவணன், அவனுடைய தூதர்கள் வந்து சொன்ன செய்தியைக் கேட்டதும் சினம் கொண்டெழுந்தான். ஒரு வகை அச்சமும், துன்பமும் சேர்ந்து கொண்டது, சிவந்த மெழுகினைப் போல அவனுடைய கண்கள் சிவந்து தீயைக் கக்கின. பெரியதொரு பெருமூச்சினை விட்டான். திகைப்புக்கொண்ட நெஞ்சத்தை உடையவனாய் வரைந்த ஓவியம் போலக் காணப்பட்டான்.*

## சினங்கொண்ட இராவணன்

இலக்குவன் உயிர் பெற்று எழுந்து விட்டான் என்பது மட்டுமல்லாமல், தன்னுடைய மிக்க வலிமை பொருந்திய மூலபலப் படையும் முற்றாக அழிந்தொழிந்து விட்டதைக் கேட்டதும் அவனுடைய கோபம் பன்மடங்காகியது, எஞ்சியிருக்கும் தனது அசுரப்படைகளை ஒன்று சேர்க்குமாறு பணித்தான். போர்க்களம் செல்வதற்கு ஆயத்தமானான். தன்னுடைய தேரினைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். தேருக்கு வேண்டிய பூஜைகளைச் செய்து வழிபட்டு, போர்க்கோலம் பூண்டு, தேரினில் ஏறி போர்க்களம் புகுந்தான்.

இராவணன் மீண்டும் போர்க்கோலம் பூண்டு வருவதை முன்னதாகவே அறிந்து கொண்ட விபீடணன், இராமபிரானிடம் சென்று நிலைமையை விளக்கினார். அரக்கர் படை கண்டு வானரப்படையினர் மீண்டும் அச்சத்துடன் நடுங்கினர். உடனடியாக அவர்களுடைய பயத்தைப் போக்கி, உற்சாக மூட்டுமாறு இராமபிரானை அவர் வேண்டிக் கொண்டார்.

இராவணனின் போர்க்கோலம் கண்ட தேவர்கள், 'இராவணன் இம்முறை மிகவும் மூர்க்கத்தனமாக இராமபிரானின் அணியைத் தாக்கப் போகிறான்,' என்று அஞ்சினர். சிவபிரானிடம் ஓடோடிச் சென்று நிலைமையை விளக்கி, இராமபிரானுக்கு ஓர் இரதத்தினை வழங்கி அருளுமாறு கேட்டுக் கொண்டனர். சிவபெருமான் இந்திரனை அழைத்து, உடனடியாக ஒரு தேரினைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொண்டார். மாலி என்னும் தேர்ப்பாகன் ஒப்பற்ற-மகத்தான ஒரு பெரிய தேரினைக் கொண்டு வந்து சேர்த்தான்.

## இந்திரன் அனுப்பிய இரதம்

வானுலகில் இருந்து மிகச் சிறப்பான தோர் இரதம் இறங்கி வருவதைக் கண்டு, வானர வீரர்கள் அச்சம் நீங்கியவர்களாக, மகிழ்ச்சிப் பெருக்கோடு ஆரவாரம் செய்தனர். இராமபிரான் முறைப்படி தேருக்குரிய பூஜைகளைச் செய்து முடித்தார். தம்பி இலக்குவனை அழைத்து ஆரத் தழுவினார். அதே போன்று விபீடணர் ஆஞ்சநேயர், சுக்கிரீவன், ஆகியோரையும் ஆலிங்கனம் செய்த பின்னர் தேரில் ஏறிக் கொண்டார். "ஸ்ரீராம ஜெயம்" என்ற மந்திரம் எல்லோருடைய வாய்களிலும் தவழ்ந்தது. வான்முட்ட எழுந்து எதிரொலித்த அந்த ஓசை கேட்டு, அரக்க வீரர்கள் அரண்டனர். பலர், 'இனி மேல் நாம் தப்பிப்பிழைக்க முடியாது', என்று கருதியவர்களாக போர்க்களத்தில் நின்றும் பின்வாங்கி ஓடலாயினர்.

இராமபிரான் இராவணனுடன் நேரடியாகவே பொருதுவதற்குப் புறப்பட்டார். இதைக் கண்ட இராவணன் தன் அருகில் நின்ற மகோதரன் என்னும் தளபதியை அழைத்து, "நான் இராமனுடன் போரிட்டு அவனை வதம் செய்வேன். நீ இலக்குவனை இலக்கு வைத்து போரிட்டு அவனை இராமனின் துணைக்கு வராமல் தடுப்பாயாக!" என்று ஏவினான். மகோதரன் வருவதைக் கண்ட இராமபிரான் பல கணைகளை ஒன்றாகச் சேர்த்து அவன்மீது வீசினார். மகோதரனுடைய அங்கங்கள் அனைத்தும் துண்டாடப்பட்டு வீழ்ந்ததும் அவன் இறந்தான். இதனைக் கண்ட இராவணன் அதிர்ந்து போனான். இதனைத் தொடர்ந்து இராமபிரானுக்கும், இராவணனுக்கும் நேரடியான யுத்தம் தொடங்கியது.

இராவணன் எய்த ஓர் அம்பானது இராமபிரான் ஏறிவந்த தேரின் மீது பறந்து கொண்டிருந்த இடி அடையாளமிடப்பட்ட கொடியைத் தாக்கி வீழ்த்தியது. மற்றுமொரு கணை தேர்ச் சாரதியான மாலியின் மார்பைத் துளைத்தது.

இராமபிரானும் இராவணனும் தொடர்ந்து வீசிய கணைகளால் இருதரப்புப் படையினரும் தாக்குண்டு தரையில் வீழ்ந்தனர். தன்னைப் போன்ற ஒரு வீரன் மூவுலகத்திலும் கிடையாது என்று மமதை கொண்டிருந்த இராவணன், இராமபிரானது போர் ஆற்றலைக் கண்டு வியந்தான். அவனும் சளைக்காமல் தெய்வீகக் கணைகளைப் புயல் போல் வீசினான்.

சாகா வரம் பெற்ற இராவணன், அவ்வீரத்தைப் பெற்றபோது, தேவர்களாலும் மூவர்களாலும் முனிவர்களாலும் மற்றும் ஏனையோர்களாலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது, என்று கேட்டுக் கொண்டான். ஆனால் மனிதர்களாய்ப் பிறந்த எவராலும் அழிவு ஏற்படக்கூடாது, என்ற வரத்தினைப் பெற ஏனோ மறந்து விட்டான். இதுவே அவனுடைய இறுதியை நிர்ணயிக்கும் அம்சமாகப் போய்விட்டது. இராமபிரான் திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டாலும், அவர் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர் ஆவார். தான்விட்ட தவறினை இராவணனால் அப்போது உணர முடியவில்லை. இதனால்தான் எவராலும் தன்னை அழிக்க முடியாது என்று ஆணவம் கொண்டவனாகப் போரிட்டான். வலிமை பொருந்திய தெய்வீகக் கணைகளை ஒன்றன் பின் ஒன்றாக இராமபிரானை நோக்கி ஏவிய வண்ணம் இருந்தான். அவை எதுவுமே இராமபிரானை அணுகமுடியவில்லை. பல கணைகள் இராமபிரான் அருகில் பாய்ந்து வந்து, அவருடைய தாளினைத் தொட்டு வணங்கி பின் மறைந்துவிட்டன.

வேறு கணைகள் விரைந்து வரும்போது, அவற்றை முறியடிக்கும் சக்தியுடைய மாற்றுக் கணைகளை இராமபிரான் வீசி, அவற்றைச் செயலிழக்கச் செய்தார்.

இராமபிரான் தக்க மந்திரங்களை மனத்தில் உச்சாடனம் செய்து ஒரு கணையை ஏவினார். அது இராவணனின் தலை ஒன்றினை அவனுடைய உடலில் இருந்து பெயர்த்து வெகு தொலைவில் வீசியது. ஆனால் அடுத்த கணமே புதியதொரு தலை முளைத்துக் கொண்டது. இவ்வாறு பலதடவைகள் தலைகள் கொய்யப்பட்டும் புதிய புதிய தலைகள் முளைத்துக் கொண்டிருந்தன. இதனால் கடும் கோபம் உற்ற இராமபிரான் பல்லாயிரக்கணக்கான அம்புகளை எய்து, இராவணன் உடல் அனைத்தும் பாய்வதற்கேற்றபடி ஏவினார். இராவணன் உடலெங்கும் குருதி கொட்ட, பெருமலை சரிந்தது போல் வீழ்ந்தான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி : 110**
**சரியானவிடை:- மகோதரன்**

1. நா. வினோஷா, 62A, ஜூட் பிளேஸ், தலடுவ, நீர்கொழும்பு.
2. டபிள்யு. மேரி டிலிசியா, காளிகோயில் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
3. சி. விஜேந்தி, 50, லவந்தர் லேன், திருகோணமலை.
4. செல்வி எஸ். சியாமினி, 148, கடை வீதி, கொட்டகலை.
5. கா. சுபாஷ், திருவள்ளுவர் புரம், தரவளை, டிக்கோயா.

**போட்டி இல. 112** கேள்வி:- இராமபிரானின் இரதத்தினை யார் கொடுத்தார்?

டிசம்பர் 20 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.112, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# மனம் திறந்த பேச்சுவார்த்தை

**காதிலை பூ கந்தசாமி**

**அம்மையார்:** என்ன மிஸ்டர் அனில், எப்படி இருக்கிறீர்? உம்மைப் பார்க்கும் போது எனக்கு பொறாமையாக இருக்கிறது!

**அனில்:** பொறாமையா? உங்களுக்காக? ஹா.ஹா.ஹா. ஆணைப் பெண்ணாக்க முடியாது. பெண்ணை ஆணாக்க முடியாது. அது தவிர வேறு என்னதான் உங்களால் செய்ய முடியாது, எல்லா அதிகாரமும் உங்களிடம்தானே! இந்துக்களின் பாஷையில் சொன்னால் சர்வம் சக்தி மயம்!

**அம்மையார்:** அக்கரைக்கு இக்கரை பச்சையாகத்தான் தெரியும்.

**அனில்:** எங்களுக்கு கரை மட்டுமல்ல கடலும் பச்சையாகத்தான் தெரிகிறது!

**அம்மையார்:** பச்சைக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால் அப்படித்தான் தெரியும்!

**அனில்:** நீங்கள் மட்டும் என்னவாம், நீலக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு தானே பார்க்கிறீர்கள்.

**அம்மையார்:** அப்படிப் பார்த்தால்கூட உமது சட்டை பச்சையாகத்தானே தெரிகிறது!

**அனில்:** நம் தரப்பிடம் அந்தளவுக்கு விழிப்பாக இருக்கிறீர்கள் என்று தெரிகிறது.

**அம்மையார்:** அப்படி இருந்ததால்தானே, எம் மத்தியில் இருந்த உங்கள் ஆள் ஒருத்தரை, அமைச்சர் பதவியில் இருந்து தூக்கினேன் தெரியுமா?

**அனில்:** தெரியாமல் போகுமா? பாவம் அந்த அம்மணி.

**அம்மையார்:** கொடுத்த பொறுப்பை தப்பாக நினைத்துவிட்டார் அந்த மரியாதைக்குரிய அம்மணி. நான் என்ன செய்வது?

**அனில்:** புரியவில்லையே?

**அம்மையார்:** அவருக்கு கொடுத்திருந்தது போக்குவரத்துப் பொறுப்பு! எங்கள் பக்கத்தில் இருந்து உங்கள் பக்கத்துக்கும், உங்கள் பக்கத்தில் இருந்து எங்கள் பக்கத்திற்கும் போக்குவரத்து நடத்தும் பொறுப்பாக நினைத்துவிட்டார்.

**அனில்:** அதெப்படி உங்களுக்கு தெரிந்தது.

**அம்மையார்:** தெரிந்தது, தெரியாதது, அறிந்தது, அறியாதது, புரிந்தது புரியாதது... ஹாஹாஹாஹா

**அனில்:** தீர்வுப் பொதிபோல புதிராக இருக்கிறது உங்கள் பேச்சு.

**அம்மையார்:** அப்படியே இருக்கட்டும்! உமக்கும் கட்சிக்குள் எதிர்ப்பு இருப்பதாக அறிந்தேன் உண்மையா?

**அனில்:** என்னிடம் அதிகாரம் இல்லையல்லவா, ஆளாளுக்கு கருத்துச் சுதந்திரத்தை கையில் எடுத்துக் கொள்கிறார்கள்!

**அம்மையார்:** அதிகாரம் இருந்தால் மட்டும் உமக்கு அடங்கி நடப்பார்களாக்கும்.

**அனில்:** சந்தேகம் இருந்தால் உங்கள் அதிகாரத்தை என்னிடம் தந்து பாருங்களேன்! உங்கள் அணிக்குள்ளும் ஆளாளுக்கு கிளம்பி உங்கள்மேல் சொல் எறிவார்கள்!

**அம்மையார்:** சரியாகச் சொன்னீர் மிஸ்டர் அனில். அதனால்தான் இந்த அதிகாரத்தை இறக்கிவைக்க என்னால் முடியாது இருக்கிறது.

**அனில்:** இறக்கிவைக்கத் தயார் என்றுதானே சட்டத்தை மாற்ற முன்வந்திருக்கிறீர்கள்?

**அம்மையார்:** என்ன செய்வது, இந்த நாற்காலியின் மகிமை தெரியாமல் இதை தகர்த்தெறிவதாக மக்களுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டேனே!

**அனில்:** என்ன, இத்தனை அலட்சியமாக சொல்கிறீர்கள்? கவலையே இல்லையா?

**அம்மையார்:** கவலையேபடவேண்டாம், பிரபாகரன் எங்களை கைவிடமாட்டார்!

**அனில்:** என்ன பிரபாகரனா, அவர் எப்படி இதிலே வருகிறார்? இரகசியப் பேச்சு நடக்கத் தொடங்கிவிட்டதா? உண்மையா இது? நான் இதனை வன்மையாகவும், உண்மையாகவும் கண்டிக்கிறேன்! யாரங்கே, யாராவது பத்திரிகையாளர்கள் இருந்தால் வரச்சொல்லுங்கள்! மறைக்கப்பட்ட உண்மையை புட்டுப்புட்டு வைக்காவிட்டால் என் மண்டையே வெடித்துவிடும்! (நிலையாக நிற்காமல் ஓடித்திரிகிறார்)

**அம்மையார்:** என்ன மிஸ்டர் அனில் நீங்கள் தானே பேசவும் சொன்னீர்கள்? இப்போது பேச்சு நடப்பதாக நினைத்து மூச்சு முட்டக் கண்டித்துப் பேசுகிறீர்களே?

**அனில்:** அப்படி நடக்காது என்ற நம்பிக்கையில்தானே சொன்னோம். ஐயோ பிரபாகரன் என்னை ஏமாற்றிவிட்டாரே!

**அம்மையார்:** என்ன, பிரபாகரன் உங்களை ஏமாற்றி விட்டாரா? அப்படியானால் உங்களுக்கும் பிரபாகரனுக்கும் இரகசியப் பேச்சு நடந்துவிட்டதா? ஓ...காட்! ஓ....கோட்! யாரங்கே, உடனே சுடச்சுட ஒரு விசாரணைக் கமிஷன் போடுங்கள்!

(அமைச்சர் ஒருவர் ஓடிவருகிறார்)

**அமை:** அழைத்தீர்களா?

**அம்மையார்:** காதில் விழுந்துதானே வந்துள்ளீர், பின்னர் என்ன கேள்வி? அமைச்சரே, மிஸ்டர் அனிலுக்கும் பிரபாகரனுக்கும் இடையே இரகசியப்பேச்சு நடந்தது உமது செவிக்கு ஏன் எட்டாமல் போனது?

**அமை:** மன்னிக்க வேண்டும் அம்மா! நடந்தது இரகசியப் பேச்சு என்கிறீர்கள். அது எப்படி என் செவியில் விழும்?

**அம்மையார்:** விளக்கம் தேவையில்லை! இந்த இரகசியப் பேச்சுப் பற்றி உமது அபிப்பிராயம்?

**அமை:** பிரபாகரன் என்னை ஏமாற்றிவிட்டார்.

**அனில்:** என்ன உம்மையுமா?

**அம்மையார்:** அமைச்சரே என்ன சொல்கிறீர்?

**அனில்:** ஆஹா....ஆஹா.. அருமையான செய்தி. அமைச்சருக்கு பிரபாகரனுடன் தொடர்பு! இதன் மர்மம் என்ன? இரகசியப் பேச்சு ஆரம்பம்! ஈழத்தை கொடுக்க அரசு தயார்! கொட்டை எழுத்தில் செய்தி போடலாம்!

அம்மையார் அவர்களே ஒரு விண்ணப்பம்!

**அம்மையார்:** என்ன விண்ணப்பம்?

**அனில்:** தேங்காய் விலையைப் பார்த்துக் குறைக்க முடியுமா?

**அம்மையார்:** ஏன் பிரபாகரனுக்கு தேங்காய் அனுப்ப போகிறீரா?

**அனில்:** நாடு போகும் போக்கைப் பார்த்தால் பிரபாகரன்தான் தேங்காய் அனுப்பி வைப்பார் போல் இருக்கிறது.

**அம்மையார்:** அனுப்பட்டும்! தேங்காய், மாங்காய், வெங்காயம், மிளகாய் மற்றும் புகையிலை எதை வேண்டுமானாலும் அனுப்பட்டும். குண்டுகளை மட்டும் அனுப்பாவிட்டால் போதும்!

**அமை:** ஆமாம்! வேண்டுமானால், அவர்களுக்கு தேவையான குண்டுகளை நாங்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கலாம்.

**அனில்:** என்ன, அப்படியும் நடக்கிறதா? எச்சரிக்கிறேன்!

**அம்மையார்:** என்னவென்று?

**அனில்:** நாம் ஆட்சிக்கு வந்தால் இதனை விசாரிக்க ஒரு கமிஷன் போடவேண்டி வரும் என்று!

**அம்மையார்:** பொறுங்கள் மிஸ்டர் அனில். நாங்கள் எதையோ தப்பாகப் புரிந்து கொண்டு, தப்பாக கணக்குப்போட்டு, தப்பாக சண்டை போடுகிறோம்! பிரபாகரனுக்கும் உங்களுக்கும் உண்மையாக உறவு இருக்கிறதா?



**அமை:** கடவுளே அது உண்மைதானா? ஏற்கனவே தமிழர்களை பிடித்து விசாரிக்கவே நேரம் போதவில்லை. இனிமேல் உங்கள் கட்சி ஆட்களையும் பிடித்து அடைத்துவைக்க இடத்திற்கு எங்கே போவது?

**அனில்:** நீங்கள் தப்பான கண்ணோட்டத்தில் பேசுகிறீர்கள்?

**அம்மையார்:** பிரபாகரன் ஏமாற்றிவிட்டார் என்று நீர்தானே ஓலமிட்டீர்?

**அனில்:** இரகசியப் பேச்சுக்குப் பிரபாகரன் ஒருநாளும் வரமாட்டார். போரில் பதிலடி தராமல் அவர் பேசவும் வரமாட்டார் என்று உறுதியாக நம்பினேன். அதுதான் ஏமாற்றிவிட்டார் என்று கூறினேன்.

**அம்மையார்:** அப்படியா சங்கதி! பிரபாகரன் பின்வாங்கப் போவதில்லை! போரும் ஓயப்போவதில்லை! ஆதலினால் போரை நடத்திமுடிக்க அதிகாரம் கையில் அவசியம் என்று சொல்லிக் கொண்டே இருக்கலாம்! அதைத்தான் நானும் சொன்னேன்!

**அமை:** நானும் அதைத்தான் சொன்னேன், எதிர்க்கட்சிக்காரர்களை மிஸ்டர் பிரபாகரன் நம்பப்போவதில்லை! எந்த அரசியல்வாதியையும் அவர் நம்புவதும் இல்லை! மட்டைகள் வேறாக இருந்தாலும் ஊறிய குட்டை ஒன்றுதான் என்பது பிரபாகரனுக்கா தெரியாது?

ஆகவே எதிர்க்கட்சியுடன் உறவு மலராது என நம்பியிருந்தேன். அது பொய்யாகி விட்டதோ என்ற நினைப்பில்தான், பிரபாகரன் ஏமாற்றிவிட்டார் என்று கூறினேன். ஹி ஹி ஹி.

**அம்மையார்:** எனக்கொரு சந்தேகம் மிஸ்டர் அனில்.

**அனில்:** என்ன சந்தேகம்?

**அம்மையார்:** சர்வ அதிகாரம் இருந்தும், சகல பலம் இருந்தும், நம் அரசியல்கூட பிரபாகரனைத்தானே சுற்றிவருகிறது! நாட்டை இப்போது ஆள்வது யார்? நானா? பிரபாகரனா?

**அமை:** அந்தச் சந்தேகம் உங்களுக்கு மட்டும் தானா?

**அம்மையார்:** (முறைத்தபடி) என்ன சொன்னீர்?

(அமைச்சர் தலைதெறிக்க ஓடுகிறார்.)



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# இன்னொரு டயானா






ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS 323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


மிஸ் யுனிவர்ஸ், மிஸ் வேல்ட் என்று இரண்டு அழகுப் போட்டிகள் பெரியளவில் நடந்து வருகின்றன.

இரண்டு போட்டிகளிலும் இந்திய அழகிகள் மகுடம் சூட்டிக் கொண்டது பழைய கதை. சுஷ்மிதா சென், ஐஸ்வர்யாராய் இருவரும் அழகிப் பட்டத்தை மூலதனமாகப் போட்டு சினிமாவில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது மூன்றாவது தடவையாக இந்தியாவுக்கு அதிஷ்டம் அடித்துள்ளது. மிஸ் வேல்ட் போட்டியில் இந்திய அழகி டயானா முடி சூட்டியுள்ளார்.

"மறைந்த டயானாமீதுள்ள அபிமானத்தால் இந்த டயானாவுக்கு அதிக புள்ளிகளை அள்ளிப்போட்டுவிட்டார்கள் நடுவர்கள்" என்றும் கிண்டல் செய்யப்பட்டது.

ஆனால் இப்போது விவகாரம் சூடுபிடித்துள்ளது. மிஸ் வேல்ட் போட்டி நடைபெற்றது செசல்ஸ் நாட்டில். போட்டிக்கு நடுவராக இருந்தவர்களில் ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவர். அதனால் என்ன என்கிறீர்களா?

டயானா மொடல் அழகியாக பணியாற்றுவது அவரது 'டொல்பின் குறூப்' என்ற நிறுவனத்தில்தான்! போட்டியின் இன்னொரு நடுவர் முன்னாள் செசல்ஸ் அதிபர். அவருக்கும் டொல்பின் குறூப்புக்கும் இடையே உறவு உண்டாம். ஆக, பணமும், வேறு சில பிரத்தியேகமான சந்தோசப்படுத்தல்களும்தான் டயானா அழகியாகக் காரணம் என்று சர்ச்சை கிளம்பியுள்ளது.

என்ன சர்ச்சை கிளம்பினாலும் அடுத்த ஒரு வருட காலத்திற்கு டயானாவின் முடி இறங்கவே இறங்காது. அதன்பின்னர் நடிகையாகி நாட்டைக் கலக்கலாம்.

# கலைக் கப்பல்



பசுபிக் சமுத்திரத்தின் மத்தியில் இருக்கும் தீவின் பெயர் ரஹிரி. இதன் மேற்கே ஃபிஜித்தீவு இருக்கிறது.

ரஹிரித்தீவு மக்கள் கலாரசனை கொண்டவர்கள். தன்னம்பிக்கை உள்ளவர்கள். (பொருளாதாரத்தடை மற்றும் பல துயர்களை தாங்கியும் நம்பிக்கை இழக்காத வடக்கு-கிழக்கு மக்களைப் போல)

ரஹிரித் தீவுக்கு வாழைப்பழம் கூட ஃபிஜித்தீவில் இருந்துதான் தருவிக்கப்படுகிறது.

ரஹிரித்தீவு மக்கள் தங்கள் நேரத்தை விரயமாக்க மாட்டார்கள். உழைப்பு, உழைப்பு, உழைப்பு! அதுமட்டும் அல்ல தங்கள் வீடுகள் முதல் பயணம் செய்யும் கப்பல் வரை எங்கும் இரசனையுடன் சித்திர வேலைப்பாடுகள் செய்து வைத்திருப்பார்கள். அந்தக் கப்பலைப் பாருங்கள். எத்தனை சித்திரச் செதுக்கல்கள்! வாழ்வது, வாழ்வை இரசையுடன் அனுபவிப்பது அதுதான் மனிதனுக்கு அழகு!

# காதல் உரசல்




முத்து முத்தாக முத்தம் பரிமாற' மனிதரால் மட்டும்தான் முடியுமா என்ன? கொத்துக் கொத்தாக பரிமாறி அன்பைச் சொத்தாக வைத்திருக்கும் கடற்பறவை ஜோடியைப் பாருங்கள். என்னவொரு அன்னியோன்யம்!

இந்தக் கடற்பறவைகளுக்கு ஆல்பட்ராஸ் என்று பெயர். இவற்றில் இன்னொரு ரகமும் உண்டு. அதன் பெயர் கேனட்ஸ். ஆல்பட்ராஸ் பறவைகளின் ஆயுட்காலத்தில் பெரும்பகுதி வானில் பறப்பதிலேயே கழிந்துவிடுகின்றன. உணவுக்காக அவ்வப்போது கடலில் தரிப்பது உண்டு. (அதாவது எரிபொருள் நிரப்ப விமானம் தரையிறங்குவது போல) மலைப்பாங்கான இடத்தில் கூடுகள் கட்டுகின்றன. இவற்றின் குஞ்சுகள் மூன்றாவது மாதத்திலேயே நீச்சல் கற்றுக்கொள்கின்றன. நீச்சல் மூலம் சிறகுகள் பலமடைவதால் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக வானில் பறக்க முடிகிறது.

'கேனட்ஸ்' ரக கடற்பறவைகள் 91 அடிவரை கடலுக்குள் நீந்திச் சென்று மீன்களை லபக்கென்று கவ்விக்கொள்கின்றன.

# கோலம்

தமிழ்க் கட்சிகள் இவரைக் கண்டால் வம்பு!



சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம். இப்படி வசதியான உடல் கிடைத்தால்!

பச்சை குத்துதல் என்று அழைக்கப்படும் இந்த இரசனை உலகெங்கும் பரவி வருகிறது. காதலியின் பெயரை மட்டுமல்ல, முகத்தையும் உடம்பில் பச்சை குத்திக் கொள்கிறார்கள். அடிக்கடி பார்த்துக் கொள்ள உபயோகப்படும்.

எல்லாம் சரி, தமிழ்க் கட்சிகள் இதனைப் பார்த்தால் வம்பு. சுவர் இல்லாமல் சித்திரம் வரையலாம் என்று நம்பிக்கை ஊட்ட இதனை உதாரணம் காட்டிவிடப் போகிறார்கள்.

சுவர் இல்லாமல் சித்திரம் வரையும் நம்பிக்கையில்தானே பாரம்பரிய நிலங்களை கோதி வெட்டி எடுக்கும் திட்டங்களுக்கு வாயளவில் மட்டும் சிலர் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். வேறு சிலர் தலையும் ஆட்டுகிறார்கள்.

பிற்குறிப்பாக இன்னுமொரு சுவையான சங்கதி: தமது கட்சியின் இரட்டை இலைச் சின்னத்தை தொண்டர்கள் கையில் பச்சை குத்திக் கொள்ளச் சொன்னார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின்னர் கட்சிமாற நினைத்த பலர் பச்சை குத்தியது முட்டாள்தனம் என நினைத்து வருந்தியதும் உண்டு.

காதலிகளை மாற்றிக் கொள்ளும் காதலர்கள் நிலையும், முன்னர் உணர்ச்சிவசப்பட்டு குத்திய பச்சைகளால் சங்கடமானதுண்டாம்.

# ஆட்டம் பாதி ஆடை பாதி நளினம்



மேரி பியர்ஸ்- ஃபிரான்ஸ் நாட்டின் வீராங்கனை. டென்னிஸ் இரசிகர்களின் மனதை சுண்டியிழுக்கும் டென்னிஸ் தேவதை.

டென்னிஸ் போட்டிகளில் விதம் விதமான கவர்ச்சி உடைகளில் புகுந்து தூள் கிளப்புகிறார். இதனால் மேரி பியர்ஸ் பங்கு கொள்ளும் போட்டி என்றாலே இரசிகர் பட்டாளம் மைதானத்தில் திரள்கிறது.

தன் பலம் என்ன வென்று மேரி பியர்ஸ் நன்கு அறிந்து வைத்திருக்கிறார். அதனால் கவர்ச்சிக்கே முதலிடம் கொடுக்கிறார். ஆனாலும் காரியத்திலும் கண்தான். பல வெற்றிகளை குவித்து, பல கோடிகளை சம்பாதித்துள்ளார்.

சமீபத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் எதுவும் கைக்கு எட்டவில்லை. அதனால் என்ன, இரசிகர்களின் கண்ணுக்கு எட்டும் கவர்ச்சி இருக்கப் பயமேன்?

ஸ்டெபி கிராப் போன்ற முன்னணி டென்னிஸ் வீராங்கனைகளைவிட, மேரி பியர்ஸுக்குத்தான் ஆண் இரசிகர்கள் அதிகம் என்று புள்ளி விபரங்கள் சத்தியம் செய்கின்றன.

ஆட்டம் பாதி, ஆடை பாதி, மேரி பியர்ஸின் வெற்றியின் இரகசியம் அதுதான்!

# 1 வது பிறந்த நாள் வாழ்த்து



கினின்ராஜ்
11.12.1997

யாழ் பலாலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இலண்டனில் வசிப்பவர்களுமான பி. ராசா- கில்டா தம்பதியினரின் செல்வப் புதல்வன் கினின்ராஜ் 11.12.97 அன்று தனது 1வது பிறந்தநாளை இலண்டனில் உள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணன் ஜீவன்ராஜ், அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அப்பையா, வின்டன், வெலின்டன் மாமாமார், யசிந்தா, ஜெனிற்றா, அன்ரிமார், இந்தாவி யோகராசா சந்திரன் பெரியப்பா குடும்பத்தினர், சுவிஸ் செல்வம் சித்தப்பா குடும்பத்தினர், சுவிஸ் மன்னன் சித்தப்பா, இலண்டன் பவுண் சித்தப்பா, துரை, கமல், சித்தப்பாமார், தங்கராணி, தங்கக்கிளி, தங்கம் மாமிமார் குடும்பத்தினர், இலண்டன் கருணா தொட்டப்பா, தங்கா தொட்டம்மா, இலண்டன் நவம் சறோ குடும்பத்தினர், இலண்டன் யேசமணிமரியதாஸ், லில்லி, கிளி, துரை, யோகன், ராசா, குமார், ரவி, ராஜன் தவம்பாஸ்கால் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர் ஆகியோர் சீரும் சிறப்புடன் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: பி. ராசா (அப்பா)



இப்பத்திரிகை கொழும்பு ... 29, வெல்லபார, ... டிசம்பர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்